Registered as a Newspaper
பக்கம் -20 விலை 12/=

# தமிழ் அலை

வாரமலர் TAMILALAI

அலை - 01 சனிக்கிழமை, 27.09.2003 ஓசை -26



## வலிமையடைந்து வரும் உறவு



## எமது நிலமே எமக்கு வேண்டும்

தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

வாரமலர் தமிழ்அலை Tamilalai
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே,
தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com.
27.09.2003

## எங்கள் நிலம் எமக்கு வேண்டும்

"எங்கள் நிலம் எமக்கு வேண்டும்", "எங்கள் நிலமே எமக்கு வேண்டும்" பல்லாயிரக் கணக்கான தமிழினத்தின் உணர்வுகள் வவுனியாவில் பொங்கி எழுந்துள்ளது.சமாதானப் பேச்சுக்கள் தேக்க நிலையை அடைந்திருக்கும் இக்கால கட்டத்தில் தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாத சக்திகள் சமாதானத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து வரும் ஒரு அசாதாரண சூழ்நிலையில் தமிழினம் தம்மினத்தின் நிலவுரிமையை, தேசப்பற்றை, தனித்துவத்தை, சமாதானத்தை மீள வலியுறுத்தியுள்ளது. ஒன்றல்ல இரண்டல்ல ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அணிஅணியாய். அலை அலையாய்க் குவிந்து தமிழினத்தின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்துள்ளனர். அதியுயர் பாதுகாப்புவலயம் இன்று தமிழர் தாயக மண்ணை ஆக்கிரமித்திருக்கும் ஒரு சூனியப்பிரதேசம்.

தமிழ் இனத்தின் குடிமனைகள், கோயில்கள் பாடசாலைகள் இவை எல்லாம் முடக்கப்பட்டுச் சிங்களப் படைகளின் பரந்த விரிந்த படைமுகாம்களாகக் காட்சி தருகின்றன. அந்த அதியுயர் பாதுகாப்புவலயப் பிரச்சினையில் மட்டும் ஆமை தலையை உள்ளே இழுப்பதுபோல அரசு மௌனித்து நின்று கொண்டு நமபியார், அறிக்கையை ஆதாரப்படுத்துகிறது.

நம்பியார் என்ன நம்பியாண்டார் நம்பி வந்தாலும் சிங்களப் படைகள் தமிழர் தேசத்தில் நிறுவியிருக்கும் முகாம்களை அகற்றி அப்புறப்படுத்தி மீண்டும் தமிழினம் அவற்றில் காலூண்ட வழிவகை செய்யப்பட வேண்டும்.

"எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும்" என்ற வாசகத்தின் விடையாக உங்கள் வீடுகளுக்கு நீங்கள் போங்கள் என்பதுதான்.

இப்போது போர் ஓய்வு நிலையில் சமாதானத்தை இலக்குக் கொண்டு அரசு செயற்ப்படுகிறதென்றால் அதியுயர் பாதுகாப்புவலயம் என்ற பேச்சுக்கே இடமிருக்கக் கூடாது.

அகதி என்று எந்த ஒரு தமிழ் மகனும் அழுது புலம்பக் கூடாது. அதைத்தான் பொங்குதமிழ் உணர்வுகள், பிரகடனங்கள் புலப்படுத்தியுள்ளன.

தற்போது இடைக்கால நிர்வாகசபை ஒன்றை வடக்கு, கிழக்கிற்கு வழங்க அரசு முடியுமாகவிருந்தால் அதில் காணி, பொலிஸ், நிதி போன்றஅதிகாரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதையும் தமது உணர்வுக்கடலில் கலக்கி உள்ளனர்.

எனவே வவுனியாவில் நடைபெற்ற மீள் பொங்கு தமிழ் பற்றிய தேசப்பிரகடனத்தை எவரும் புறந்தள்ளி விடமுடியாது. தமிழினத்தின் ஏக பிரதி நிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் தான் என்ற வலிமையையும் பொங்குதமிழ் ஊடாக உறுதிப்படுத்தி நிற்கும் இந்நிலையில் சிறிலங்கா அரசு பேரினவாத சக்திகளுக்கு அடிபணியாது அதிகாரப் பலம் மிக்க ஒரு இடைக்கால நிர்வாக சபையை வழங்க முன்வர வேண்டும்.

# எதிரி யார் ? நண்பன் யார் ?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு ஐந்து மாதங்கள் கடந்துள்ளன. எனினும் இடைக்கால நிருவாக சபையை அமைப்பதன் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பையும் தமிழீழ விடுதலைப்புலிகள் வழங்கியுள்ளனர். இதனையடுத்து சிறிலங்கா அரசாங்கம் சமர்ப்பித்த மூன்று வரைபுகளை நிராகரித்த நிலையில் பதில் வரைபு அறிக்கையைப் புலிகள் தயாரித்து தீவிரபரிசீலனைக்கு உட்படுத்தியிருக்கின்றார்கள்.

புலிகள் சமர்ப்பிக்கவுள்ள வரைபிலும் அதுதொடர்பான பேச்சுவார்த்தைகளிலுமே தற்போதைய 19 மாதகால சமாதான முயற்சிகளின் எதிர் காலம் தங்கியுள்ளது.

சிறிலங்காவில் தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பு சிங்களப் பேரினவாதத்தின் அடிநாதமாக, கொள்கை வகுப்பாளராக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களால் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அரசியலமைப்பின் ஒவ்வொரு உறுப்புரையும் இந்த நாட்டில் சிங்கள பேரினவாதத்தினைத் தக்கவைக்கவும் ஏனைய சிறுபான்மை இனங்களை ஒடுக்கவும் ஒரு போதுமே திருத்தியமைத்து ஏனைய இனங்களுக்கு உரிமை வழங்க முடியாதவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது.
அத்தோடு சிங்களவர்களிடம் உரிமைகள் குவிந்திருக்கவேண்டுமென்ற அடிப்படையில் ஒற்றையாட்சியைத் தக்கவைக்கும் வகையில் பாராளுமன்றத்தின் சட்டமாக்கத் தத்துவம் பாராதீனப்படுத்த முடியாததாகவும், சமாந்தரமாக இன்னொரு சபையை ஸ்தாபிக்க முடியதவாறு இறுக்கமான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன.


இந்த நிலையில் அரசியலமைப்புக்குப் புறம்பாகவே இடைக்கால நிருவாகசபை அமைக்க வேண்டிய நிலையிலுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஏற்கனவே கையளித்த வரைபு வார்த்தைக் கோவைகளைக் கொண்டதாகவும், அதிகார சபைக்குரிய வரையறைகளைக் கொண்டதாகவும் இருந்தது மட்டுமல்ல தமிழர்களது அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் எந்த ஏற்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை எனப் புலிகள் தரப்பால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழனன்று வவுனியாவில் இடம்பெற்ற பொங்கு தமிழ் பிரகடனம் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்தது மட்டுமல்ல, இடைக்கால நிருவாகசபையில் சட்டமும், ஒழுங்கும், காணி, பொலிஸ் அதிகாரங்கள் உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியேற்ற அதிகாரங்களைக் கொண்டதாக இடைக்கால நிருவாகசபை அமையவேண்டும் என்ற தமிழ் மக்களின் உணர்வும் பிரதிபலிக்கப்பட்டது.
பொங்கு தமிழ் பிரகடனம் புலிகள் இடைக்கால நிருவாக சபை தொடர்பாகச் சமர்ப்பிக்கவுள்ள பதில் வரைபின் உள்ளடக்கங்கள் எவ்வாறுஅமையவேண்டும், அல்லது அமையுமென்பதைச் சொல்லாமல் சொல்லியுள்ளது.

மகாவலி அதிகாரசபை, பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு போன்ற அதிகாரசபைக்கு உள்ள அதிகாரங்களைக் கொண்டிருக்காத வார்த்தைக் கோவைகளை கையளித்ததைத் தொடர்ந்து பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. உள்ளிட்ட எதிர் கட்சிகள் ஈழத்தைக் கேட்பதாகச் பூச்சாண்டி காட்டி வருகின்றன. ஜே. ஆர். பாணியில் பாதயாத்திரையும் நடாத்தி வருகின்றனர். ஜே.வி.பி. அதிகாரப்பரவலாக்கலை முற்றுமுழுதாக நிராகரிப்பதாக அறிவித்துள்ளன.

மறுபுறம் அறுதிப் பெரும்பான்மையை இன்றைய அரசாங்கம் பெறுவதற்கு முண்டு கொடுக்கும் சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் கட்சியும் சமாதானச் சூழலைச் சிதறடிக்கும் வகையில் தனித்தரப்பு இல்லையேல் ஆட்சிக்கவிழ்ப்பு என தலையிடி கொடுக்கத் தொடங்கியுள்ளது.

இன்றைய அரசின் எதிர் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி



நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை வைத்திருக்கிறது. பாராளுமன்றத்தை இன்றைய சூழலில் கலைக்கக்கூடிய அதிகாரம் அமைச்சரவைக்கு தலைமைதாங்கும் அதிகாரம், விரும்பிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்கும் அதிகாரம் என்பவற்றைப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவியான சந்திரிகா பண்டரநாயக்கா குமாரதுங்க கொண்டிருக்கிறார். அத்தோடு முப்படைகளின் தலைவி பதவியும் அரசியலமைப்பு மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசியலமைப்பு இடைக்கால நிருவாக சபையை அமைப்பதற்கு எந்த வகையிலும் இடம்கொடுக்கும் ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதி தலைவியாக உள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் குறியாக உள்ளதே தவிர இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குச் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப் பெரும்பான்மைக்குத் தள்ளாடும் நிலையில் உள்ளது.

இத்தகைய சூழலில் தமிழர்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் விடுதலைப்புலிகள் சமர்ப்பிக்கவுள்ள இடைக்கால நிர்வாக சபைவரைபை பொதுஜன ஐக்கிய முன்னணியோ, ஜே.வி.பியோ ஏன் நிறுவனமயப்படுத்தப்பட்ட சிங்கள பேரினவாதமோ ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டாதென்பதையே அவற்றின் கடந்த கால அண்மைக்கால நடவடிக்கைகள் தெளிவாகக் கட்டியம் கூறுகின்றது.

ஆனால் சர்வதேச சட்ட நியமங்களை இடைக்கால நிர்வாகசபை ஏற்படுத்தப்பட்ட சர்வதேச அனுபவங்களைக் கருத்தில் கொண்டு புலிகளால் தயாரிக்கப்பட்ட பதில்வரைபை அரசாங்கம் நிராகரித்தால் சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடைந்து விடும். அத்தோடு உலக நாடுகள் மத்தியில் சமாதான விரோதப் போக்கு அம்பலமாகிவிடும் என்பதால் இடைக்கால நிர்வாக சபை உள்ளடக்கங்கள் இயன்றவரை வெளியிடாது பார்த்துக்கொள்ளும் அரசு அது தொடர்பாகப் புலிகளுடன் பேச வேண்டிய நிலையிலேயே உள்ளது.
இன்னொரு புறம் முஸ்லிம்களைத் தனித்தரப்பாகப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளச் செய்தல் முஸ்லிம் தரப்பும் தனிவரைபைத் தயாரித்துப் பேசவேண்டுமென அடம்பிடிக்கும் உத்திகளுக்கும் உற்சாகமளித்து தற்காப்பு விசயங்களை அமைக்கும் வகையிலும் அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது.

இதுவரைகாலமும் சிறிலங்கா படைகளை நம்பி போரைத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட சிங்கள அரசாங்கம் போர் முனையில் பெற்ற அனுபவங்களை இலகுவில் மறந்து விட முடியாது. இந்த நிலையில் மாறிவரும் உலக ஒழுங்கில் எதிரிகள் நண்பர்களாக மாறிவரும் சூழலை நம்பியே காய்களை நகர்த்தி வருகின்றது. இடைக்கால நிர்வாக சபை தொடர்பான புலிகளின் பதில் வரைபு சமர்ப்பிக்கப்பட்டதும் இடம் பெறப்போகும் காய்நகர்த்தல்கள் தற்போதைய சமாதான நடைமுறைகளின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்றன.

ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசு வரவு செலவு திட்டத்தைத் தயாரிப்பதற்காக நம்பியுள்ள டோக்கியோ பொதி சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கினாலே கிட்டுமென்பது சிறிலங்கா அரசுக்குப் பலத்த சோதனையாக உள்ளது. எனவே புலிகளின் பதில் வரைபு தொடர்பான பேச்சுவாத்தைகள் சமாதான வானவேடிக்கைகளாகச் சித்தரித்து டோக்கியோப் பொதியைக் கைப்பற்ற சிறிலங்கா அரசு முனையும். இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்படுமோ இல்லையோ புலிகளின் பதில்வரைபை வைத்துப் பேச்சுவார்த்தையை நடாத்தவே சிறிலங்கா அரசு முற்படும்.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகளிள் பதில் வரைபைக் கையளித்தும் இருதரப்பும் பேச்சுவார்த்தை மேசையை நெருங்கும்.

நெருங்க வேண்டிய நிலையில் சிறிலங்கா அரசு உள்ளது. ஆக டோக்கியோ பொதியால் சமாதான நடைமுறைகளின் தேக்க நிலை போக்கப்படும். ஆனால் நிரந்தர சமாதானத்திற்கு இட்டுச்செல்லுமா என்பதற்குப் பதில் சிங்கள தேசத்திடமே உண்டு.

**சந்திப்புக்களில் எடுக்கப்படும் நல்லமுடிவுகளை உடனடியாகவே அரசியலாக்கி, அந்த முடிவுகளின் பிரதிபலன்களை எவருமே அனுபவிக்கமுடியாதபடிக்குச் செய்துவிடுவதில் முஸ்லிம் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாகவே வெற்றிகண்டு வந்திருந்தார்கள்.**

# தமிழ் முஸ்லிம் உறவில் ஒரு புதிய அத்தியாயம்

## அரசியல்வாதிகள் குழப்பாவிட்டால் வெற்றி நிச்சயம்





மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் உறவு சம்பந்தமான ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தென்பட ஆரம்பித்துள்ளது.

கடந்த 20ம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள கரடியனாறு விருந்தினர் விடுதியில் கிழக்கு முஸ்லிம்களுக்கும், விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பானது, தமிழ்-முஸ்லிம் உறவில் ஒரு புதிய பரிணாமத்தை வெளிப்படுத்துவதாகத் தென்படுகின்றது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்திப்பில்

புலிகள் தரப்பில் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான், சிறப்புத் தளபதி த..ரமேஸ், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட பல முக்கிய தளபதிகள் கலந்துகொண்டிருந்தார்கள். அதேவேளை, முஸ்லிம்கள் தரப்பில் இச்சந்திப்பில் எந்தவொரு அரசியல்வாதியும் கலந்துகொள்ளவில்லை என்பதே இச்சந்திப்பின் சிறப்பம்சமாகும்.
முஸ்லிம்கள் தரப்பில் கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கியஸ்தர்கள் மட்டுமே இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார்கள்.





இந்தச் சந்திப்பு வெற்றி அளித்ததற்கும், இச்சந்திப்பில் ஆக்கபூர்வமான தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டதற்கும், இந்த முதற் சந்திப்பு பல தொடர் சந்திப்புக்களுக்கு வழி சமைத்துக் கொடுத்ததற்கும், முஸ்லிம்

**- சாத்வீகன் -**

அரசியல்வாதிகளின் பிரசன்னம் இச்சந்திப்பில் இல்லாமல் இருந்ததே காரணம் என்று கூறப்படுகின்றது. ஏனெனில் இதுபோன்ற கடந்த காலச் சந்திப்புக்களின் முடிவுகளை எடுத்து நோக்கினால், இந்தச் சந்திப்புக்களின் பலாபலன்களைக் குழப்பிய தரப்பாக முஸ்லிம் அரசியல்வாதிகளே இருந்து வந்திருந்ததைக் காணமுடியும்.

சந்திப்புக்களில் எடுக்கப்படும் நல்லமுடிவுகளை உடனடியாகவே அரசியலாக்கி, அந்த முடிவுகளின் பிரதிபலன்களை எவருமே அனுபவிக்கமுடியாதபடிக்குச் செய்துவிடுவதில் முஸ்லிம் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாகவே வெற்றிகண்டு வந்திருந்தார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற இதுபோன்ற பல பேச்சுவார்த்தைகளைப் பொறுத்தவரையில், சக்திவாய்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் பலரது பிரசன்னமே, முஸ்லிம்கள் தொடர்பான அனைத்து விடயங்களும் தோல்வியில் முடிவடைவதற்குக் காரணமாக அமைந்து இருந்தன.

மட்டக்களப்பில் உள்ள ஒவ்வொரு முஸ்லிம் அரசியல்வாதியும் வெவ்வேறு அரசியல் முகாம்களில் இருப்பதால் அவர்களிடையே புரையோடிக் காணப்படுகின்ற அரசியல் வேறுபாடுகள், தமிழ்-முஸ்லிம் சந்திப்புக்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை அமுல்படுத்த முடியாதபடி செய்துவிடுவதை வழக்கமாகக் கொண்டுவருகின்றது.

மட்டக்களப்பு காத்தான்குடிப் பிரதேசத்தில் அதிக செல்வாக்குடன் காணப்படுகின்ற ஒருவராக பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா இருந்து வருகின்றார். இவருக்கென்று பாரிய வாக்கு வங்கி இருக்கின்றது. இவருக்குப் பக்கபலமாக ஆயுதம் தாங்கிய முஸ்லிம் இளைஞர்கள் குழு ஒன்றும் அவரிடம் இருக்கின்றது. ஹிஸ்புல்லா பொ.ஐ.மு. யுடன் இணைந்துள்ள பேரியல் அஷ்ரப்பின் ஷநுவா' கட்சியைச் சேர்ந்தவர்.

இதேபோன்று ஏறாவூர் பிரதேசத்தில் செல்வாக்குடன் திகழும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவர். தற்பொழுது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சு ஒன்றின் செயலாளராக இருப்பவர்.

அதே ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர்தான் பசீர் சேகுதாவுத். பிரதி அமைச்சர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர். ரவூப் ஹக்கிமின் வலது கை. இவரும் ஏறாவூர் முஸ்லிம்கள் மத்தியில் பலத்த செல்வாக்கு மிக்கவர்.

அதேபோன்று ஓட்டமாவடியைச் சேர்ந்த மற்றொரு பிரதி அமைச்சரான மொகைதீன் அப்துல்காதர் என்பவர் அதாவுல்லாவின் அணியைச் சேர்ந்தவர். ஓட்டமாவடிப் பிரதேசத்தில் இவருக்கு அபரிமிதமான செல்வாக்கு இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இங்கு உள்ள நான்கு முக்கிய முஸ்லிம் அரசியல் புள்ளிகளும் இவர்கள் நால்வரைப் பொறுத்தவரையிலும், ஒருவரது அரசியல் வளர்ச்சியை எக்காரணம் கொண்டும் மற்றவர் அனுமதிக்காத நிலைதான் இங்கு காணப்படுகின்றது. இதுவரை இடம்பெற்ற முஸ்லிம் அரசியல்வாதிகள்-விடுதலைப் புலிகள் சந்திப்புக்கள் வெற்றி பெறாததற்கு இந்த அரசியல்வாதிகளின் அரசியல் நடவடிக்கைகளே காரணமாக இருந்து வந்திருந்தது என்பதை இன்று முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

உதாரணத்திற்கு விடுதலைப் புலிகளுடன் பேசி ஏதாவது முடிவைப் பெற்று வந்தால், அதனைக் குலைப்பதற்கு மற்றைய முகாமைச் சேர்ந்தவர்கள் முனைப்புடன் செயற்படுவார்கள். பேச்சுவார்த்தைகளின் பலாபலன்கள் பிறரைச் சென்றடைந்துவிடக்கூடாது என்பதில் மற்றைய அரசியல்வாதிகள் முன்னின்று காரியம் ஆற்றுவார்கள். அறிக்கைகள் விடுவார்கள். சிறு தவறுகளைக்கூட பெரிதாகச் சித்தரித்து அரசியலாக்கிவிடுவார்கள்.

அலிசாகிர் மௌலானா புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டபோதும் இதே நிலை தான் ஏற்பட்டது. இதேபோன்று, மட்டக்களப்பில் முஸ்லிம் அரசியலில் இருந்துவந்த போட்டிகள், சாதாரண முஸ்லிம்கள் விடயத்தில் எந்தவொரு தீர்வையும் பெற்றுத் தருவதற்குத் தடையாக இருந்து வருகின்றது.

இதனால்தான், இம்முறை அரசியல்வாதிகளைத் தவிர்த்து, பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமுகமே நேரடியாகப் புலிகளுடன் பேசுவதற்கு முனைந்திருக்கின்றது.
இந்த இரண்டு தரப்பினருக்கும் இடையில் வரும் ஏற்பட்டு வரும் சமாதான நகர்வுகளின் வேகத்தைப் பார்க்கும் பொழுது, அரசியல்வாதிகளை ஓரம்கட்டிவிட்டு முஸ்லிம் சமூகமே நேரடியாகக் களத்தினில் இறங்கியது ஒரு நல்ல விடயமாகவே தென்படுகின்றது.

ஆனால் இதில் அச்சப்படவேண்டிய ஒரு விடயமும் இருக்கத்தான் செய்கின்றது. ஒதுக்கப்பட்ட நான்கு அரசியல்வாதிகளாலும் இந்தச் சமாதான முயற்சிக்கு ஏதாவது பங்கம் நேர்ந்துவிடுமோ என்கின்ற சில முஸ்லிம் பிரமுகர்களின் அச்சத்திலும் நியாயம் இல்லாமல் இல்லை.

அத்தோடு, யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களை இந்த விடயத்தில் பந்திக்கு இழுக்காததும் ஒரு நல்ல சகுனம்

**சமாதான நகர்வுகளின் வேகத்தைப் பார்க்கும் பொழுது, அரசியல்வாதிகளை ஓரம்கட்டிவிட்டு முஸ்லிம் சமூகமே நேரடியாகக் களத்தினில் இறங்கியது ஒரு நல்ல விடயமாகவே தென்படுகின்றது.**

என்றே கூறப்படுகின்றது. கடந்த காலங்களில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் சில விடயங்களுள் தலையை நுழைத்து நிலமையை மேலும் சிக்கலாக்கியதைப் பாடமாக நினைத்து, இந்த விடயத்தில் கவனமான இரண்டு தரப்பினருமே காய்நகர்த்தியிருந்ததையும் பாராட்டியே ஆகவேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் இணைந்து வாழ்வதைத் தவிர வேறு வழியே கிடையாது.
இது இரண்டு சமூகத்தினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மை. இதனை உணர்ந்து இரண்டு சமூகத்தினரும் பொறுப்புடன் காரியமாற்ற ஆரம்பித்திருப்பதையிட்டு இரண்டு சமூகத்தினருமே மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## வடக்கு – கிழக்குத் தாயகக் கோட்பாடு என்பது இன்று நேற்று வந்ததல்ல. காலம் காலமாக வரலாற்று வழிவந்த வெளிப்படை உண்மை

- துரை - மேகநாதன் -

போராட்டத்தின் மிதவாத உந்து சக்தியான தந்தை செல்வாவினதும் அவரது அரசியல் சகாக்களினதும் அரசியல் நகர்வால் ''இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி'' (ITAK) நான்கு ஒப்பந்தங்கள் மூலம் தமிழ் மக்களின் மரபுவழித் தாயகத்தைச் சிங்களத் தலைவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்திருந்ததை நினைவூட்டிக் கொள்வோம்.

''பிரதேசசபை'' களை நிறுவும் பொருட்டாக மக்களின் ஐக்கியமுன்னணி அரசின் பிரதமர் எஸ். டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்காவுடன் 1957 ஜூலை 26ல் செய்து கொள்ளப்பட்ட ''பண்டா- செல்வா

எங்கள் அரசை அமைப்போம்.இதற்குச் சிங்களவர்கள் இணங்க மறுப்பதற்கு எவ்வித நியாயமும் இல்லை. ஒருநாள் எங்கள் கோரிக்கைக்குச் சிங்கள மக்கள் இணங்கியே தீர வேண்டிய நிலை ஏற்பட்டே தீரும் நாங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து பிரிந்து எங்கள் தமிழீழத் தனிநாட்டை அமைத்தே தீருவோம்!''

அது அன்று தந்தை செல்வா கூறியது. இன்று சமகாலச் சர்வதேச இராச

இனவாதிகளுக்கு இவைபற்றி இடித்துரைக்க வேண்டும். ''கறைபடாத கரங்கள்'' என்று கூறி சிறிலங்காவின் ஆட்சி செலுத்திய டீ.பி. விஜயதுங்கா எங்கே? தன்னை ஒரு நூறு விழுக்காடு பௌத்த சிங்கள இனவாதியாகக் காட்டிய இரட்ணசிறி விக்ரமநாயக்கா என்ன ஆனார்? ''அம்பும் வில்லும்'' இன்றைய நவநாகரிக காலத்தில் ஏந்திய சம்பிக்கரணவெக்க எவ்வாறு / ஏன் ஓரங்கட்டப்பட்டார்? என்ற மிகச் சில அண்மைய எடுத்துக் காட்டுக்களை எடுத்துக் கூறுங்கள்.

இவ்வாறான சிறு அறிமுகக் குறிப்புடன் இவ்வாரக்கட்டுரைக்கு வருகிறோம். குந்த ஒரு குடிநிலந்தானும் இன்றி அல்லலுறும் எம் மக்களுக்கு ஆசுவாசப் படுத்திக் கொள்ள மிகக் குறைந்த பட்சக் கோரிக்கையான அதிகாரங் கொண்ட இடைக்கால நிர்வாக சபையைக் கோருகின்ற போது, அர்த்தமற்ற ஆனால் விசமத் தனமான கண்டனங்கள் ஒலிக்கின்றன. '' வடக்குக் கிழக்குப் பிரிப்பு'' என்று ஆப்பு வைக்க முற்படும் குறுகிய அரசியல் இலாபம் தேடும் சக்திகள் ''ஆப்பிழுத்த குரங்கு'' ஆக அம்பிடப் போகின்றன.

வடக்கு- கிழக்குத் தாயகக் கோட்பாடு என்பது இன்று நேற்று வந்ததல்ல. காலம் காலமாக வரலாற்று வழிவந்த

அரசியல் அரங்கங்களில் காட்சிகள் தளம்பல் தன்மையுடையனவாகவே தென்படுகின்றன. சர்வதேசம் ஆகட்டும், சிறீலங்கா ஆகட்டும் அரசியல் கள்நிலவரம் அதுவே. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கவே சிங்களத்தேச சக்திகள் பல பிரியப்படுகின்றன. குறுகிய இனவாத அரசியல் சாக்கடையில் ''உல்லாசப் பயணம்'' செய்யும் இவர்கள், தங்களின் குட்டை ஆளைப் புதைக்கும் சக்தி நிறைந்ததென்பதை வசதிக்காக மறந்திருக்கிறார்கள்.

பதவிக் கட்டிலுக்காகவும்,ஊடகப்

மொழி மற்றும் பழக்க வழக்கங்களில் முற்றாக வேறுபட்டு இருக்கிறார்கள்''

இக்கூற்று 1799இடம் பெற்ற ''கிளெகோர்ன்குறிப்பு''ஆக அறியப் படுகின்றது.தமிழர்தாயகக் கோட்பாட்டின் வரலாற்றுச்சாட்சியிது. ஈழத்தமிழ் மக்களின்முதன்மை அடிப்படை விருப்புக்களின் ஒன்றாக வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் மரபுவழித்தாயகம் அமைந்திருப்பதை வரலாறு எமக்குச் சுட்டிநிற்கின்றது. தேசம் தழுவிய ''பொங்குதமிழ்'' எழுச்சிப் பிரகடனங்களில் இது ஓங்கி ஒலிக்கப்படுவது ஒட்டுமொத்த அபிலாசையைப் பிரதிபலிக்கின்றது.

இவ்விடத்தில் ஈழத்தமிழ் தேசிய மக்களின் சுயமுன்னேற்றக் (SELF DEVELOPMENT/SELF MOTIVE) கருத்து ஒன்றை மீளவும் நினைவூட்ட விரும்புகிறோம். ''ஈழத்தமிழர்கள் சிறுபான்மையினர்'' என்ற தாழ்வுச் சிக்கலை உதறித் தள்ளுவதே அது. அப்படியென்றால் உண்மைதான் என்ன? வடக்கு- கிழக்கு இணைந்த தமிழர் மரபுவழித் தாயக ஆள்புலத்தில் (THAMIL'S TRADITIONAL HOMELAND TERRITORY) ஈழத்தமிழர்கள் பெரும்பான்மையினர் என்பதுவே அது. நாம் சிறுபான்மையினர் என்ற கருத்தியல் சிறையிலிருந்து சிறையுடைப்புச் செய்ய வேண்டும் என்பதை உள்ளுணர்ந்து வெளிப்படை உண்மைஇது. முடிந்த முடிவு ஆன வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் மரபுவழித் தாயகக் கோட்பாட்டை, அதன் தார்ப்பரியத்தை இவ்வாறு கட்டுரை சுட்டி நிற்கின்றது.

''..... தீவின் ஆட்சியை இரு வெவ்வேறான தேசிய இனங்கள் மிகப் பழைய காலத்திலிருந்து தங்களுள் பிரித்துவைத்துக் கொண்டிருக்கின்றன. முதலாவதாக சிங்களவர்கள் வளவை ஆற்றிலிருந்து சிலாபம்வரை நாட்டின் தெற்கு- மேற்குப்




உடன்படிக்கை'', மற்றும் 1965 பொதுத் தேர்தலின்பின் அரசு அமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் டட்லி சேனநாயக்காவுடன் மார்ச் 24 ''மாவட்டசபை'' களை நிறுவுவதற்காகச் செய்துகொள்ளப்பட்ட ''டட்லி-செல்வா உடன்படிக்கை'' இரண்டுமே எழுத்தில் செய்து கொள்ளப்பட்ட ஆவணச்சான்றுகளாகும். இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் கொள்ளுங்கள்.

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக அமைவதற்கு முதலில் அவர்களுக்குத் தனித்துவமான மரபுவழித் தாயகம் இருத்தல் வேண்டும், அதுவும் அங்கீகரிக்கப்பட்டதாக இருத்தல் அவசியம். '' தாயகம் நோக்கிய பயணம் '' செய்து''இஸ்ரேல்'' என்ற தேசம் உருவாக்கப்பட முன் யூதர்களுக்கென இத்தகைய நிலம் இல்லாதிருந்தமையே ''அலைந்துதிரியும் யூதர்களை ஒரு தேசிய இனமாக ஏற்கமுடியாது'' என்று ஸ்டாலினைக்கூற வைத்தது. இது ஈழத்தமிழர்

தந்திர நீரோட்டப் போக்கு மாற்றங்களுக்கேற்ப தமிழர் தரப்புத் தாயக விடுதலைப் பயணப்பாதையின் சில நெகிழ்வுகளைக் காட்ட வேண்டியிருப்பதையிட்டு யாரும் ஐயம் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், ''போராட்டவடிவங்கள் மாறலாம் போராட்டம் ஓயாது'' என்பது முக்காலமுணர்ந்த முதல்வன் முன்னுரைத்ததல்லவா?

வெள்ளிவிழா மலரின் இவ்விரு உடன்படிக்கைகளின் பிரதிகளைத் தமிழ்/ ஆங்கில மொழிகளில் காணலாம்.

ஏனைய இரு ஒப்பந்தங்களும் 1960 மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அரசு அமைப்பதற்கான பாராளுமன்ற பெரும்பான்மையை எந்தவொரு அரசியற் கட்சியுமே பெற்றிராத பொழுது ஏற்பட்டிருந்த தொங்குபாராளுமன்ற நிலையை அடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அப்போதைய தலைவரான சீ.பி.டீ. சில்வாவுடனும் , அப்பாராளுமன்றம் கலைக்கப்பட்டுப் புதிய தேர்தல் அதே ஆண்டுஜூலை மாதம் நடைபெறுவதற்கு முன்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை ஏற்க முன்வந்திருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும் தந்தை செல்வாவுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட கனவான் ஒப்பந்தங்களாகும்.

அமைதி முறையிலே ஈழத்தமிழர் அடிப்படை அரசியல் விருப்புக்களைப் பெறமுடியாது என்பதை, உணர்ந்திருந்த தருணத்திலே, தந்தை செல்வா தேசிய அரசுப் பேரவையின் 19.11.1976இல் ஆற்றிய இறுதியுரையில் பின்வருமாறு தெரிவித்தமை வடக்கு-கிழக்கு தமிழர் தாயகக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பியதை எடுத்துச் சொல்லுவோம்.

''...எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தார்கள். அவர்கள் தங்களுக்கென தங்களது சொந்த அரசை வைத்திருந்தார்கள். இலங்கையின் சரித்திரத்தில் எங்களுக்கு ஒருஇடம் இருக்கின்றது.நாங்கள் கோருவது உண்மையில் பிரிவினையல்ல: எங்கள் இழந்த அரசுரிமையையே மீளப்பெறப் போராடுகிறோம்.

''நாங்கள் ஒன்றில் சிங்களவர்களின் ஆட்சியிலிருந்து விடுபட வேண்டும் அல்லது ஒழியவேணடும் என்ற சிந்தனையுடனேயே செயற்பட்டு வருகிறோம். இது உறுதியானது. எனவே நாம் முழு வேகத்துடன் செயற்பட்டு

## வரலாற்றின் வழிவந்த
## வடக்கு – கிழக்குத் தாயகக் கோட்பாடு



பிரபல்யத்திற்காகவும் பச்சை இனவாதம் கக்கிய முன்னைய அரசியல் முன்னிலையாளர்களுக்கு நடந்தவைகளை இவர்கள் மீட்டுப் பார்க்கவேண்டும்: நடுநிலையான எமது சிங்களச் சகோதரர்கள் இன்றைய

பகுதிகளிலும் அவற்றுடன் கூடிய இப் பகுதிகளிலும் வாழ்கிறார்கள். இரண்டாவது மலபார்கள் (தமிழர்கள்) வடக்கு-கிழக்கு பிராந்தியங்களை ஆட்சி செய்கிறார்கள். இவ்விரு தேசிய இனங்களும் தங்களின் மதம்,

தொடர்பான அமைதிப் பேச்சுக்களை நிலம் (காணி) முக்கியத்துவம் பெறுவதன் அவசியத்தை அர்த்தமுடையது ஆக்கிறதல்லவா?

தமிழர் தாயக விடுதலைப்



# மகிந்த – சந்திரிகா பனிப்போர் தொடர்கிறது



எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி சந்திரிகாவுக்குமிடையில் தற்போது பனிப்போர் ஆரம்பித்து விட்டது.

அரசு மீதும், விடுதலைப் புலிகள் மீதும் அதிருப்தி தெரிவித்து வரும் ஜனாதிபதிக்கு ஒத்து ஊதும் நிலையில் மகிந்த இல்லை என்பது தற்போது நன்கு புலனாகிறது.

ஜே.வி.பி- சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு உடன்படிக்கையில் கூட விலகி நின்ற ராஜபக்ஷ அரசாங்கம் மீது, ஜனாதிபதி காட்டிவரும் கடும் போக்கான கருத்துக்களை மறுதலிக்கும் மனிதராக மாறிவிட்டார் என்றால் இதனைப் பார்த்துச் சந்தோசப்படவும் வேண்டும், சந்தேகப்படவும் வேண்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை, விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை யோசனை, குரங்கு பாஞ்சான் முகாம் விவகாரம் இப்படி அரசு சிக்கலில் சிக்கித் திணறுகின்ற போது அதனைப் பூதாகாரப் படுத்திக் குளிர் காய்வதற்கான முயற்சியில் பொதுஜனஐக்கிய முன்னணி முற்பட்டு வருகிறது. அவ்விவகாரங்களில் தமது கருத்துக்கள் தென்னிலங்கை மக்களிடையே ஊடுருவி பெரும் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கையில்தான் இவ்வாறான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன.

அண்மையில் ஐ.நா சபையில் உரையாற்றுவதற்கான வாய்ப்பு கைநழுவிப் போனதை அடுத்து அரசு மீது ஆத்திரத்தின் மேல் ஆத்திரம் கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் பிரதமரைச் சாடி மிகநீண்ட கடிதம் ஒன்றை ரணில் விக்கிரம சிங்காவிற்கு அனுப்பியிருந்தார். அக் கடிதம் வெறும் கடிதமாக எடுத்துக் கொள்ள முடியாது. ரணில் ஆட்சிக்கு வைக்கும் வேட்டாகத்தான் கருத இடமுண்டு.

முக்கியமாகக் குரங்கு பாஞ்சான் முகாம் விவகாரம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருமலைத் துறைமுகம் உட்பட திருமலை நகருக்கு விடுதலைப் புலிகளால் ஆபத்து வந்திருப்பதாகவும் திருமலையைச் சுற்றி விடுதலைப் புலிகளின் 12 முகாம்கள் இருப்பதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா உடனடியாக விளக்கமளிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கடிதம் அனுப்பி ஓர் இரு நாட்களுக்குள்ளே எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த திருமலைக்கு விஜயம் செய்தார். அவரது பயணம் வெறும் பயணமாக இருக்கவில்லை. திருகோணமலையைச் சுற்றி விடுதலைப்புலிகளின் முகாம்கள் பன்னிரெண்டு இருக்கவில்லை. விடுதலைப் புலிகளின் முகாம்கள் இருப்பதாக மக்கள்தான் கூறுகிறார்கள் எனத்தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் புலிகளின் உறுப்பினர் தொகை அதிகரித்திருப்பதால் தங்களது முகாம்களை விஸ்தரித்திருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இக்கருத்தினையடுத்து ஜனாதிபதிக்கும் எதிர்க் கட்சித்தலைவருக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. மறு புறம் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் யார் கதையை நம்புவது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் கதையை நம்புவதா எதிர்க்கட்சி தலைவரின் கூற்றை மறுப்பதா என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.


ஆளமாக உற்று நோக்கினால் அனைத்து மக்களின் ஆதரவைத்தேடும் அரசியல் வாதியாக மகிந்த மாறிவிட்டார் போல் தெரிகிறது.

இதே போன்றுதான் கொழும்பு நகரைத் தாக்குவற்குப் புலிகள் தயார் நிலைக்கு வைக்கப்பட்டுள்ளனர் என்ற வதந்தியும் சந்திரிகா, கதிர்காமர் உள்ளிட்ட சக்திகளால் பரப்பப்பட்டு வருகின்றது.

போர் நிறுத்தம் முறிவடைந்தால் கொழும்பு மாநகருக்கு ஆபத்து! ஆயிரக் கணக்கான புலிகள் ஊடுருவி உளவு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்ற கட்டுக்கதை பரப்பப்பட்டு வருகின்றன.

**ஆளமாக உற்று நோக்கினால் அனைத்து மக்களின் ஆதரவைத்தேடும் அரசியல் வாதியாக மாறிவிட்டார் போல் தெரிகிறது.**

**ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக் கூட்டு உடன்படிக்கையால் கட்சி கூட்டு விலகி நின்ற ராஜபக்ஷ மீது, ஜனாதிபதி காட்டி வரும் கடும் போக்கான கருத்துக்களை மறுதலிக்கும் மனிதராக மாறிவிட்டார் என்றால் இதனைப் பார்த்துச் சந்தோசப்படவும் வேண்டும், சந்தேகப்படவும் வேண்டும்.**



இந்தப் பேச்சு எந்தளவில் தென்னிலங்கை மக்களிடையே எடுபடும் என்பது மகிந்தவின் கூற்றிலிருந்து தெரியவருகிறது. எனவே ஜனாதிபதி மற்றும் அவரது சகோதரரும் ஆட்சியை வீழ்த்துவதற்காக வீசும். அஸ்திரங்கள் மகிந்தவின் நடவடிக்கையால் தற்போது தோல்வியைச் சந்திக்க வைத்திருக்கிறது என்றே கூறமுடியும்.

இதே வேளை சமாதானத்திற்கு எதிராகப் புத்தபிக்குகளின் போர்க்கொடி தீவிரம் அடைந்து விட்டன.

சத்தியாக்கிரகம், பாதயாத்திரை என்ற படிமுறைகளைக் கையாண்டு வந்த தேரோக்கள் இப்போது தற்போதைய அரசியலில்ஒருஅதிகார சக்தியாக வலுவடைந்து வருகின்றனர்.

அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் கூடிய ஆயிரக் கணக்கான பிக்குகள் புலிகளையும் ரணில் அரசையும் காரசாரமாக விமர்சனம் செய்தனர்.

இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்ற தோரனையில் சங்க நாயக்க தேரர்கள் ஒன்று கூடி ஆராய்ந்து ஒரு அறிக்கை விட வேண்டும் எனவும் பிக்குகள் வலியுறுத்தினர்.

சிறிலங்கா தேசத்தின் ஆட்சி நிர்வாகத்தில் புத்த பிக்குகளின் அதிகாரம் தலையீடு இன்று நேற்றல்ல சிறிலங்கா தேசத்தின் ஆட்சி அதிகாரம் சிங்கள ஆட்சியாளர்களின் கைகளுக்கு மாறிய காலமிருந்தே தமது பலத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

**வேணிதன்**

தற்போதுள்ள போர் ஓய்வு நிலையினை விரும்பாத இந்தப் புத்த பிக்குகள் ஒன்று கூடித் தீர்மானம் எடுக்கப் போவது எதிர்க் கட்சிகளுக்குக் குறிப்பாகச் சமாதானத்தை விரும்பாத சக்திகளுக்கு மேலும் வலுவூட்டும் என்பது உண்மை.

## சொன்னாலும் குற்றம்



போனகிழமை புளியந்தீவுக்குள இருக்கிற புனிதமான மண்டபமொன்றில தேனகத்தில தந்திரம் இல்லாத மாநில அபிவிருத்தி சங்கத்தின் விழா இடம் பெற்றது

பத்திரிகையாளர் சிலருக்கு பாராட்டும், பார்வையாளர்களுக்கு பகல்வித்தையும் காட்டப்பட்டது. அந்த பகல்வித்தை காட்டிய பேர்வழி "உனக்கில்லை உபதேசம் ஊருக்கு" என்று ஆத்மீகம் பேசிற வட்டித் தாடியார்தான்.

அவர் இங்கு காட்டிய வித்தைகளால் ஒன்று பெண்கள் அணியும் உள்ளங்கி உடைகளில் ஒன்றை ஆணிண் சேட் பொக்கட்டில் இருந்து எடுத்துக்காட்டியது வித்தைக்கு வேறு பொருட்கள் கிடைக்கவில்லையா? என அங்கிருந்தவர்கள் கதைத்தனர்,

பெண்களின் உள்ளங்கி உடையைக் காட்சிப் பொருளாகக் காட்டி காசு உழைக்கும் பேர்வழிகள் எமது தமிழ் சமூகத்தில் தேவைதானா எனப் பெண்கள் கதைப்பதும் காதில விழுந்தது.

உண்மையில் வித்தை காட்டியவர் வேறு ஒரு பொருளை இவ்வாறு காட்டியிருக்கலாம் தானே என கதைப்பதிலும் நியாயம் இல்லாமல் இல்லை, இது பெண்ணியம் பேசும் கண்ணியமானவர்களின் கவனத்திற்குச் சமர்ப்பணம்.




கதிர் வெடித்துக் கடலில் விழ கடல் கொதித்துச் சூடுதணிக்க தணிந்த தரையேலே மூரியாவாகும். பூமியைத் தாயாகக் கொண்ட மக்கள் கூட்டம் முதற் பூமியின் கன்னித்தன்மையைக் கவனத்திற் கொண்டு ஆரம்ப பூமியானலெ மூரியாணவை குமரி என்றார்கள். குமரிதாயானதும், அது குமரி கண்டமானது. இந்த முதற் பூமி வடக்குத் தெற்குக் கடலாகவும் மேற்கு தென்னமெரிக்கா வரையும் கிழக்கு அவுஸ்ரேலியாவரையும் பரந்து விரிந்திருந்தது. இந்தப் பிரமாண்டமான பூமியை பல முறை கடல் பொங்கி போர் தொடுத்து சிதைத்தது, அழித்தது, அமுக்கியது, அவ்வாறு கொடுங்கடலின் கோரப்பசிக்கு இரையாகி, வெடித்து வேறுபட்டு மிதந்து சென்றவைதான், தென் அமெரிக்கா, அவுஸ்ரேலியா, ஆபிரிக்கா, போன்றவையாகும். இப்பிரிவெல்லாம் ஒரே கடற்கொந் தளிப்பில் காணாமல் போனவையல்ல. பல்வேறு காலப் பகுதியில் ஏற்பட் டகடும் கொந்தளிப்பில் கரைந்தவை மறைந்தவையாகும். இவைபற்றி அறிஞர்கள் பேராசிரியர் எக்கெல் (Prof Haeckel) பேராசிரியர் ஸ்கிலேட்டர் Prof Sclater ) பேராசிரியர் வாலஸ் Prof Waliace) போன்றோர் கூறியுள்ளதை அறிஞர் இ. தர்ஸ்டன் என்பவர் தானெழுதிய சாதிகளும் வகுப்புக்களும், “என்ற நூலில் 20,21ம் பக்கங்களில் ஏற்றுள்ளார். (Castes and trides page 20,21ஆசிரியர் எக்கெல் எழுதிய ( The Evolution Man Page 203) மனிதத்தோற்றம் என்னும் நூலில் 203ல் கூறியுள்ளார்.

உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை பல கடற் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது என நில நூலோர் கூறுகிறார்கள். அவற்றைப் பார்ப்போம்.

கி.மு 30,00,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கடற் கொந்தளிப்பு ஏற்பட்டது. அதில் பெருவள நாட்டுக்கும் திருதநாட்டுக்குமிடைப்பட்ட பாகம் அழிந்தது. அங்கே வாழ்ந்த பழந்தமிழர்கள் கடற்கொந்தளிப்புக்கு இரையா்கியோர் போக மிஞ்சியவர்கள் தென்னிந்தியா வழியாகத் திடலானபாகம் தேடிஓடி அமர்ந்தார்கள். சென்றவர்களின் பலர் தொடர்ந்து சென்று சுமேருக்கும் எஞ்சியோர் ஸ்காண்டினே வியாவுக் கும். சென்றமர்ந்தார்கள்.

**இஸ்லாமியர்கள் வேட்டியும் சால்வையும் அணிந்து செல்வதும் பள்ளிவாசலுக்குள் கைகால் அலம்பிச் செல்லும் பழக்கமும் சைவப் பாரம்பரியத்தை நிலையாகக் கொண்ட பாரம்பரியத்தைக் காட்டுகிறது.**

இதுதான் குமரிக் கண்டத்தில் ஏற்பட்டக் அழிவும் பிரிவுமாகும். இதன் விளைவே குமரிமக்களில் ஒரு கூட்டம் பிரிந்து தனியாகச் சென்ற முதற்காலம். இதைத் தொடர்ந்து கி.மு 14058ல் மீண்டும் ஓர் கடற் கொந்தளிப்பு திடீரெனத் தாக்கியது. அதில் ஒளிநாடு பெருவள நாட்டின் பெரும் பகுதியும் கடலால் விழுங்கப்பட்டன. இதன் மூலம் தமிழர் வாழ்ந்த பெரும் நிலப்பரப்பு பாய்ந்த கடலில் முழ்கிவிட்டது. மாண்டவர் போக மீண்டவர்கள் தங்கள் தங்கள் வசதிக்கேற்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தி மிதந்த தரைகளில் தஞ்சம் புகுந்தார்கள்

இவற்றையடுத்து கி.மு9,564ம் ஆண்டில் பொங்கிய கடல் மிஞ்சி இருந்த பூவுலகத்தின் சிலபகுதிகளை ஏப்பமிட்டது. எலியட் என்னும் நில நூல்வல்லார் கி.மு 10,00,00 ஆண்டுகள் முன்னும் கி.மு 8,00,000ம் ஆண்டுகள் முன்னும் கி.மு 200,000ம் ஆண்டுகள் முன்னும், 80,00ம் ஆண்டுள் முன்னும் கி.மு. 9,560 ம் ஆண்டுகள் முன்பும் பல நீர்ஊழிகள் ஏற்பட்டதால் குமரிக்கடலில் கரைந்தும் கரையாதிருந்த ஆசியாப்பகுதி மிதந்தது என்கிறார்.

இக்காலகட்ட அழிவில்தான் தென்மதுரைத் தமிழ் சங்கமும; குமரிக்கோடும், குமரிஆறும் -கடலின் குமுறலில் சிக்கி மீழமுடியாத ஆழியில் சங்கமமாகின.

இத் தோடுதான் ஆழியின் ஊழிகள் அடங்கி அமைதி வாழ்வை கண்டெனவா என்றால் தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை என்பது போல தொடர் கதையாகவும் சோகத்தின் சுமையாகவுமிருக்கிறது. கழுதை மூட்டை சுமந்தது போல மனித இனமும் காலம் காலமாக இயற்கையின் சீற்றங்களையும், அவையால் ஏற்பட்ட சுமைகளையும் சுமந்து கொண்டே வாழ்வைத் தொடர் கிறார்கள்.

இத்தொடர்களின் பங்கங்களைப் பிரித்தால் அங்கே ஆசிரியர் பீட் (Bede) கி.மு 3544ம் ஆண்டிலும், ஆசிரியர் கிளமெண்ட் அலெக்சாந்திரியன் (Clement , Alexandriun) கி.மு 3475லும், பேராசிரியர் (Hales) ஹேல்ஸ் என்பவர் கி.மு 3158 லும் கலாநீதி யூரிபியஸ் Euribius) கி.மு 2450ம் ஆண்டிலும் இலங்கைச் சரித்திரமான இராசவாளியில் கி.மு 2387 ஆண்டிலும், அறிஞர் அர்ஷர் கிமு. 2348ம் ஆண்டிலும் நீர் ஊழிகள் ஏற்பட்டன. மிச்சமிருந்த உயிர்களை உலை வைத்ததோடு அடங்காத பசியோடு ஆர்ப்பரித்துக் கொண்டி ருக்கிறது. அரேபியர்கள் கி.மு 2344ல் கடற்கொந்தளித்தது. என்பதோடு பாபிலேணியர்கள் கி.மு 2000லும் ஒரு கடற்கொந்தளிப்பு ஏற்பட்டது எனக் கூறியுள்ளார்கள்.

இத்தனைக் கடற்கொந்தளிப்புகளும் ஒட்டு மொத்தமாக ஒருதரத்தில் குமரியை முழுமையாகக் குடைந்தவையல்ல. காலம் காலமாகச் சிறுகச் சிறுக சிதைத்து சின்னா பின்னமாகப் பாழ்படுத்தியவை. இதனால் பரந்து விரிந்து கிடந்த பழம் பெரும் தாயகத்தை *தாரைவார்த்தோம.* எம்தந்தையாரும் அவர் குழந்தையரும் ஆடிப்பாடி ஓடி விளையாடிய மண்ணை நாம் காணமுடியவில்லை. அவர்கள் நமக்காகத்தேடிய சொத்துக்கள் கட்டிக் காத்த கலைகலாசாரம் காணாக் கடலில் கரைந்து விட்டன. பறந்து மண்வளம் பெற்றுவிட்டன.

ஆசியர்களின் இலக்கியமாகிய சதபத பிராமாணத்தில் கி.மு 2,300ல் ஒரு கடற்கொந்தளிப்பு உண்டானதாகக் கூறப்பட்டுள்ளது. பாபிலோனியாவுள்ள ஆப்பெழுத்துப்பட்டயங்கள் (Rabylonan Cuniform edicts) கி.மு 2000ம் ஆண்டில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பை பற்றிய விபரங்கள் கூறப்படுகின்றன.

கருணாமிர்த சாகரம் பக்கம் 20-30 மேற்கொண்ட நூல்களைப் பார்க்கும் போது சீனா தமிழ் நாடு கல்தேயம் சின்னாசியா அமெரிக்கா, ஆபிரிக்கா, அவுஸ்ரேலியா முதலிய தேசங்கள் நீர் ஊழியால் பெரும் பாகங்களை இழந்தன. அவ்வாறான அழிவின் போது நோவா போன்ற உத்தமமான குடும்பங்கள் காப்பாற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

குமரிக்கண்டம் அழிந்த காலத்தில் சின்னாசியாவில் ஒரு நோவாக் குடும்பமும், தென்தமிழ் நாட்டில் ஒரு வித்திய விரதன் குடும்பமும், சீனாவில் ஒரு போகியன் குடும்பமும் அமெரிக்காவில் ஒரு புக்கன் குடும்பமும் ஆபிரிக்காவில் ஒரு உடுக்கண்ணன் குடும்பமும் தப்பிப்பிழைத்தனர் என வரலாறு கூறுகிறது.

அறிஞர் எலியட்டின் கூற்றுப்படி 10.00.000ம் ஆண்டில் குமரியில் தமிழர் வாழ்ந்த பகுதியில் ஏற்பட்ட கடற்கொந் தளிப்பால் கடல் கடந்த தமிழர்கள் மேற்கே அகேடியா, சுமேரியா, பாபிலோனியா ,எகிப்து முதலிய நாடுகளுக்கும் கிழக்கே கடாரம் , சீயம் மலாயா ,பாலி மணிபல்லவம் சுமத்திரா போன்ற நாடுக்ளுக்கும் , பரந்து விரிந்து சென்று அமர்ந்தார்கள்.

**பூ.ம. செல்லத்துரை**



எகிப்தியர்கள் தங்கள் மூதாதையர் பாண்ட என்னும் நாட்டிலிருந்தும் எல்என்ற நாட்டிலிருந்தும் வந்ததாகக் கூறுகிறார்கள். எல் என்பது ஓளி சூரியனைக் குறிக்கின்றது. எல்லம் என்பது இலங்கையின் ஆரம்பப் பெயர்களில் ஒன்று. அதுபோல பாண்ட் என்றால் இலங்கையின் மாந்தைத்துறை முகத்தின் பழைமையை கூறும் சொல் என அறிஞர் பொன் அருணாசலம் கூறியுள்ளார: இன்று எகிப்தியர் மதக்கடவுளான அல்லாவின் பெயரிலுள்ள அல் கூடஓளி சூரியன் என்ற பொருள்களையே தருகிறது இன்றும் இஸ்லாமியர் சிவனொளி பாதமலையையும் கதிர்காமத்தையும் உரிமை கொண்டாடுவதைப் பார்த்தாலும் ஹச்சிக்குப் போகும். இஸ்லாமியர்கள் வேட்டியும் சால்வையும் அணிந்து செல்வதும் பள்ளிவாசலுக்குள் கைகால் அலம்பிச் செல்லும் பழக்கமும் சைவப் பாரம்பரியத்தை நிலையாகக் கொண்ட பாரம்பரியத்தைக் காட்டுகிறது.

எகிப்து நாட்டுப் பெண்களின் உடலமைப்பு மலையாளப் பெண்களின் உடலமைப்பை ஒத்திருக்கிறது என உடல் நூல் வல்லோர் கூறுகிறார்கள்.

அரவம் என்றால் பாம்பு. பாம்பை வழிபடுவோர் அரவர் அரவர்கள் பேசியமொழி அரபுமொழி. அரவர்கள் வாழ்ந்த நாடுஅரபு எனஅழைக்கப்படட்து. அரவர் என்றால் தமிழர்கள். தமிழர்களை ஆந்திராக்கார்கள் அரவர் என அழைத்தார்கள். கலிங்கத்துப் பரணியில் அரவர் 'படையெனத் தமிழ்படையை அழைத்துள்ளார்கள். பாம்பு வழிபாடு ஆரம்பகால மத்தியத்தரைக் கடல் பகுதிகளில் இருந்ததாக கலாநிதி க.ப அறவாணன் தான் எழுதிய பாம்பு வழிபாட்டில் கூறியுள்ளார்.பாரதத்தில் துரியோதனனை அரவக்கொடியோன் என அழைக்கப்பட்டுள்ளது.

எகிப்து நாட்டில் கட்டப்பட்டுள்ள பிரமிட்டுகளில் சேலம் ஏத்தினால் செய்யப்பட்ட கருவிகளும் சிறப்பாக தமிழ் நாட்டுப் பொருள்களும் காணப்பட்டதே சான்றாகும்.

அரபு மொழியின் தாய்மொழி தமிழ் மொழியென அறிஞர் மருதூர் மஜித் தானெழுதிய மத்தியத்தரைக் கடல் பிரதேசத்திலிருந்து மட்டக்களப்பு வரை என்றநூலில் கூறியுள்ளார். இஸ்லாத்தை உருவாக்கிய பெருமானார் தமிழிலே வேதத்தை ஓதினோர். என மூதறிஞர் மனுவை முஸ்தப்பா கூறுகிறார்.

## அமெரிக்கா கடையவில் 100.000 ஆண்டு பழமைவாய்ந்த சிவன்கோயில் கட்டடம் இருந்தாகத் தொல் பொருள் ஆய்வில் நிருபணமாகியுள்ளது

சுமேரியா, அகேடியா, பாபிலோனியா ஆகிய நாடுகளிலும் கிழக்காசியாவிலும் சிவவழிபாடு நிறைந்திருந்த தடயங்கள் தொல் பொருள் ஆய்வின் மூலம் அம்பலத்திற்கு வந்துள்ளன.

அமெரிக்கா கடையலில் 100.000 ஆண்டு பழமைவாய்ந்த சிவன்கோயில் கட்டடம் இருந்தாகத் தொல் பொருள் ஆய்வில் நிருபணமாகியுள்ளது என செந்தமிழ்ச் செல்வி 01, 16 2பக்கம் 88ல் கூறப்பட்டுள்ளது.

எனவே பல்வேறு கடற்கொந்தளிப்பால் குமரிக்கண்டம் வெடித்து அகன்றும் ஆழியில் அமிழ்ந்தும் விட்டது. இந்த கடலின் ஆக்கிரமிப்பால் தமிழர் தம் மூதாதையர் அரும்பாடுபட்டு சேர்த்து வைத்த எண்ணற்ற அரும் அறிவுப் பொக்கிஷங்களான புத்தகங்கள் அழிந்து மறைந்த கதையை அடுத்த வாரத்தில் பார்ப்போம்.

# இந்தியாவும் ஈழத்தமிழரும்

இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பான தமிழ் அமைப்புக்களின் உணர்வலைகள் பற்றியும், இந்த ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஒவ்வொரு தமிழ் அமைப்புக்களும் எடுத்திருந்த நிலைப்பாடுகள் பற்றியும், கடந்த சில வாரங்களாகப் பார்த்து வருகின்றோம்.

ஈழத்தமிழர்கள்மீது திணிக்கப் பட்டிருந்த இந்த ஒப்பந்தத்திற்கு முற்றிலுமாகத் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்த விடுதலைப் புலிகள், இந்த ஒப்பந்தத்தினால் ஈழத் தமிழர்களின் எதிர்கால இருப்புக்கு ஏற்பட இருந்த அபாயத்தையும் நன்கு உணர்ந்தே இருந்தார்கள். அதனால் இந்திய அரசின் செயல்களை எதிர்க்கும் முடிவுக்கு வந்திருந்தார்கள். திலீபனின் உண்ணா விரதத்தின் மூலம், அகிம்சை வழியில் தமது எதிர்ப்புக்களை இந்தியாவிற்கு வெளிப்படுத்த ஆரம்பித்தார்கள். ஆனால், இந்த உண்ணாவிரதத்தின் போதும், அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து இடம்பெற்ற சில அசம்பாவிதங்களின் போதும் இந்தியா நடந்துகொண்ட விதம், வேறு வழி இல்லாமல் புலிகளை மீண்டும் ஆயுதங்களை நோக்கியே நகரவைத்தன.

இந்தச் சம்பவங்களின் தொடர்ச்சியை மிக விரிவாக ஆராயும் முன்பதாக, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள், இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை உலகிற்கும், குறிப்பாக இந்தியாவிற்கும் வெளிப்படுத்தியிருந்த மற்றொரு சம்பவத்தையும் பார்த்துவிடுவது அவசியம்.

**பிரபாகரனின் 'புரொண்ட்லைன்' சஞ்சிகைப் பேட்டி:**

இந்தியாவில் இருந்து வெளியாகும் 'புரொண்ட்லைன்' சஞ்சிகைக்குப் பிரபாகரன் அவர்கள் செவ்வி ஒன்றை வழங்கியிருந்தார். இந்திய-இலங்கை ஒப்பந்தக் காலத்தில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட இந்தச் செவ்வியின் போது, ஒப்பந்தம் பற்றிய புலிகளின் நிலைப்பாட்டையும், ஒப்பந்தம் தொடர்பான புலிகள் மேற்கொள்ள இருந்த அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியும், பிரபாகரன் அவர்கள் மிகவும் சூட்சுமமாகத் தெளிவு படுத்தியிருந்தார். ஒப்பந்தம் தொடர்பாக எதிர்காலத்தில் புலிகள் மேற்கொள்ள இருந்த நடவடிக்கைகளின் எதிர்வுகூறலாகவும் இந்தச் செவ்வி அமைந்திருந்தது.

**அந்தப் பேட்டியின் சாராம்சம் இதுதான்:**

கேள்வி: இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: இந்த ஒப்பந்தம் இந்திய அரசாங்கத்திற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒரு உடன்பாடு. இது பற்றி எமது மக்களுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை.

இந்த ஒப்பந்தத்தில் சர்வஜன வாக்கெடுப்புப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வடக்கு-

**- நிராஜ் டேவிட்-**

கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டுமானால், கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடாத்தவேண்டும் என்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண பெரும்பான்மையினால் இந்த இணைப்புத் தீர்மானிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்குக்கிழக்கு மாகாணங்கள் அடங்கிய நிலப்பரப்பானது எமது தாயகப் பூமி. இதில் இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை.

1983 இல் வடக்குக்கிழக்கில் ஒரு சில இராணுவ முகாம்களே இருந்தன. ஆனால் தற்பொழுது 200 இற்கும் அதிகமான இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதிகளில் உள்ள சிங்களக் குடியேற்றங்களைப் பாதுகாக்கும் நோக்குடன்தான் இந்த முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த இராணுவ முகாம்களை அகற்றாமல் சிங்களக் குடியேற்றங்களை அகற்றமுடியாது என்பதுடன், இந்த இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பாகவோ அல்லது இந்தச் சிங்களக் குடியேற்றங்களை அகற்றுவது தொடர்பாகவோ, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இது, இந்த ஒப்பந்தத்தில் காணப்படுகின்ற மிகப்பெரிய குறைபாடு.

தமிழ்ப் பகுதிகளை ஊடுருவி உள்ள ஸ்ரீலங்கா ஆயுதப் படைகள் தமிழ் மக்கள் மீது புரிந்து வரும் அட்டூழியங்களைத் தடுத்து நிறுத்தவே இந்தியப் படைகள் இலங்கைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களப்

## இந்தியா தொடர்பாக



# தலைவர் பிரபாகரன் அவர்கள் வெளிப்படுத்திய நிலைப்பாடு

படைகள் நிலைகொண்டுள்ள இடங்களுக்கு இந்தியப்படைகள் செல்லவில்லை. இந்தியப்படையணிகள் பெரும்பாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள்ளேயே முகாமிட்டு நிலைகொண்டுள்ளன. இயக்கச்சி, பளை, கொடிகாமம், தாளையடி, பண்டத்தரிப்பு, காங்கேசன்துறை என்று இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணக் குடா நாட்டினுள்ளேயே முடங்கிக் கிடக்கின்றார்கள்.

தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் 200 இற்கும் அதிகமான சிங்கள இராணுவ முகாம்கள் அகற்றப்படவேண்டும் என்ற எமது கோரிக்கைகளுக்கு இந்திய அரசு செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை. மாறாக, தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ்ந்துவரும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலேயே இந்திய இராணுவம் குவிக்கப்பட்டு வருகின்றது. இதனால் எமது மக்கள் மத்தியில் அச்சமும், சந்தேகமும் தோன்றியுள்ளது.

தமிழர் தேசியப் பிரச்சினையில் இரண்டு அடிப்படையான அம்சங்கள் உள்ளன. ஒன்று தமிழர் தாயகம். அதாவது வடக்குக் கிழக்கு இணைந்ததும், பூகோளரீதியாக முழுமை யுடையதும், பிரிக்கமுடியாததுமான தமிழரின் தாயகப் பூமி. இரண்டாவது, தமிழரின் நில உரிமைப்பாடு. இந்த இரண்டு அடிப்படையான பிரச்சினைகளையும் இந்திய-இலங்கை உடன்படிக்கை தீர்த்துவைக்கத் தவறிவிட்டது என்றே கூறவேண்டும்.

**ஸ்ரீலங்கா இராணுவம் வெளியேற வேண்டும்:**


கேள்வி: இந்தியா பற்றியும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பற்றியும் உங்களது அபிப்பிராயம் என்ன?

பதில்: இந்திய அரசு தனது சொந்தத் தேசிய நலனை மட்டுமே கருத்திற் கொண்டு அவசரஅவசரமாக இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கின்றது. நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டுவரும் ஈழத்தமிழ் மக்களின் அபிலாஷைகளையும், பிரச்சினைகளையும் இந்தியா கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

கேள்வி: இது பற்றி மேலும் விளக்க முடியுமா?

பதில்: இன்று முல்லைத்தீவில் தமிழ் மக்கள் அகதிகளாக வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றார்கள். தமிழ்ப் பகுதிகளில் மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடாத்தி வருகின்றார்கள். எமது மக்களின் பிரச்சினைகள் எதுவும் இதுவரை தீர்க்கப்பட்டதாக இல்லை.

இதற்கிடையில் நாங்கள் எமது ஆயுதங்களைக் கையளிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். மக்களின் பிரச்சினைகள் முதலில் தீர்க்கப்படவேண்டும். அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளச் சென்று குடியமர



"தமிழர் தேசியப் பிரச்சினையில் இரண்டு அடிப்படையான அம்சங்கள் உள்ளன. ஒன்று தமிழர் தாயகம். அதாவது வடக்குக் கிழக்கு இணைந்ததும், பூகோள ரீதியாக முழுமையுடையதும், பிரிக்கமுடியாததுமான தமிழரின் தாயகப் பூமி. இரண்டாவது, தமிழரின் நில உரிமைப்பாடு. இந்த இரண்டு அடிப்படையான பிரச்சினைகளையும் இந்திய-இலங்கை உடன்படிக்கை தீர்த்துவைக்கத் தவறிவிட்டது."

-தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.

வேண்டுமானால், அப்பகுதிகளை ஆக்கிரமித்துள்ள ஸ்ரீலங்காப் படைகளின் இராணுவ முகாம்கள் அகற்றப்படவேண்டும். ஆனால், சிங்கள இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு இந்திய இராணுவம் தயாரில்லை போன்றே தெரிகின்றது. ஆகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படப்போவதில்லை. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக இந்தியா எம்முடன் பேச்சுக்களை நடாத்தியிருந்தால் சிங்கள இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் இருந்து அகற்றப்படவேண்டும் என்ற நிபந்தனையை விதித்திருப்போம். ஆனால் அப்படியான பேச்சுக்கள் எதையும் இந்தியா எம்முடன் மேற்கொள்ளவில்லை.

கேள்வி: ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி, சுதுமலையில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் நீங்கள் உரை நிகழ்த்தும்போது, ராஜீவ் காந்தியுடன் மனம் விட்டுப் பேசியதாகத் தெரிவித்ததுடன், அப்போது அவர் உங்களிடம் சில வாக்குறுதிகளைத் தந்திருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தீர்கள். எப்படியான வாக்குறுதிகளை ராஜீவ் காந்தி உங்களிடம் தந்திருந்தார்?

பதில்: வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் மக்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும் என்று ராஜீவ் காந்தி எனக்கு வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லமுடியாத நிலைதான் காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்திற்கு இந்திய இராணுவம் அனுப்பப்பட்டிருக்கின்ற போதிலும், தமிழ் மக்கள் அங்குள்ள பல பிரதேசங்களுக்குச் செல்லமுடியாத நிலைதான் உள்ளது. சிங்கள இராணுவத்தினர், சிங்கள ஊர்காவல் படையினர், சிங்களக் குடியேற்றவாசிகள் ஆகியோரின் கடும் எதிர்ப்புக்கள் காரணமாகத் தமிழ் மக்கள் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்ப முடியாதிருக்கின்றது. தனியார் வீடுகள், பாடசாலைகள், பொதுக் கட்டிடங்கள், போன்ற இடங்களில் எல்லாம் சிங்கள இராணுவம் நிலைகொண்டுள்ள நிலையில், மக்கள் எவ்வாறு அங்கு மீளக் குடியேறுவது?

கேள்வி: கிழக்கில் விடுதலைப் புலிகள் பலம் வாய்ந்த அமைப்பாகச் செயற்பட முடிகின்றதா?

பதில்: கிழக்கில் எமது அமைப்பு பலம்வாய்ந்த ஒரு அமைப்பாகச் செயற்பட முடிகின்றது. திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நாம் இணக்கவேலைகளை விரிவாக்கி வருகின்றோம். இப்பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேறியுள்ள இடங்களில்கூட எமது உறுப்பினர்கள் இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். மூதூரில் விடுதலைப் புலிகளின் கொடியை ஏற்றிவைத்த பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்கு விரைந்த இந்திய இராணுவத்தினரும், அரசாங்க அதிபரும் புலிக்கொடியை இறக்குமாறு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளார்கள். இருந்த போதிலும் அதற்குக் கட்டுப்பட பொதுமக்கள் மறுப்புத் தெரிவித்ததுடன், தமது நடவடிக்கைகளில் உறுதியாக இருந்திருக்கின்றார்கள். கிழக்கிலங்கை மக்கள் அரசியல் விழிப்புணர்வு மிக்கவர்களாக, எமது அமைப்பிற்கு அனைத்து ஆதரவினையும் வழங்கி வருகின்றார்கள்.

**துரோகங்களின் அத்தியாயங்கள் - 26**

இவ்வாறு, பிரபாகரன் அவர்கள் தனது பேட்டியில் தெரிவித்திருந்தார்.

பிரபாகரன் அவர்கள் இந்தச் செவ்வியை வழங்கி தற்பொழுது சுமார் 15 வருடங்கள் கடந்துவிட்டுள்ளன.

இருந்த போதிலும், தற்போதைய சமாதான முன்னெடுப்புக்களின் போது இடம்பெற்றுவரும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, பிரபாகரன் அவர்கள் அன்று வழங்கிய செவ்வியில் காணப்படுகின்ற சில அம்சங்கள், இன்றைக்கும் பொருந்துவதாக இருப்பது நோக்கத்தக்கது.

*துரோகம் தொடரும்....*

# வலிமையடைந்து வரும் தமிழ் முஸ்லிம் உறவுகள்

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமான உறவுகள் தொடர்ந்து பேணப்படுவதில் விடுதலைப் புலிகள் உறுதியாகச் செயல்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் காலம் காலமாக ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்தனர். சிறிலங்கா அரசின் பிரித்தாளும் சூழ்ச்சியின் காரணமாகக் முஸ்லிம் அரசியல் வாதிகளை இவ்வாறான சிங்கள அரசியல் தலைவர்கள் சிலர் நன்கு பயன் படுத்தியதன் காரணமாக கடந்த 1990ம் ஆண்டு தமிழ் முஸ்லிம் உறவுகளில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் சிங்கள அரசானது தாம் நினைத்ததைச் சாதித்து விட்டோம் என்ற பூரிப்பும் காலத்தைக் கடத்தியது.

ஆனால் இவ்வாறான ஒரு நிலைமை மீண்டும் எமது சகோதர இனங்களான முஸ்லிம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் ஏற்படக்கூடாது என்பதில் முஸ்லிம் அரசியல் வாதிகளை விட விடுதலைப் புலிகள் மிகவும் அவதானமாகவும், நிதானமாகவும் செயல் படுவதை எவராலும் மறுக்க முடியாது. கடந்த 19 மாதங்களாக சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன் படிக்கையின் பின் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதி நிதிகளின் அனுசரணையுடன் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையில் பல சந்திப்புக்கள் இடம் பெற்றன. அந்தச் சந்திப்புக்களின் அடிப்படையில் முஸ்லிம் விவசாய மக்களின் காணிகள் தமிழ்ப் பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகளைத் தங்கு தடையின்றி செய்வதற்கு விடுதலைப் புலிகள் உறுதி அளித்தனர்.

முஸ்லிம் அரசியல் வாதிகளில் சிலர் தமது சுய இலாப அரசியலுக்காகவும், தமது கட்சி அரசியலுக்காகவும் விடுதலைப் புலிகளின் சந்திப்பில் கதைக்கப்பட்ட விடயங்களை, ஒத்துக்கொண்ட விடயங்களை உதாசீனம் செய்தும் முஸ்லிம் மக்களைச் சீண்டி விடக்கூடிய விடயங்களைப் பிரசாரங்களில் தொடர்ந்தும் ஈடு பட்டுக் கொண்டே வருகின்றனர்.

முஸ்லிம்இளைஞர்கள் சம்மாந்துறை கொல்லப்பட்ட சம்பவம், சாய்ந்தமருது இளைஞர்கள் ஓட்டமாவடியில் ஆயுதக் கொள்வனவுக்காகச் சென்று காணாமல் போன சம்பவம் இவைகளை விடுதலைப் புலிகள்தான் செய்ததாகப் பொய்ப் பிரசாரங்களைக் கட்டவிழ்த்தனர். மீண்டும் முஸ்லிம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கு மிடையே மோதலைத் தோற்று விக்கும் முயற்சியில் ஈடு பட்டனர். ஆனால் உண்மை வெளிவரத் தொடங்கியதும், விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் இளைஞர் கொலைகளுக்கும் எந்த விதமான தொடர்புகளும் இல்லை என்பதை முஸ்லிம் மக்களும், முஸ்லிம் மதத் தலைவர்களும், முஸ்லிம் வர்த்தகர்களும், முஸ்லிம் புத்தி ஜீவிகளும், முஸ்லிம் இளைஞர்களும் உணர்ந்து கொண்டமையினால் வேண்டத் தகாத பிரசாரங்களுக்கு ஆப்பு வைக்கப்பட்டது.

இருந்தும் முஸ்லிம் மக்களைக்

**(பாத்திரன்)**

குழப்பும் விதத்தில் அறிக்கைகளையும், கூட்டங்களையும் இன்னும் அரசியல் வாதிகளில் சிலர் நடாத்தி வருவது வேண்ட தகாத செயலாகும்.

இவ்வாறான நிலையிலும் விடுதலைப் புலிகள் மிகவும் நிதானமாகச் செயல் பட்டு தமது நிலைமைகளை முஸ்லிம் மக்கள் மத்தியில் எடுத்துக் கூறி வருவது பாராட்டப்பட வேண்டிய ஒன்றே.

இதன் வெளிப்பாடாக முஸ்லிம் அரசியல் வாதிகளை விட்டு சமாதானத்தை விரும்பும் முஸ்லிம் பிரதி நிதிகளுடன் சந்திப்புக்களை நடாத்துவதில் விடுதலைப் புலிகள் தீவிரமாக ஈடுபடுகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திக்கு பின் முஸ்லிம் பிரதி நிதிகளினுடனான சந்திப்புக்கள்



போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் அனுசரணை இன்றி நடாத்தப் பட்டு வருகிறது. நாங்கள் சகோதரர்கள். எமக்கு எந்த குழுவினரின் அனுசரணையும் தேவையில்லை. எமது பிரச்சினைகளை நேரடியாகப் பேசித் தீர்வு காணுவோம் என்ற நோக்கில் தான் கடந்த வாரம் 20ம் திகதி சனிக்கிழமை முதன்முதலாக விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் தலைமையிலான உயர் மட்ட உறுப்பினர்களுக்கும், வடக்குக் கிழக்கு மாகாண முஸ்லிம் சமாதான பேரவையின் உறுப்பினர்களுக்கும் இடையிலான ''நட்புறவு'' சந்திப்பு மிகவும் புரிந்துணர்வுடன் இடம் பெற்று கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவாகவும் , விவேகமாகவும் தீர்வு காணக்கூடிய விதத்தில் தொடர்ந்து முஸ்லிம் மக்களின் சமூகப் பிரதி நிதிகளுடன் பிரதேச ரீதியான சந்திப்புக்களை நடாத்தி தமிழ் முஸ்லிம் உறவுகளை வளர்க்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டு வருவது வரவேற்கத் தக்க விடயமாகும்.

கடந்த வாரம் சனிக்கிழமை கரடியனாறு தேனகத்தில் மூத்த தளபதி கேணல் கருணா அம்மானுடன் சந்தித்து எடுக்கப்பட்ட விடயங்களை அமுல் படுத்தும் நடவடிக்கையாக மேலும் பல சந்திப்புக்கள் பிரதேச ரீதியாகவும், கோட்ட ரீதியாகவும் தொடர்ந்து இடம் பெறுகின்றன.



கடந்த ஞாயிற்றுக் கிழமை 21ம் திகதி காத்தான்குடி முஸ்லிம் பிரதி நிதிகளினுடனான சந்திப்பு மட்டு நகரில் இடம் பெற்றது. விடுதலைப் புலிகளின் சிறப்பு தளபதி த. ரமேஸ், தலைமையிலான மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன், நிதித்துறைப் பொறுப்பாளர் குகநேசன், நகர அரசியல்பிரிவுப் பொறுப்பாளர் சேனாதிராசா ஆகியோர் கலந்து கொண்டனர். காத்தான்குடி முஸ்லிம் பிரதி நிதிகளான ஏ.எல் அப்துல் கபூர், யு.எல் முவின், ஏ.எல்.எம் அலிஜார், கலைஞர் சாந்தி முகைதீன், எம்.எல் ஷிலால் காஜியார், எம்.எல் லத்தீப், ஏ.சி.எம். றமீக், லலூர்அலி ஆகியோருடன் பேச்சு வார்த்தைகளை ஏற்படுத்தியதன் வெளிப்பாடாக முஸ்லிம் சமூகத்தினருக்கும், தமிழ் பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் விவசாயச் செய்கை செய்வதற்கான பூரண பாதுகாப்பையும் அனுமதியினையும் விடுதலைப்புலிகள் தெரிவித்தமை மட்டுமல்லாமல் தமிழ் கிராமங்களில் முஸ்லிம் வர்த்தகர்கள் வியாபாரம் செய்வதற்கும் அனுமதி வழங்கியுள்ளனர்.

சந்திப்பின் போது காத்தான்குடி முஸ்லிம் பிரதி நிதிகள் விடுதலைப் புலிகளை தமது கிராமத்துக்கு நேரடியாக வந்து அங்குள்ள மக்களைச் சந்திக்கவேண்டும் என அழைப்பு விட்டனர்.இந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்பு தளபதி த.ரமேஸ் எதிர் வரும் அக்டோபர் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பத்து தளபதிகள் அடங்கிய குழுவினரை காத்தான் குடிக்கு நேரடியாகச் சென்று முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடச் சம்மதித்துள்ளமை முஸ்லிம் தமிழ் மக்கள் மத்தியில் மேலும் நம்பிக்கையை கட்டி எழுப்பும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

இதே போல் பிரதேச கோட்ட மட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரதேச அரசியல் பொறுப்பாளர்கள் அடங்கிய குழுவினருடன் ஏறாவூர், ஓட்டமாவடி, காத்தான்குடிப் பகுதி முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்புக்களை நடாத்தி சந்தேகங்களைக் களைத்து தமிழ் முஸ்லிம் உறவுகளை தங்கு தடையின்றிப் பேணி வருவது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால் முஸ்லிம் வாதிகள் தமது பிரசாரங்களைத் தொடர்ந்தும் தமிழ் முஸ்லிம் இனங்களைப் பிரிக்க கூடிய விதத்தில் ஈடுபடாமல் இவ்வாறான சாதாரண முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளால் தடுக்க முயல்வது கட்டாய தேவையாகும்.

முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பு தேவையென அப்பாவி முஸ்லிம் இளைஞர்களைப் பொலிஸ் படையில் சேர்ப்பதால் மட்டும் முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பு உறுதியாகி விடும் என பகல் கனவு காணும் அரசியல் வாதிகள் யதார்த்த நிலைமையினை உணர்ந்து, கடந்த கால வரலாறுகளைத் திரும்பிப் பார்த்து தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இன ஐக்கியமாக வடக்குக் கிழக்கு தாயகத்தில் வாழ வேண்டிய சூழலைத் தோற்றுவிக்க முன் வர வேண்டும்.

இன்று சிங்கள அரசியல் வாதிகள் சிலர் முஸ்லிம் அரசியல் வாதிகளைத் தூண்டி விட்டு வடக்கு வேறு, கிழக்கு வேறு எனப் பிரிக்கும் நடவடிக்கையில் இறங்கி வருவதை ஒட்டு மொத்தமான முஸ்லிம் மக்கள் எதிர்க்க வேண்டியது காலத்தின் தேவையாகும். வடக்கு, கிழக்கு இணைந்த தாயகமே எமது தாயகம் என்பதைனை ஒவ்வொரு முஸ்லிம் மகனும் தயக்கமின்றி கூற வேண்டும். சிங்கள அரசியல் வாதிகளோ, முஸ்லிம் அரசியல் வாதிகளோ தமிழ் அரசியல் வாதிகளே ஏன் சர்வ தேசமே எதிர்த்தாலும் வடக்குக் கிழக்குத் தாயகம் வடக்கு வேறு, கிழக்கு வேறு என பிரிக்க முடியாது என்பதை இந்த அரசியல் வாதிகள் அறியாமல் இருப்பதுதான் மிகப்பெரிய வேதனை. அரசியலில் பாண்டித்தியம் பெற்றவர்கள் என்று கூறுபவர்கள் இதனை அறியாது கொதிப்பது அவர்களின் அரசியல் வங்குறோத்துதனத்தையே வெளிக்காட்டுகிறது.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

---

பகிரங்கமடல் — அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.



## அம்மா உதவி வேண்டாம் சும்மா விட்டால் போதும்

அன்புடன் தமிழக முதலமைச்சருக்கு :-

ஈழத் தமிழினத்தின் விடுதலை வரலாற்றில் தமிழக உணர்வாளர்கள், ஈழத்தமிழினத்தின்விடுதலைப் பற்றாளர்கள் காட்டி வரும் பேராதரவு என்றும் தமிழீழ மக்களால் மறக்க முடியாத உண்மை.

அதேசமயம் தமிழீழ விடுதலைக்குத் துரோகமிழைத்தவர்களை தூது செய்பவர்களையும் ஈழத்தமிழினம் என்றும் மறந்துவிடாது என்று நினைக்கின்றேன்.

தற்போது தமிழ் நாட்டில் ஈழ விடுதலைக்காகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு நல்கியவர்கள் விடுதலைப் புலிகளின் விடுதலை போராட்ட நியாயத்தை ஏற்றுக் கொண்டு அதனைஆதரித்துப் பேசியவர்கள் எல்லோரும் உங்களின் அதிகாரத்தினால் விலங்கிடப்பட்டு தற்போதுசிறைக் கூடங்களில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அந்த வரிசையில் மற்றுமொரு உணர்வாளன் மத்திய அமைச்சரான கண்ணப்பன் மீதும் உங்களின்கண்கள் பட்டு விட்டதோ.!

வை.கோ. பழ நெடுமாறன் என ஒன்பது பேர் உங்களின் அதிகாரத்தினால் சிறை வாசம் அனுபவித்து வருவது வேதனைக்குரியது. அமைதிப் படையென தமிழீழ மண்ணில் காலடி எடுத்து வைத்த உங்கள் நாட்டுப் படை எமது இனத்தை வேட்டையாடியது. இந்தக் காமுகப் படையை அனுப்பிய சூத்திரதாரி ராஜீவ் படுகொலை செய்யப்பட்டார். இவை கடந்து போன நிகழ்வுகள்.

ராஜீவின் படுகொலை ஒரு துன்பியல் நிகழ்வு எனத் துல்லியமாக எடுத்துக் கூறப்பட்டும் கூட தமிழகத் தலைவி பராமுகமாக ஈழத்தமிழினத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் உற்று நோக்குவது முறையற்ற செயல்... கடந்தகால திரைப்பட வரலாற்றில் ஜெயலலிதா- எம்.ஜி.ஆர், ஜெயலலிதா-சிவாஜி கணேசன், ஜெயலலிதா- ஜெமினி கணேசன் இப்படி எத்தனை கதாநாயகர்களுடன் இந்தக் கதாநாயகியும். இருபது முப்பது வருடங்களுக்கு முன்னர் உங்கள் பெயர் எங்கள் தமிழ் மக்கள் மனங்களில் ஒரு நடிகையாகஒரு சோதரியாக வலம் வந்தது.

இப்போது அப்படிஅல்ல ஒரு வில்லியாக, சூர்ப்ப னையாக, ராட்ஷஷியாக, ஒரு எதிரியாக கருத வேண்டியளவிற்கு உங்கள் போக்கு வேகமாக மாறிக் கொண்டு செல்கின்றது.

அதனால் தான் உங்களால் பழ நெடுமாறன் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட போது தமிழீழத்தில் உங்களின் கொடும்பாவி கட்டிஎங்கள் தமிழ் மக்கள் எரித்தார்கள். ஆத்திரத்துடன் பேசினார்கள்.

இப்போது இதே குணம் குறிகள் குறையாமல் ஒரு சூனியக்காரியாக எமது விடுதலைக்காகப்போராடும். விடுதலைப் புலிகளுக்கு எதிரியாகச் செயற்படும் சக்திகளை ஆதரிப்பவர்களாக செயற்படுவது அவ்வளவு நன்றல்ல.

எங்கள் இனம் போராடுவது எமது உரிமையை பெற்றுக் கொள்வதற்குத்தான். இதனால் தமிழகத்துக்கோ அல்லது பாரத தேசத்திற்கோ எந்த ஆபத்தும் இல்லை எனவே உங்களிடமிருந்து உதவி வேண்டாம் அம்மா எங்களை விட்டால் போதும்

அலைமகன்

# மேனி அழகை பாதுகாப்போம்



நம் தோல் பளபளப்பாகவும், ஆரோக்கியமாகவும் இளமையாகவும் இருக்க புரதம், கொழுப்பு, மாச்சத்து, விற்றமின்கள், தாதுப்பொருட்கள் ஆகியவை மிகவும் அவசியம்.

பழங்கள், பழச்சாறுகள் (எலுமிச்சை, தோடைவகை) தேன் முதலியவை இரத்தத்தைச் சுத்திகரித்து நம் சருமத்தை ஆரோக்கியமாகவும், பளபளப்பாகவும் வைக்க உதவும். அதுவும் கோடைகாலத்தில் நம் சருமத்திற்கு இவை மிகவும் அவசியம்.

பூசனி, வெள்ளரி, முலாம்பழம். இளநீர் இவற்றைத் தவிர சிறிது சீரகத்தை நீரில் போட்டுக் காய்ச்சி அந்த நீரை அருந்தினால் கோடைகாலத்தில் சருமத்தின் நிறம் மங்காமல் காக்கலாம். சிவப்பும், செழுமையும் அதிகரிக்கும்.

நம் தோல் எந்த வகையைச் சார்ந்ததாக இருப்பினும், குளிப்பதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னால் கொஞ்சம் தேங்காய் எண்ணெய்யை எடுத்து, உடல் முழுக்க அழுத்தமாகத் தேய்த்துவிட்டுக் குளித்தால் தோல் பளபளப்பாக இருக்கும். கருமைநிறமும் மாறும்.

கோடைகாலத்தில் பகல் 12மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை வெயிலில் வெளியே செல்வதைக் கூடியவரை தவிர்ப்பது நல்லது.

நம்மைப் போன்ற உஷ்ணப் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு எல்லாக் காலத்திலும் ஏற்ற உடைகள் பருத்தியால் ஆன உடைகள் தான். செயற்கை இழை ஆடைகள் சருமத்திற்குத் தீங்கு விளைவிக்கும். அதிலும் உள்ளாடைகள் கண்டிப்பாகப் பருத்தி ஆடைகளாக இருப்பதே நல்லது.

கோடை காலத்தில் மற்ற மேக்கப் சாதனங்களை அதிகமாக உபயோகிக்காமல் மிருதுவான கிறீம்களை மிதமாக உபயோகிப்பதே நல்லது.

நம் தோலின் அழகைப் பாதிக்கும் முகப்பருத் தொல்லைகளை விற்றமின் 'ஏ' கிறீம்களை உபயோகித்துப் போக்க வேண்டும். கையால் கிள்ளிவிடக் கூடாது.

இறுக்கமான ஆடைகளை அணிதல், வெயிலில் சுற்றுதல், காரமும், மசாலாவும் அதிகம் கலந்த உணவுவகைகளை அடிக்கடி சாப்பிடுதல், சோப், மேக்கப் சாதனங்களையும் அடிக்கடி உபயோகித்தல், அடிக்கடி மாற்றுதல் முதலியவை சருமத்தின் இளமைக்குப் பெருந் தீங்கு விளைவிப்பவை ஆகும். இவற்றைத் தவிர்ப்பது நல்லது.

பிரசவமாகும் பெண்கள் தோலில் உண்டாகும் சுருக்கத்தையும், தழும்புகளையும், கருமையையும் போக்கிப் பளபளப்பாக ஆலிவ் எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றைத் தேய்த்து மஜாச் செய்ய வேண்டும்.

~வாசகி ~ மட்டுநகர்

# விழித்தெழு பெண்ணே!



பெண்னென்றால் பேயும் இரங்குமென்பது அந்தக்காலம்!
பெண்ணை இளக்காரமாய் நினைப்பது இந்தக் காலம்!
பெண்னென்று பிறந்து விட்டால் இல்லையோ விடிவுகாலம்!
பெண்ணுக்கு இனிமேலும் வேண்டாம் அழிவுகாலம்!

அன்னை மடியே போர்க்களம் ஆகுதடி சிலருக்கு!
கணவன் வீடே அமர்க்களம் ஆகுதடி பலருக்கு!
கருவில் ஆரம்பித்து கல்லறையில் முடிவடையும்!
கரடு முரடான காவியமா உனது வாழ்க்கை?

பிஞ்சுவயதில் கணவனை இழந்து விட்டு,
வெண்சேலை தனை உரிமை கொண்டு,
நல்லகாரியம் செய்யத் தடைபோட்டு,
உன்னை உதறி விட்டார் சொந்தபந்தம்.



பெற்றோரை இழந்து விட்டால் அநாதை,
கணவனை இழந்து விட்டால் விதவை,
உறவினரோ சேர்ந்திருந்து கொடுமை,
தனியாகத் தலைநிமிர இல்லையே வலிமை!

பெண்ணொரு விளையாட்டுப் பொம்மையல்ல!
பெண்ணை விளையாட அவள் தாயக்கட்டையல்ல!
ஏய் மானிடனே புரிந்துகொள் அவள் அழகிய பூந்தோட்டம்!
தேவை ஏற்படின் தீக் கனலும் அவள் தான்!

பெண் இனமே பூமகளே இன்னுமென்ன மயக்கமா?
பெண்ணினத்தின் கொடுமைகளை அடங்கிடவே தயக்கமா?
பொங்கியெழு புயலாக! பெண் புகழ்தனைப் பரப்பிடவே!
பாரதியின் புதுமைப் பெண்ணாக விழித்தெழு பெண்ணே!

அ. சுலோஜினி, கல்லடி

## அரிவையர்அலை





# மருத்துவக் குறிப்புக்கள்

***மூட்டுப் பகுதிகள் நிறம்மாற:***

நம்மில் சிலருக்கு முழங்கை, முழங்கால், மூட்டுப் பகுதிகள் சொரசொரப்பாகவும், கருமையாகவும் இருக்கும். இப்படியானவர்கள் எப்படியான கிறீம் வகைகளைப் பாவித்தும் பலன் கிடைப்பதில்லை. ஒரு முழு எலுமிச்சம் பழத்தைச் சாறு பிழிந்து சிலதுளி பேபி ஒயிலை (மருந்துக் கடைகளில் கிடைக்கும்) அதனுடன் கலந்து தினசரி மூன்று வேளை மூட்டுப் பகுதிகளில் தடவி வந்தால், சொரசொரப்பும், கருமையும் மறையும்.

## உடம்பில் சுடுநீர் பட்டால்.......


*சமையல் செய்யும் பெண்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சற்றுக் கவனக் குறையாயிருந்தாலும் போதும். கொதி நீரைக் காலில் கையில் பட நேரிடும். வடி கஞ்சி கையில் பட்டு விடும். அதனால் எரிச்சல் ஏற்பட்டு கொப்புளங்கள் கூட ஏற்பட்டு விடுமே. அதனால் தண்ணீரில் உப்பைக் கரைத்து அதை ஒரு துணியினால் நனைத்தெடுத்து சுடுநீர் பட்ட இடத்தில் ஒத்தி எடுங்கள். எரிச்சலும் குறையும். கொப்புளமும் வராது.*

# கேசரி



தேவையான பொருட்கள்.

| | |
|---|---|
| சீனி | 1/4 kg |
| ரவை | 1/4 kg |
| பால் | 1/2 போத்தல் |
| தண்ணீர் | 1 டம்ளர் |
| மாஜரின் | 150g or நெய் |
| கேசரிப்பவுடர் | 1 சிட்டிகை |
| வெட்டிய கஜீ | 2 மே.க.(நிரப்பி) |
| பிளம்ஸ் | 2 மே.க.(நிரப்பி) |
| ஏலப்பொடி | 1 மே.க.(நிரப்பி) |
| உப்பு | அளவிற்கு |



**செய்முறை:-**

தாச்சியை அடுப்பில் வைத்து ரவையைப் போட்டு ஓரளவாக வறுத்து எடுத்துக் கொள்க. பின்பு தாச்சியில் மிகுதியாக உள்ள மாஜரினைப் போட்டு பாலையும் நீரையும் விட்டு கேசரிப் பவுடர், உப்புத்தூள் என்பன சேர்த்துக் காச்சவும். பால் பொங்கி கொதிக்கத் தொடங்கியதும் அதனுள் வறுத்த ரவையைச் சிறிது சிறிதாகத் தூவி முழுவதுமாக நன்கு சேர்த்துக் கொண்ட பின் சீனியையும் சேர்த்துக் கொள்க. சீனி போட்ட பின் கலவை இளகிக் கொள்ளும். ஆதலால் கரண்டியால் அடிப்பிடிக்கா வண்ணம் நன்கு கிளறிக் கொண்டு மாஜரின், கஜீ, பிளம்ஸ், ஏலப்பொடி, என்பவற்றையும் சேர்த்து கலவை திரண்டு சேரும் வரை கிளறி இறக்கிக் கொள்க.

பின்பு மாஜரின் பூசியதட்டில் இக்கலவையைக் கொட்டி ஓர் வாழை இலைத்துண்டால் ஒரே சீராகப் பரப்பி "11/2 x 11/2 "அளவுடைய துண்டுகளாக வெட்டிக் கொண்ட பின் அத்துண்டின் நடுவே ஓர் பாதிக் கஜூவைப் பதித்துப் பரிமாறலாம்.

*-இராசதுரை -உமாவாணி, இராஜதுரை கிராமம், ஆரையம்பதி -03*

# தண்ணீரின் மகத்துவம்

ஒரே நேரத்தில் தசை, இருதயம், நுரையீரல் என அனைத்துப் பகுதிகளும் இயங்குகின்றன.

நீர் உடற்பயிற்சிகள் உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவி புரிகின்றன. இதனால் நாம் தினசரி வேலைகளைச் செய்யும் போது கூட உடல் உஷ்ணமடையாமல் பாதுகாக்கப்படுகிறது. குறிப்பாக நம் நாடு போன்ற உஷ்ணப் பிரதேசங்களில் நீர் உடற்பயிற்சி இன்றியமையாதது.

நீர் உடற்பயிற்சியில் எல்லாப் பகுதிகளும், அதிக சிரமமின்றி இயங்குவதால், எல்லோருக்கும், எல்லா வயதினருக்கும் ஏற்ற உடற் பயிற்சியாக இது அமைகிறது. அதிக நேரம் நீர் உடற்பயிற்சி செய்தால் உடலில் வலி ஏற்படும் என்ற பயமே உங்களுக்குத் தேவையில்லை.

மூட்டுகளில் அதிக அழுத்தம் கொடுக்கவேண்டிய தேவையில்லாததால், நீர் உடற்பயிற்சியில் நம் முதுகு, முழங்கால்கள், பாதங்கள் ஆகியவை அதிக பயனடைகின்றன.

# திரை பிம்பங்கள்

## கதைக்களம்

### காதல் கண்ணாடி

பாவுவும்~நந்தினியும் உயிருக்குயிரான தோழிகள். பாவு வாலிபன் விஜய்யைக் காதலிக்கிறாள். தன் காதலை அவனிடம் சொல்ல முயற்சிக்கிறாள். அதற்கு முன்பாக அவன் தன்னைக் காதலிக்கிறானா என அறிய விரும்புகிறாள். அவனது விருப்பத்தை அறிவது எப்படி என தன் தோழி நந்தினியைக் கேட்கிறாள்.

தோழி நந்தினியோ, பூ இவ்வளவுதானா? நாளையே பார். அவன் உன்னைத் தேடி ஓடிவர வைக்கிறேன் என்கிறாள். தோழி நந்தினியின் யோசனைப்படி, ஒரு பிரபல மருத்துவமனை சென்று பார்வையாளர்கள் பகுதியில் காத்திருக்கிறாள் பாவு. இதற்கிடையே நந்தினி விஜய்யைச் சந்திக்கிறாள். அவனிடம் பாவு மிக ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருப்பதாகக் கூறுகிறாள். அவள் கூறியது தான் தாமதம். விஜய் அந்த மருத்துவமனை நோக்கிப் புயலாகப் பறக்கிறான். ஓடிவந்த வேகத்தில் வழியில் வந்த வாகனம் மோதுகிறது. அதையும் பொருட்படுத்தாமல் ரத்தக் காயத்தோடு ஓடோடிச் சென்று பாவு இருக்கும் மருத்துவமனை சென்றடைகிறான்.

ஆனால் அங்கு பாவு எந்தவிதமான ஆபத்தும் இல்லாமல், புன்சிரிப்போடு அமர்ந்து இருக்கிறாள். பாவுவைப் பார்த்ததும் அவனுக்கு ஆபத்து ஏதும் இல்லை என்பதை அறிந்து நிம்மதி அடைந்து அவளிடம் எதுவும் பேசாமலே திரும்புகிறான். இதைப்பார்த்த பாவு, விஜய்யை வழிமறித்து, உன் மனதில் இவ்வளவு ஆசை என் மீது இருக்கிறது. இப்படியிருக்க அதை ஏன் என்னிடம் சொல்ல மறுக்கிறாய் எனக் கேட்கிறாள். அதற்கு விஜய் என்ன கூறுகிறான்? என்ற கேள்விக்குக் காதல் ஒரு கண்ணாடி படம் பதில் சொல்லும். பாவுவாக புதுமுகம் ராதுல்லா, நந்தினியாக புதுமுகம் கரிஸ்மா, விஜய்யாக புதுமுகம் சாகர் அறிமுகமாகிறார்கள்.

## ஜோதிகாவை ஆட்டுவித்த மூடநம்பிக்கை



படப்பிடிப்புத் தளங்களுக்கு பென்ஸ் காரில் பவனி வந்தார் ஜோதிகா. சினிமாக்காரர்களுக்குப் பென்ஸ்கார் ராசியில்லை என்று பலர் ஜோதிகாவிற்குச் சொல்ல, உடனடியாகக் காரையே விற்றுவிட்டாராம். அதேபோல் தனக்கு மிகவும் தெரிந்தவர்களுக்கு மட்டுமே கைத் தொலைபேசி எண்ணையும் தருகிறார்.

## 2 திகில் கதைகளுடன் அருண்பாண்டியன்

அருண்பாண்டியன் 2 புதிய படங்களில் நடிக்கிறார். அதில் ஒரு படத்தை அவரே இயக்குகிறார். செய்கிறார். தயாரிப்பாளர் வேறு ஒருவர்.இன்னொரு படம், அவருடைய சொந்தப் படம். அருண்பாண்டியனின் ப்ரண்ட்ஸ் கிரியேசன்ஸ் சார்பில் இந்தப் படம் தயாராகிறது. இரண்டு படங்களும் திகில் கதைகள். அருண்பாண்டியன் கதாநாயகனாக நடித்து இயக்கும் படம் முதலில் தொடங்கும். இந்தப் படத்தின் படப் பிடிப்பை அக்டோபரில் தொடங்கத் திட்டமிட்டு இருக்கின்றனர்.

## முற்றுகையில் கேப்டன்

விஜயகாந்த் நடித்து வெளிவந்த தென்னவன் படம் சரியாகப் போகவில்லை. இதனால் நட்டமடைந்த பட விநியோகஸ்தர்கள் ஒட்டுமொத்தமாக விஜயகாந்த்தைச் சந்தித்துள்ளார்கள். தன்னுடைய அடுத்த படத்தைப் பாதிவிலைக்குத் தந்து நட்டத்தை ஈடு செய்வதாக விஜயகாந்த் சொன்னபிறகுதான் விநியோகஸ்தர்கள் திரும்பிச் சென்றுள்ளார்கள்.

## உன்னை சரணடைந்தேன்...

இசை அமைப்பாளர் கங்கை அமரனின் மகன் வெங்கட்பிரபுவும், பின்னணிப் - பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் மகன் எஸ்.பி.பி.சரணும் நெருங்கிய நண்பர்கள். நகமும், சதையும் போன்றவர்கள்.

சரண் என்ன சொன்னாலும், அதற்குக் கட்டுப்படுவார், வெங்கட்பிரபு. நண்பர்களுக்காக எந்தத் தியாகத்தையும் செய்வார்.வெங்கட்பிரபுவை, மலையாள நடிகை மீரா வாசுதேவன் காதலித்தார்.இந்தக் காதல், சரணுக்குப் பிடிக்கவில்லை. வெங்கட்பிரபுவைக் கண்டித்தார். அதன்பிறகு, மீரா வாசுதேவனைச் சந்திப்பதை வெங்கட் பிரபு நிறுத்திக் கொண்டார். அவரைத் தேடிக் கொண்டு மீரா வாசுதேவன் வந்தார்.

எஸ்.பி.சரண் வழிமறித்தார். என் நண்பன் உங்களைக் காதலிக்கவில்லை என்றார்.

தெரியும்...என்றார், மீரா வாசுதேவன்.

அப்போ நீயும், அவனை லவ் பண்ணாதே என்றார் சரண்.

ஏன்?எனக்குப் புடிக்கலை...

ஏன், நீங்க என்னை லவ் பண்றீங்களா?

அந்தப் பாக்கியம் உனக்கு இல்லை...

அப்புறம் ஏன் நீங்க தடுக்கறீங்க?

அவனுக்கு எதுவும் தெரியாது.

நீங்க அவர்கிட்ட மைனசா பார்க்கிற விஷயத்தை நான் பிளஸ்சாப் பார்க்கிறேன்...

இந்த நந்தான்னா அவனுக்கு உயிர். எனக்காக எதையும் தூக்கிப் போடத் தயங்க மாட்டான்...

உங்கள் நட்பை நான் தூளாக்குகிறேன்... என்னை லவ் பண்ண வைக்கிறேன்... உங்க முன்னால் தான் எங்க திருமணம் நடக்கும்... நிச்சயம் நடக்கும்...

இப்படி ஒரு காட்சி கேபிடல் பிலிம் ஒர்க்ஸ் தயாரிக்கும் 'உன்னைச் சரணடைந்தேன்' படத்துக்காகப் படமாக்கப்பட்டது. நிழல்கள் ரவி, இளவரசு, ரியாஸ்கான், சந்தோசி, அஞ்சு, பரவை முனியம்மா மற்றும் பலர் நடிக்கின்றனர்.

இந்தப் படத்துக்கு எஸ்.பி. பாலசுப்பிரமணியம் இசை அமைத்துள்ளார்.

கதை- திரைக்கதை வசனம் எழுதி இயக்கியுள்ளார் சமுத்திரக்கனி.

# வாசகர் இதயம்

### "ஊழி வரை வாழி"

உயிரோடு உயிராகக் கலந்து விட்ட என் தமிழ்அலையே... தமிழ் பேசும் மக்களின் உணர்வலையாய் இருந்து கொண்டு விடுதலைக்காய் விடியலுக்காய் பிட்டுக்கு மண்சுமந்த குவலய நாதன் குடியமர்ந்த கொக்கட்டியூரினிலே உருப்பெற்று எழுந்து பார் போற்றும் அரும்பெரும் பணிகளை ஆற்றி வரும் அன்னைத் தமிழ் அலையே... 'மட்டக்களப்பு மண்விட்டு வைக்காது எதனிலும் இந்த மண் கல்வியிலும், கலையிலும், கலாசாரத்திலும், வீரத்திலும் என அனைத்திலுமே உயர்ந்ததோர் உன்னதமண்' என்பதனை எடுத்துக் காட்டி வரும் எழில் அலையே ... எம் இதயம் கவர் அலையே...: இலை மறைகாயாய் இருந்த எழுத்தாளர்களையெல்லாம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த வண்ணமிருக்கும் வண்ணத் தமிழ்அலையே...: அரசியல்ச் செய்திகளை உள்ளங்கை நெல்லிக் கனியாகவும்.... நாட்டு நடப்புக்களை உள்ள படியாகவும், கவிதையோடு நற்கதையும், கருத்தாளமிகு நாவலையும், தமிழீழம் பற்றிய தரமான தகவல்களினையும், சொன்னாலும் குற்றத்தினையும் சிந்தையைத் தொடும் நகைச்சுவை முற்றத்தினையும் புலமையை அதிகரிக்கும் குறுக்கெழுத்துப் போட்டியினையும், பாவையர்க்காய் அரிவையர் அலையினையும், பாலகர்க்காய் சிறுவர் சிகரத்தினையும்,கலகலப்பானதும் நெத்தியடியானதுமான காத்திரன் பதிலினையும் அள்ளி வழங்கும் அமுதச் சுரபியே.. அற்புதத் தமிழ் அலையே.. உன் பொற் பாதங்களில் என்றும் பணிகின்றோமம்மா.

நிறைவு கண்டுவரும் அலையே... உன்னில் இன்னும் கவிதைப் போட்டியும், இலக்கியத் தேனும், ஆடவர் அலையும் வரவேண்டுமம்மா. அதனோடு ஒரு சில குறைகளாய் வரும் எழுத்துப் பிழைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டுமம்மா. மேலும் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் நடக்கின்ற தில்லுமுல்லுகளையும் பல்வேறு செய்திகளையும், சர்வதேசச் செய்திகளையும், தாங்கி வரவேண்டுமம்மா. ஆக்கங்களும் மென்மேலும் தரம் கூட வேண்டுமம்மா. ஓ அலையே உன்னால் எல்லாமே முடியும். அந்த 'முடியும்' என்ற உனது ஆத்ம பலத்தாலே தமிழ் பேசும் மக்கள் வாழ்வெல்லாம் இனி விடியும் 'ஊழிவரை வாழி வாழி' என்று பல்லாண்டு பல்லாண்டிங்கே வாழ்த்துகின்றோம்.

*வெல்லபதியான்,*
*எருவில்.*

உள்ளத்து உணர்வுகட்கு உறுதியூட்டும் தமிழலையே! கள்ளமில்லா வெள்ளிதயம் கொண்ட உணர்வலையே! பள்ளிச்சிறார் எமது அறிவுப் பசி தீர்ப்பதற்காய் அள்ளிச் சிரமத்தில் நிறுத்தும் உன் ஒரு பக்கம் சிறுவர் சிகரத்திற்காய். உனக்குப் பல நன்றி.

டொறின்நமில்ஸ் இராமநாதபுரம்

கனம் தமிழ் அலையே,

எனக்கு வெளிவரும் இதழ்களில் எமது இன அலையை நன்றாகப் பிடித்து விட்டது. யான் இவ்வலைக்கு என்னால் இயன்ற பங்களிப்புச் செய்ய வேண்டும் எனக் கருதுகின்றேன். எனது பிரதேசச் செய்திகளை யான் உமக்குத் தருகிறேன். தவறாது உம்முடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இது எனது கடமையும் உரிமையும். இதனை நீர் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். அலையே.

*S.உதயகுமார்,மாவடிவேம்பு*

### என் அபிமான அலையே!

அலை அள்ளிவரும் தகவல்களைப் படிக்கின்ற போது பசியே வராது போலிருக்கின்றது. அதிலும் தொடர் நாவல் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. கண்ணுக்கு விருந்தாக உள்ளத்துக்கு இதமாக வாரம் ஒருமுறை வந்து கோலமிடும் அலையே! தாயும் சேயும் போன்று எம் அன்புப் பிணைப்பு வாரந் தோறும் வருகின்றது. அலையே உன் அழகுபற்றி வரைய வார்த்தைகள் தென்படவில்லை. வந்த வார்த்தைகளைக் கொண்டு வாழ்த்துகிறேன்.ஒவ்வொரு பக்கத்தையும் புரட்டும் போது உன்னில் இருக்கும் காந்தம் என்மனதை உன்பக்கம் இழுக்கின்றது. அலையே நீ சுமந்துவரும் ஒவ்வொரு ஆக்கங்கள் அனைத்தும் நல்லவை உன் வரவு என்றும் பவனிவர வாழ்த்துக்கள்.

வினோ, செங்கலடி.

### அன்பின் அலையே!

சூரியனுக்கு அதன் வெப்பம் தெரியவில்லை....
நிலவுக்கு அதன் வெண்மை தெரியவில்லை.....
பூங்காற்றுக்கு அதன் குளிர்ச்சி தெரியவில்லை.
குயிலுக்கு அதன் குரல் தெரியவில்லை....
உன்னைப் பாராட்ட எனக்குத் தெரியவில்லை...

ய. சயந்தன்,கடுக்காமுனை

என் அன்பிற்கினிய தமிழ் அலைக்குக் கோடான கோடி வந்தனங்கள். அலையே, நீ நாங்கள் அறியாத பல விடயங்களை எங்களுக்காகத் தந்து எங்களை அறிய வைக்கிறாய். எப்போது சனிவரும் என்று காத்திருக்கும் எங்களுக்கு நீ நாழிதழாக வெளிவந்ததையிட்டுப் பெருமகிழ்ச்சி. அலையே, உன்னை நினைத்து என் உள்ளம் கொள்ளை போகிறது. உனக்கு எப்படி நன்றி சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. நீ அழியாச் செல்வமாக இருக்க எனது வாழ்த்துக்கள். வாழ்க பல்லாண்டு...

புசிவதயாழினி, அரசடித்தீவு.

### தமிழ் அலைக்கு வணக்கம்

தமிழரின் தாகம் தீர்க்க நீயும்
போராடுவதைப் பார்த்து
பூரிப்படைகிறேன். அலையே,
ஒவ்வொருவரும் தன்
நல்வாழ்க்கைக்காக ஒவ்வொரு
விதமாகப் போராடுகிறார்கள். அதில்
நீயும் ஒருவிதம். இது உனது
வாழ்வுக்காக அல்ல, உன் இனத்தின்
வாழ்வுக்காகத் திடத்தோடுநிதானமாகப்
பயணித்து புலம் பெயர் நாட்டு எமது
உறவுகளது கைகளிலும் அலையைத்
தவழ விட்டால் இமயத்தின் உச்சியில்
உன் வெற்றிக் கொடி பறக்கும்.

கா.சோதி. பலாச்சோலை.

அன்பான பத்திரிகை தமிழ்அலையே! நீ வாரா வாரம் சுமந்து வரும் ஆக்கம் அத்தனையும் நான் தொடர்ந்து படிப்பேன். ஆனால் நான் இதுவரையும் இரண்டு மூன்று ஆக்கம் எழுதி அனுப்பியுள்ளேன். இதுவரையும் ஒன்றும் வெளிவரவில்லை. அதனால் மிகவும் கவலை அடைந்துள்ளேன். இவ்வாரம் பொது அறிவு எழுதி அனுப்பியிருக்கிறேன். இதையாவது வெளிவிடுவாய் என எதிர்பார்க்கிறேன்.

லோஜினி




ஒரு காட்டில் ஒரு குளம் ஒன்று இருந்தது. அந்தக் குளத்தின் நீர் மட்டம் ஒரு பொழுதும் அமைதியாக இருப்பதில்லை. ஆடி அசைந்த படியே இருக்கும். இதற்குக் காரணம் இக் குளத்தில் வாழும் மீன்களின் ஆர்பாட்டம்தான். இந்த மீன்களெல்லாம் போடும் கும்மாளத்தால் முழுக் குளமும் சல சலத்துக் கொண்டே இருக்கும்.



# அழகான மீன்களின் அவல நிலை

இந்தக் குளத்திலே இவர்களுடன் ஒரு பெரிய தவளையும் இருந்தது. இந்த ஒரே ஒரு தவளை மட்டும் தனியே இருப்பதால் மீன்களெல்லாம் ஒன்று சேர்ந்து அதனை எதிர்த்தன.

அது மட்டுமன்றி தவளையின் சொர சொரப்பான தோலையும் அதன் தோற்றத்தையும் பார்த்து கிண்டல் செய்தன.

ஆனால் தவளை எதுவும் பேசாமல் இருக்கும். தவளை பேசாமல் இருப்பதால் அவற்றின் கேலியும், கிண்டலும் அதிகரித்துக் கொண்டே சென்றன.

தமக்கு மினுமினுப்பான உடலும், அழகான கண்களும் உள்ளதாகவும், தவளைக்கு சொர சொரப்பான தோலும், அசிங்கமான கண்களும் இருப்பதாகக் கேலி செய்தன.

தவளைக்கு ஆதரவாக பேச யாரும் இல்லாததால் அது எப்போதும் ஒதுங்கியே இருந்து வந்தது. ஒரு முறை அந்தக் காட்டில் எப்போதும் இல்லாதவாறு வெப்பம் அதிகமானது. மழையும் பெய்யவில்லை. சோலை வனமாகக் காட்சி அளித்த காடு பாலை வனமாக மாறத் தொடங்கியது. தவளையும், மீன்களும் வசித்த குளமும் வற்றத் தொடங்கியது.

இது வரை காலமும் கேலியும் கும்மாளமுமாக இருந்த மீன்களைக் கவலை ஆக்கிரமித்துக் கொண்டது. மீன்களின் நிலையைக் கண்டு தவளையும் கவலைப்பட்டது. ஆனால் தவளையால் மீன்களுக்கு உதவ முடியவில்லை. வெப்பம் தாங்க முடியாத சில மீன்கள் செத்துப் போயின. உயிருடன் இருந்த மீன்களும் மிகவும் கஸ்ரப்பட்டன. அவை தங்களுக்குள் ஈனக் குரலில் சொல்லி அழுதன. ''சொர சொரப்பான அழகற்ற தோலாக இருந்தாலும் பரவாயில்லை தவளையாக பிறந்திருக்கலாம். ''நாம் மினு மினுப்பான தோலை உடையோம் என்று சொன்ன எம் உடலால் வெப்பத்தைத் தாங்க முடியவில்லையே!.''

தவளை ஒரு ஓரத்தில் இருந்த படி மழை வராதா? மழை வந்து வெப்பத்தை போக்கி மீன்களின் உயிரைக்காப்பாற்றாதா? என்ற ஏக்கத்துடன் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

ஜெயம் பிரியா மட்/வந்தாறுமூலை.

# கலிலியோ கலிலி

*1564–1642 இவர் இத்தாலி தேசத்தில் பிறந்தார்.*

இவர் இத்தாலி தேசத்தைச் சேர்ந்த வானியலறிஞரும், பௌதீக வியலறிஞரும், கணித வியலறிஞரும் ஆவார். இவரது கண்டு பிடிப்புக்களாவன ஊசல் தத்துவம், தொலை காட்டி, கடிகாரம், நீர் தூக்கு தராசு, உஷ்ண மானி, ஒளியின் வேகம் என்பனவாகும். இவர் உலகங்களின் சம்பாசனை, நவீன விஞ்ஞான சம்பாசனை என்ற இரு நூல்களை எழுதியுள்ளார்.

## இவர் விஞ்ஞானத் துறைக்கு ஆற்றிய பங்களிப்பு.

விஞ்ஞான ஆய்வுக்கான கருவிகளைக் கண்டு பிடித்தார். ''கொப்பணிகஸின்'' சூரிய மையக் கொள்கையை ஆதாரப்படுத்தி தொலமியின் புவி மைய கொள்கையைப் பொய்பித்தார். சந்திரனில் உள்ள மலைகளையும், குழிகளையும் அவதானித்தார். வியாழனில் உள்ள நான்கு பெரிய உப கோள்களையும் அவதானித்தார். வெள்ளிக் கிரகம் சுருங்கி விரிவதையும் சூரியனைச் சுற்றி சுழல்வதையும் அவதானித்தார்.

இவரது ஆய்வுகளில் விஞ்ஞான உளப்பாங்கு இருந்தது. உள்ளதை உள்ளவாறு கூறல். விஞ்ஞான உளப்பாங்கு எனப்படும். கலிலியோவின் விதி ''சுதந்திரமாக விழும் எல்லாப் பொருட்களும் பூமியின் மேற் பரப்புக்களுக்கிடையில் நிலையான வேகத்தை கொண்டிருக்கும்'' என்பதே கலிலியோவின் விதி எனப்படும். இவர் வானியலின் புதுப்பகுதியை ஆரம்பித்தார். இதனால் இவர் நவீன பௌதீகத்தின் தந்தை என அழைக்கப்பட்டார்.

ஆக்கம்: தரம்10A மாணவர்கள
மட் / ஆரையம்பதி ம.வி.

1. பூமி(புவி) ஞாயிற்றுத் தொகுதியில் 3வது கோள் ஆகும்.
2. பூமியின் துணைக்கோள் சந்திரன் ஆகும்.
3. பூமிக்கு இரண்டு வகையான இயக்கங்கள் உள்ளன.
4. பூமி தன்னைத்தானே சுற்றுவது புவி சுழற்சி என்று அழைக்கப்படும். இதற்கு 24 மணித்தியாலங்கள் எடுக்கும்.
5. பூமி சூரியனைச் சுற்றி நீள்வளையப்பாதையில் சுற்றுவதை புவி சுற்றுகை என்று அழைப்பர். இதற்கு 365 1/4 நாட்கள் எடுக்கும்.
6. பூமியில் மாத்திரமே உயிர்கள் வாழக்கூடிய வளி மண்டலம் உண்டு.
7. புவி நிலைக்குத்துடன் 23 1/2 சாய்வாகக் காணப்படுகிறது.
8. புவியின் பௌதீக கூறுகளாகக் காற்று மண்டலம், நீர் மண்டலம், தரை மண்டலம், கல் மண்டலம் அமையப்பெற்று உள்ளது. பூமி நிலப்பரப்பை பார்க்க நீர்ப் பரப்பில் மிகக் கூடியது.
10. புவி கோள வடிவானதாகும்.

நா. பிரசாந்தினி
தரம் - 08
மட்/ ஆனைப்பந்தி இ.கி.மி.பெ மகா வித்தியாலயம்.

## மாணவர் கைவண்ணம்



வி.லதா தரம்-07 R
இ.க.மி.வித்தியாளயம்.
கொக்கட்டிச்சோலை

# வாழ்வியல் பற்றிய வைர வரிகள்

* உனது ஆத்ம பலம்தான் உலகத்திலேயே உயர்ந்த பலம்.
* உண்மை நேர்மை, நீதி, நியாயம் இந் நான்கும் நன்நடத்தையாளனின் அணி கலன்கள்.
* வெற்றியை அடைய வேண்டுமாயின் தோல்விகளுக்கும் இடம் கொடு.
* நாவடக்கம் இல்லாதவன் பைத்திய காரனுக்குச் சமமானவன்.
* தியாகம் செய் நியாயம் கிடைக்கும்.
* உள்ளத்தை ஊனப்படுத்தாதே! மிருகமாகி விடுவாய்.
* பண்பாளனுக்கு எப்போதும் பணி. பகைவனுக்கு ஒரு போதும் பணியாதே.
* மௌனமாய் இருக்காதே, உலகம் உன்னை ஊமையாக்கி விடும்.
* உனது பலவீனங்களைக் கொண்டே உன்னை பலப்படுத்திக் கொள்.
* சூரியனின் எழுச்சிதான் உலகத்தின் விடியல் உனது எழுச்சிதான் உன் வாழ்வின் விடியல்.

(வெல்லபதியான், எருவில்)

## நாடுகளும் தேசிய சின்னங்களும்

1. இலங்கை - வாள் ஏந்திய சிங்கம்.
2. இந்தியா - அசோக சக்கரம்.
3. இத்தாலி - வெள்ளை அல்லி.
4. இங்கிலாந்து - ரோஜா.
5. யப்பான் - கோழி.
6. அமெரிக்கா - கழுகு.
7. அவுஸ்ரேலியா - கங்காரு.
8. ஜேர்மனி - வெள்ளைக்கழுகு.
9. டென்மார்க் - கடற்கரை.
10. தென்னாபிரிக்கா - நீலக்கொக்கு.
11. எகிப்து - தாமரை.
12. பாரசீகம் - சிவந்த ரோஜாப்பூ.
13. ஸ்பெயின் - மாதுளம்பூ.
14. மெக்சிகோ - நாகதாளி.
15. ஸ்கொட்லாந்து - முட்செடி.

இ.நிரஞ்சன் (நித்தி)
கொக்கட்டுச்சோலை.

## கண்டு பிடிப்புக்கள்

1. மயக்க மருந்து ~ மார்ட்டன் சிம்மன்.
2. சினிமா ~ தோமஸ் அல்வா எடிசன்.
3. மின் குமிழ் ~ தோமஸ் அல்வா எடிசன்.
4. சடத்துவ வாயு ~ வில்லியம் ஹார்வே.
5. புவியீர்ப்பு விசை ~ சேர் ஐசாக் நியூட்டன்.
6. கம்பியூட்டர் ~ எம்.டூரிங்.
7. மின்சாரம் ~ மைக்கல் பரடே.
8. சத்திர சிகிச்சை ~ ஜோசப் லிஸ்டர்.
9. குருதிச் சுற்றோட்டம் ~ வில்லியம் ஹேர்வே.
10. எக்ஸ் கதிர் ~ உரோஜன்.
11. மடக்கை அட்டவணை ~ நெப்பியர்.
12. டீசல் இயந்திரம் ~ டீசல்.
13. இடிதாங்கி ~ பெஞ்சமின் பிராங்கிளின்.
14. மின்காந்தம் ~ வில்லியம் ஸ்ரஜன்.
15. சீமெந்து ~ ஜோன் சிமிற்றன்.

மகாலிங்கம் வித்தியாஜினி,
மட்/ புனித சிசிலியா பெண்கள் தேசிய,பாடசாலை.

# எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் மட/ ஆரைப்பற்றை சுப்பிரமணியம் வித்தியாலயம் ஆகும். எனது பாடசாலை கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி எனும் இடத்தில் அமைந்துள்ளது. இப்பாடசாலை அமைப்பதற்கு ப.க. சுப்பிரமணியம் என்பவர் காணியொன்றை வழங்கி இப் பாடசாலையை ஸ்தாபிப்பதற்கு உதவினார்.

இதன் காரணமாக 1951ம் ஆண்டு இப் பாடசாலை ஆரம்பமானது. தரம் 1 - 5 வரை வகுப்புக்கள் உள்ளது. எனது பாடசாலை அதிபரின் பெயர் திரு. த.. தங்கராஜா ஆவார். ஐந்து ஆசிரியர் கல்வி கற்பிக்கின்றனர்.

வருடா வருடம் எங்கள் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்வது எனது பாடசாலையின் கல்வி வளர்ச்சியைக் காட்டுகிறது. இங்கு சகல வசதிகள் இருந்த போதும் விளையாட்டு மைதானம் இல்லை என்பது மட்டும் ஒரு குறையாக இருக்கின்றது.

*ஜீ. சுலக்சன், தரம்– 05,மட்/ ஆரைப்பற்ரை சுப்பிரமணியம் வித்தியாலயம்.*

## சேவல்

சேவல் நல்ல சேவலாம்
சிவப்புக் கொண்டைச் சேவலாம்
செக்கச் சிவந்த வாயாலே
செந் நெல் கதிர்கள் உண்ணுமாம்.
விடியும் காலைப் பொழுதினிலே
விடியல் அறிந்து கூவிடுமாம்.
பேட்டுக்கெல்லாம் ராஜாவான
பெரிய கொண்டைச் சேவலாம்.



த.ஜிவசங்கரி, தரம்-2V மட்/விவேகானந்தா ம.ம.வி,கல்லடி

# விடு கதைகள்

(1) வளைக்க முடியும் ஒடிக்க முடியாது. அது என்ன?
(2) பச்சைப் பாம்பு சந்தைக்குச் செல்கிறது. அது என்ன?
(3) வாழ் நாள் முழுவதும் வாயை மூடாதவன். அவன் யார்?
(4) ஒரு வீட்டில் தாயும் மகளும் சண்டை அது என்ன?
(5) தாய் குப்பையில் மகள் சந்தையில் அது என்ன?
(6) கூவி அழைப்பான் கூடி உண்ணுவான். அவன் யார்?
(7) அழகுக் கண்ணுக்கு அங்கம் முழுவதும் தங்கக் கண்ணாடி. அது என்ன?
(8) வாயிலே தோன்றி வாயிலே மறையும் அது என்ன?
(9) உனக்கு சொந்தமானது. ஆனால் உன்னை விட மற்றோர் அதிகம் உபயோகிப்பது. அது என்ன?
(10) அண்ணன் தம்பிகள் இரண்டு பேர். அவர்களைச் சுற்றி பன்னிரன்டு இடங்கள் அது என்ன?

தலைமுடி
புடலங்காய்
தபால் பெட்டி
அம்மியும், குழவியும்
வாழை
காகம்
மயில்
சிரிப்பு
பெயர்
கடிகாரம்.

ந. தவசுதன், தாழங்குடா

# 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான வினாக்களும் விடைகளும்

## புலமை திரிதமீட்டல் – 2003 வினாத்தாள்- 02 பகுதி - 02

* கீழேதரப்படும் பந்தியினை நன்கு படித்து கீழ் வரும் படிவத்தினைப் பூர்த்தி செய்க?


மருதானை தெற்கு இலக்கம் - 09, கொழும்பு என்னும் முகவரியில் வதியும் யோகநாதன் - யோகேஸ்வரி தம்பதிகளின் இளைய புத்திரி தான் - ஜோதிகா அவள் 07.04.1993ம் ஆண்டு பிறந்தாள் மருதானை மத்திய கல்லூரியில்தரம் 5ல் கற்கும் அவள் மருதானை இலங்கை வங்கிக் கிளையில் 3062 என்னும் கணக்கு இலக்கத்திற்கு உரித்துடையவளும் ஆவாள். இத் தகவலைக் கொண்டு உம்மை ஜோதிகா எனக் கற்பனை செய்து படிவத்தினை நிரப்புக?

முகாமையாளர் — 01. கணக்கு இல................
மக்கள் வங்கி
02. ........................கிளை

''சிசு உதான'' (மாணவர்கள் மலர்ச்சி) சிறுவர் சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான விண்ணப்பம்.


03. முழுப் பெயர்.......................................
04. பிறந்த திகதி .......................................
05. முகவரி.......................................
06. பாடசாலையின் பெயரும் ,தரமும்..............................
07. தாய்/ தந்தை பெயர்.......................................
08. தாய் / தந்தை முகவரி..................................
09. ......................... — .......................................
திகதி — 10. கணக்கு வைப்பர் ஒப்பம்

* கீழே காட்டப்பட்டிருப்பது இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் நிகழ்ந்த கிரிக்கெட் போட்டியின் பட வரைபு விபரமாகும். இப்போட்டியில் இலங்கை 30 ஓட்டங்களால் வெற்றியீட்டியது இதற்கேற்ப பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?




11. அவுஸ்திரேலிய அணி பெற்ற மொத்த ஓட்டங்கள் எத்தனை?
12. இலங்கை அணி பெற்ற மொத்த ஓட்டங்கள் எத்தனை?
13. அவுஸ்திரேலியாவும், இலங்கையும் எத்தனையாவது ஓவரில் ஒரே. எண்ணிக்கையான ஓட்டங்களைப் பெற்றது?
14. இலங்கை அவுஸ்திரேலிய அணிகள் 25 வது ஓவரில் பெற்ற ஓட்டங்களின் எண்ணிக்கையை முறையே தருக?
15. இலங்கை 120 ஓட்டங்களை எத்தனையாவது ஓவர் முடிவில் பெற்றது?
16. எத்தனையாவது ஓவரின் பின் இலங்கையின் ஓட்ட விகிதம் அவுஸ்திரேலியாவை விட அதிகரித்தது?
17. இலங்கை அணி இழந்த விக்கட்டுக்கள் எத்தனை?
18. அவுஸ்திரேலிய அணி இழந்த விக்கட்டுக்கள் எத்தனை?
19. 35வது ஓவரில் இலங்கை அவுஸ்திரேலிய அணிகள் பெற்ற ஓட்டங்கள் எத்தனை?
20. உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி எத்தனை வருடங்களுக்கு ஒரு முறை இடம் பெறும்?

* கீழே மந்திரப் பெட்டி ஒன்று தரப்படுகிறது. Iவது பெட்டியினுள் 5ரூபா இட்டால் கடைசிப் பெட்டியினுள் 10.50 சதம் பெறப்படும் எனின் Iவது பெட்டியினுள் 8ரூபா இட்டால் ஒவ்வொரு பெட்டியினுள்ளும் இடம் பெறும் மாற்றங் களைத் தருக?



21. +2 = ..............................
22. x 3 = ..............................
23. ÷ 2 = ..............................
24. ..............................

*. சரியான விடையின் கீழ் கோடிடுக?

25. சென்ற ஆண்டு சார்க்மாநாடு நடைபெற்ற இடம்
 01. இந்தியத் தலைநகர் புதுடில்லியில்
 02. நேபாளத் தலைநகர் காத்மண்டுவில்
 03. மாலைதீவின் தலைநகர் மாலேயில்

26. மனித உடலின் சாதாரண வெப்பநிலை
01. 34°c 02. 35°c 03. 37°c

27. புகையிலையில் காணப்படும் நஞ்சு.
01. அற்ககோல் 02. பொசுப்பரசு 03. நிக்கோற்றின்

28. மண்வெட்டித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
 01. அகலவத்தை 02. யக்கலை
 03. சபுகஸ்கந்தை

29. இலங்கையில் இலவசக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டது.?
 01. 01-10-1945 02. 01-10-1946
 03. 01-10-1955

30. தேர்தலில் போட்டியிடுபவர்?
 01. தேர்வாளர் 02. போட்டியாளர்
 03. வேட்பாளர்

31. எமது நாட்டிற்கு உரித்தான தாவரம்?
 01. இறப்பர் 02. கோப்பி
 03. கறுவா

32. இலங்கைக்கு வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட தாவரம்?
 01. மாமரம் 02. குரோட்டன்
 03. நாவல் மரம்

33. இலங்கைக்கு வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட வர்த்தகப் பயிர்?
 01. கோப்பி 02. கோவா
 03. சாதிக்காய்


34. "கடல" இச் சொல்லுக்கு மிகவும் பொருந்தக் கூடியது?
01. பரந்த நீர் அமைப்பைக் கொண்டது
 02. உவர் தன்மை கொண்டது
 03. ஆழமாக இருக்கும்

35. "பூகம்பம்" இது?
 01. இயற்கையின் சீற்றத்தினால் ஏற்படுவது
 02. செயற்கையாக தோன்றுவது
 03. மனித செயற்பாட்டால் தோன்றுவது

36. அண்மையில் வெடித்துச் சிதறிய கொலம்பிய விண் கலத்தில் பயணம் செய்தோர் எண்ணிக்கை?
 01. 5 02. 7 03. 9

37. கொலம்பிய விண்கலத்தில் பயணம் செய்த பெண்மணியின் நாடு எது?
 01. இந்தியா 02. அமெரிக்கா
 03. நோர்வே

*. பனை மரம் ஒன்றில் இருந்து வெட்டப்பட்ட ஒரு குற்றியின் உருவப்படம் காட்டப்படுகிறது?



38. இதன் முகங்களின் எண்ணிக்கை யாது?
39. நேரான, வளைந்த விளிம்புகளின் எண்ணிக்கைகள் முறையே?
40. உச்சிகளின் எண்ணிக்கை யாது?

### விடைகள்


01. 3062
02. மருதானை
03. யோகநாதன் - ஜோதிகா
04. 07-04-1993
05. மருதானை தெற்கு, இலக்கம் - 09, கொழும்பு.
06. மருதானை மத்திய கல்லூரி ,5
07. யோகநாதன் - யோகேஸ்வரி
08. மருதானை தெற்கு, இலக்கம் - 09, கொழும்பு
09. 20.09.2003
10. யோ-.ஜோதிகா
11. 220 ஓட்டங்கள்
12. 250 ஓட்டங்கள்
13. 35வது ஓவரில்
14. 130,110
15. 20வது ஓவரில்
16. 35வது ஓவர் முடிவில்
17. 8
18. 7
19. 160வது ஓட்டங்கள்
20. 4 வருடங்களுக்கு ஒருமுறை
21. 10/=
22. 30/=
23. 15/=
24. 15/=
25. 02
26. 03
27. 03
28. 02
29. 01
30. 03
31. 03
32. 02
33. 02
34. 02
35. 01
36. 02
37. 01
38. 4
39. நேரான விளிம்புகள் 4
 வளைந்த விளிம்புகள் 2
40. 4

ச.ஜெயாகரன்
மட்/திருப்பழுகாமம் வி.வி

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 07-10-2003 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

*முகவரி*
**குறுக்கெழுத்துப்போட்டி-13**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி 13



### இடமிருந்து வலம்

01. விடுதலைப்போரில் தம்மைத்தாமே மாய்த்துக்கொள்ளும் விடுதலைப்புலிகளின் ஈகம் இச்சிறப்புப் பெயரால் அழைக்கப்படும்.
05. பொய்யும் இதுவும் சிலருக்குக் கைவந்த கலை (திரும்பியுள்ளது)
06. பார்வையின் தெளிவற்ற தன்மை (குழம்பியுள்ளது.)
08. இரு கோடுகளின் இடையேயுள்ள திசை வேறுபாட்டைக் குறித்து நிற்பது, பாகையில் அளக்கப்படும்.(திரும்பியுள்ளது)
09. இரும்புக் குழலிருந்து சீறிப்பாயும் இது உயிரைக்குடிக்கும் (திரும்பியுள்ளது.)
10. புருவம், நெற்றி (குழம்பியுள்ளது)
12. மழைக்கால இருட்டிலும் கொப்பிழக்காத இது இங்கே இறுதி எழுத்தை இழந்து நிற்கின்றது
13. வயலில் மட்டுமல்ல மனிதர்களிலும் இவைகள் காணப்படுகின்றன.
15. மீனவரை இப்படியும் அழைப்பர் (குழம்பியுள்ளது.)
16. குழிவு என்பதின் எதிர்ப்பதம் (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. அறம்
02. நீதி, நேர்மையற்ற ஆட்சி
03. விறகு, பிணம் போன்றவற்றையும் இப்படிச் சொல்வர் (தலைகீழ்)
04. மனைவியை இழந்தவன்
07. வவுனியாவில் இருந்து தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் வார இதழ் (தலைகீழ்)
11. பொருட்களின் கொள்வனவு
12. கடிதம்
14. தண்ணீர் அருந்தப் பயன்படுத்தும் சிறு பாத்திரம் (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி 11ற்கான 'விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. உகந்தை | 01. உத்வேகம் |
| 05. குமுதம் | 02. தந்தம் |
| 07. வேதம் | 03. குதை |
| 09. மனை | 04. சிம்மம் |
| 10. களம் | 06. முனைவர் |
| 11. (த)வம் | 08. கிண்ணம் |
| 12. தேர் | 12. தேவாரம் |
| 13. வாசுகி | 14. சுருதி |
| 17. விரக்தி | 15. கவிதை |
| 18. துரும்பு | 16. புகை |

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**திருமதி. வாசுகி ராகுலன்,**
**2ம் பிரிவு,**
**மண்டூர்.**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

**பே. நிலுஜினி,**
காங்கேயனோடை வீதி,
ஆரையம்பதி - 03.

**S.சுகந்தினி,**
கூளாவடி,
பிரதான வீதி,
மட்டக்களப்பு.

**கே. அரசேஸ்வரன்,**
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

**வி. யசோதரன்,**
மே/ப.மா. வினாயகமூர்த்தி,
விளாவெட்டுவான்,
நாவற்காடு,மட்டக்களப்பு.

**வ. தமிழ் வாணன்,**
கிராம உத்தியோகத்தர்,
மண்முனை, ஆரையம்பதி.

**T. இளஞ்செழியன்,**
பொறியியளாளர் அலுவலகம்,
வந்தாறுமூலை.

**M. சுதா,**
மகிழடித்தீவு,
கொக்கட்டிச்சோலை.

செல்வி.**அபிராமி விநாயகமூர்த்தி,**
குருமண்வெளி,
களுவாஞ்சிகுடி.

**சா. பத்மகுமார்,**
மகிழூர் - 1,
களுவாஞ்சிகுடி.

**S. ஜதுஸ்ரிஹா,**
மே/பா S. சங்கரலிங்கம்,இல.27,
3ம் குறுக்குத்தெரு,
மட்டக்களப்பு.

சென்றவாரக் குறுக்கெழுத்துப் போட்டியிலே 03 என்னும் இலக்கம் முதல்வரியிலே 03ம் கட்டத்துள் வரவேண்டியது தவறுதலாக04ம் கட்டத்திற்குள் சென்று விட்டதை வாசகர்கள் புரிந்திருப்பீர்கள் இதனால் ஏற்பட்ட குழப்பங்களுக்கு வருந்துகின்றோம். (ஆ -ர்.)

# அக்கா அழவில்லை

~ முல்லைமணி ~

அந்தச் செய்தியைக் கேட்டவுடனேயே அம்மா ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள். தங்கை நளினி கூடக் கண்ணீர் சிந்தினாள். அப்பா அதிர்ந்துபோய் உயிரற்ற சிலையாகிவிட்டார்.

துயரங்கள் தொடர்கதையாக வருவதை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

அழவேண்டியவள் அக்கா கமலிதான்! ஆனால் அவள் அழவில்லை. பெருமூச்சு மட்டும் அனலாக இருந்தது. நெஞ்சுக்கூடு விம்மிப் புடைத்துத் தாழ்ந்தது. அவள் வதனத்தில் எந்தவித உணர்ச்சியையும் காணமுடியவில்லை. அவள் ஒரு அழகான கவிதை போலிருந்தவள்: பேரழகி என்றுசொல்ல முடியாவிட்டாலும் அவள் முகத்தில் ஒரு வசீகரம். படபடக்கும் விழிகளில் ஒரு சோபை. இவற்றையெல்லாம் தொலைத்து விட்டு இறுகிப்போன முகத்துடன் எட்டு ஆண்டுகளாக நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறாள்.

பட்டுப் போன மரமாய் உலர்ந்திருந்த அவள் உள்ளத்திலே சிறிய தளிர் ஒன்று அரும்பியதைக் கண்டு நாங்கள் எல்லோருந்தான் துள்ளிக் குதித்தோம். அவள் வாழ்விலே மீண்டும் வசந்தம் வரப்போகின்றது என்று மகிழ்ந்தோம். ஆனால் இப்பொழுது அந்தத் துளிர் கருகிவிடப் போகிறதா?

அடைத்த லொறியிலே அகப்பட்டு கோழிக்கூட்டு முகாமில் தள்ளிவிடப்படுவோம் என்று எப்போதாவது எண்ணினோமா? அப்பா,அம்மா,அக்கா கமலி, தங்கை நளினி, நான் என்று ஐந்துபேர் கொண்ட குடும்பம். நாங்கள் மட்டுமல்ல ஐநூறு, அறுநூறு பேருக்கும் இதே கதிதான். ஒரு இரவில் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் இருந்தது.

இப்படி நிகழ்ந்திருக்காவிட்டால் நான் ஓ.எல். பரீட்சைக்குத் தோற்றியிருப்பேன். சித்தி எய்துவேன் என்ற நம்பிக்கையும் இருந்தது. படித்த புத்தகங்கள், எழுதி வைத்த குறிப்புக்கள் எல்லாவற்றையும் இழந்த நிலையில்.....

*——————*

அதிகாலையில் நான் படித்துக் கொண்டிருந்த போதுதான் ஒழுங்கையில் தொம் தொம் என்று சத்தங்கள் கேட்டன. அப்பா பால் கறந்து கொண்டிருந்தார். அம்மா அடுப்படியில் தேநீர் தயாரிக்கும் கைங்கரியத்தில்... பலபலவென்று விடிந்த போதுதான் இராணுவம் சுற்றி வளைத்தது தெரிய வந்தது. பட்டிப்பசுவையும் பால்கறந்த முட்டியையும் விட்டுவிட்டு வந்த அப்பாதான் ஆமி ஆமி.. என்று எச்சரிக்கை செய்தார்.நிமிர்ந்து பார்த்த நாங்கள் வெலவெலத்துப் போனோம். இரத்தமே உறைந்து போனதுபோல் இருந்தது குச்சொழுங்கை நீண்ட நெடும் பாதை கோவில் வீதி எங்குமே எருமைக்கூட்டம் போல இராணுவம் குவிக்கப்பட்டிருந்தது.

எந்தவித சத்தமோ சஞ்சடியோ இன்றி இராணுவம் ஊருக்குள் புகுந்துவிட்டது. கையை உயர்த்திக் கொண்டு நின்றோம். ஒருவன் புரியாத பாஷையில் எதுவோ சொன்னான். கோயில் பக்கம் கையைக் கட்டினான்.

மெல்லக் கோயில் பக்கம் சென்றோம். துப்பாக்கி முனையில் மக்கள் கோயிலுக்கு அழைத்துவரப்பட்டனர். ஐநூறு,அறுநூறு சனத்தை ஒரு கோயில் தாங்குமா?

அறுவான்கள், ஒரு தேத்தண்ணி கூடக்குடிக்க விடமாட்டன் எண்டிட்டாங்கள்" அப்பா அலுத்துக் கொண்டார்.

தேத்தண்ணியோ? எங்களை உயிரோடை விட்டால் காணாதோ, சிவசிவா ஒதிய மலையிலை நடந்தது போல எல்லாரையும் சுடத்தான் போறாங்களோ" ஒரு கிழவர் சொன்னார்.

சன நெருக்கடியில் குழந்தைகள் வீரிட்டு அழுதனர். வயதானவர்கள் பேயறைந்தது போலக் காணப்பட்டனர்.

"இப்படி நடக்குமெண்டு தெரிஞ்சால் புதுக்குடியிருப்பிலேயே இருந்திருக்கலாம்: அவசரப்பட்டிட்டம்" நடுத்தர வயது பெண்ணொருத்தி அங்கலாய்த்தாள்.

ஆலயவீதி அவசர மலசலகூடமாகி நாறத் தொடங்கி விட்டது. பெரியவர்கள் மலசலத்தை அடக்கலாம். குழந்தைகளால் அது முடியுமா?

"ஐயோ நகைப் பெட்டியையும் அல்லோ விட்டிட்டு வந்திட்டம்" அம்மாவின் ஆதங்கம் இது.

"சும்மா பேசாமல் இரு: அவங்கள் நகையை எடுக்க விட்டவங்களே. எல்லாச்சனமும் விட்டிட்டு உடுத்த துணியோடைத்தானே வந்து நிக்குதுகள்." அப்பா எரிச்சல் பட்டார்.

*——————*

ஒட்டுசுட்டானில் பயங்கர ஷெல் வீச்சு கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு மக்கள் வெளியேறினர். அயல் கிராமங்களில் தஞ்சம் புகுந்து கொண்டனர். நாங்கள் பெரு முறிப்புக்குப் போனோம். அங்கு எங்களுக்குப் பத்து ஏக்கர் நெற்காணியும் மேட்டுநிலமும் இருந்தன. அங்கு கொட்டில் போட்டு வசித்தோம். அறாவிலைக்குப்பசளை வாங்கிப்போட்டு மருந்து விசிறியதால் வயலில் பயிர்கள் கருகரு என்று மதர்ந்து வளர்ந்து கதிர் தள்ளிப் பாலேறும் பருவம் விளைந்தால் முன்னூறு மூடை நெல்லென்றாலும் தேறும். செலவு போக ஒருலட்சமென்றாலும் கைக்குவரும். என்று அப்பா கணக்குப் போட்டிருந்தார்.

"காட்டுக் குறையிலை கடைகண்ணி இல்லாத இடத்திலை எத்தினை நாளைக்கு ஒதுங்கிறது.? இப்ப ஷெல்லடி நிண்டிட்டுதாம். சிவலிங்கம் கடை துறந்திட்டுதாம் குணசிங்கம் மாஸ்டர் குடும்பமும் ஒல்லுப் போலையரும் மனுஷியும் ஊர் திரும்பிட்டினமாம் புதுக்குளத்துச் சனமும் போட்டுதாம்." என்று அம்மா நச்சரிக்கத் தொடங்கிவிட்டாள். அப்பா இணங்கவே ஊருக்குத் திரும்பினோம்.

ஊர் ஓரளவுக்கு வழமைக்குத் திரும்பிவிட்டது. பாடசாலை இயங்கத் தொடங்கியிருந்தது. இனிப் பயமில்லை என்று நினைத்தோம். அரவம் இல்லாமலே ஆமி வரும் என்று ஆர்கண்டார்கள்?

பத்துமணிக்கு வெறுந்தேத்தண்ணி மூன்றுமணிக்கு ஒரு ரொட்டி - இப்படி ஒருவாரம் கழிந்துவிட்டது. என்னைப்போன்ற இளவட்டங்களைத் தனி இடத்துக்கு அழைத்தார்கள். விசாரணைக்குமேல் விசாரணை பதினைந்து இருபது பேரை லொறியில் ஏற்றி எங்கோ அனுப்பிவிட்டார்கள். நல்ல காலமாக என்னை விட்டுவிட்டார்கள்.

அம்மா கவலையுடன் சொன்னாள்: தங்கை நளினி கோயிலுக்குள்ளேயே பெரியபிள்ளை ஆகிவிட்டாள். என்று கவலைப்படும் விஷயமா இது? ஆனால் அப்போதைய நிலையில் கவலைப் பட்டுத்தான் ஆக வேண்டியிருந்தது.

கடைசிப்பிள்ளையின் சாமத்திய வீட்டை எப்படியெல்லாம் கோலாகலமாகக் கொண்டாட வேணும் என்று அம்மா கற்பனை பண்ணியிருந்தாள். சொக்கட்டான் பந்தல், சப்பறமணவறை, மணிச்சோடனை, நட்டுவமேளம், வீடியோ எல்லாம் பிடித்து காஞ்சிபுரம் பட்டு அட்டிகை, காப்பு, என்று ஊரைக்கூட்டி அமர்க்களப்படுத்தத்தான் எண்ணியிருந்தாள்.

ஊரிலே கொஞ்சம் வசதியானவர்கள் நாங்கள். அப்பாவின் முதுசம், அம்மாவின் சீதனம், அப்பாவின் கடும் உழைப்புஎன்பவற்றால் எங்கள் குடும்பம் நாலுபேர் பொறாமைப்படும் படியாகத்தான் இருந்தது. அப்பா கிராம அபிவிருத்திச் சபைத்தலைவர் கோயில் சபை உபதலைவர், சமாதான நீதவான், நாலெழுத்துப் படித்தவர் எனச் செல்வாக்குடன்தான் வாழ்ந்தார். வயற்காணி, தென்னந்தோட்டம், உழவுமெசின், ஒருபட்டி மாடு என்று ஏகப்பட்ட சொத்து

நளினிக்குத் தோயவார்க்கலாம் என்றால் மாற்றிக் கட்டக் கூடத் துணியில்லையே.

சனங்களின் வேண்டுகோளை ஏற்று வீடுகளைப் பார்க்க அனுமதி வழங்கப்பட்டது.

அப்பாவும் அம்மாவும் போய் பார்த்தார்கள். கூரையில் ஒரு பக்க ஷீட் கழட்டப்பட்டிருந்தது. நகைப்பெட்டியும், உடுப்புப் பெட்டிகளும், அப்பா அரிவு வெட்டுக்கெனச் சேர்த்து வைத்த பணமும் களவாடப்பட்டிருந்தன. அப்பாவின் பழைய சாரம் ஒன்று மட்டுமே எஞ்சியிருந்தது.

நளினிக்குத் தோயவார்த்து அப்பாவின் பழைய சாரத்தையே அணியக் கொடுத்தார் அம்மா.

இராணுவத்தினர் மத்தியில் ஒரே பரபரப்பு: பாதுகாப்பு அமைச்சர் வரப்போகிறாராம். அமைச்சர் என்றதும் பாதுகாப்புப் படையினர் உசார் நிலையில். அமைச்சர் வந்தார். ஆலயத்தில் வழிபாடு செய்தார். "இரண்டொரு தினங்களில் சொந்த வீடுகளுக்குச் சென்று வசிக்க ஒழுங்கு செய்யப்படும். என்று சொல்லிவிட்டு ஹெலியில் ஏறினார். எங்கிருந்தோ கூவிக் கொண்டு வந்த ஷெல் ஹெலிக்கு அண்மையில் விழுந்து பம்மி வெடித்தது. அமைச்சர் மயிரிழையில் உயிர் தப்பினார். பாதுகாப்புப் படையினர் நால்வர் ஸ்தலத்திலேயே மரணமாகினர். சனங்கள் ஒரே அல்லோல கல்லோலம் பயத்தில் கூச்சலிட்ட அவர்கள் தமது ஆயுள் முடியப்போகிறது என்றுதான் நினைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் எதுவும் அக்காவைப் பாதித்ததாகத் தெரியவில்லை. வழக்கம் போலவே இறுகிய முகத்துடன் உணர்ச்சியின்றி காணப்பட்டாள்.

இதைவிட மோசமான சம்பவம் அவள் வாழ்க்கையை ஏற்கனவே பாதித்திருந்தது. அப்பொழுது அக்காவுக்கு இருபது வயது ஒரு பட்டதாரி ஆசிரியரை மணம் பேசி நிச்சயித்திருந்தார்கள். அப்பா நாங்கள் எல்லோருமே ஆனந்தக் கடலில் மிதந்தோம். மாப்பிள்ளைத் தோழனாகப் போகும் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. வீடே அமர்க்களப்பட்டது. அக்காவின் மனதில் எதிர் காலக்கனவுகள் நிறைந்திருந்தன.

ஒரு கணத்திலே அவள் கனவு பொடிபொடியாகச் சிதறிப்போகுமென்று எதிர் பார்த்தாளா என்ன? தொண்ணூறாம் ஆண்டு மாவீரர் விழாவின் போது குண்டு வீச்சுக்கு இலக்காகி அவர் உடலும் சிதறிப் போய்விட்டது.

அக்கா அழுதாள், அரற்றினாள்,

> அக்கா அழுதாள், அரற்றினாள்,தலையை சுவரிலே மோதினாள் விழுந்து புரண்டாள். தன் வாழ்க்கையே அஸ்தமித்து விட்டதாக உணர்ந்தாள்.

தலையை சுவரிலே மோதினாள் விழுந்து புரண்டாள். தன் வாழ்க்கையே அஸ்தமித்து விட்டதாக உணர்ந்தாள். உணர்ச்சியற்ற நடைப்பிணமானாள் அவள் முகத்திலிருந்த வசீகரம் தொலைந்து போய்விட்டது. வழமையான கலகலப்பு விடைபெற்றுவிட்டது.

காலம் என்னும் வைத்தியர் அவள் துயரத்தை மாற்றி விடுவார் என்றுதான் நினைத்தோம். அவளுக்குத் திருமணம் செய்து வைக்க அப்பாவும், அம்மாவும் படாத பாடுபட்டார்கள். அக்கா சம்மதிக்கவில்லை.

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்தக் கட்டாய இடப் பெயர்வு. நாங்கள் சொந்த ஊரில் வசிப்பது பாதுகாப்பு படைக்குப் பாதுகாப்பில்லையாம்.

சுவிஸில் இருக்கும் அண்ணா நிலைமையை அறிந்து அற்ப சொற்ப உதவி செய்தார். குடும்பக்காரர் ஆனபின்பு தாராளமாக அள்ளிக் கொடுக்க முடியவில்லை. அவர் மனைவி என்ன தடாதகைப் பிராட்டியா?

முகாம் என்கிற நரகத்திலிருந்து விடுபட்டுக் குறைந்த வாடகையில் ஒரு கொட்டிலில் வசித்தோம்.

அப்பா ஒரேயடியாக இடிந்து போனார். வேரறுந்த விருட்சமாக முகவரி இழந்து வாழ்வது அவர் உள்ளத்தை வெகுவாகப் பாதித்திருக்க வேண்டும். கைக்கு வரும் நேரத்தில் ஒரேயடியாக அழிந்துபோன நெல், பொன்னாகக் குவித்த தென்னந்தோட்டம், சீவியம் முழுக்க உழைத்துச் சேர்த்த நகைநட்டு, பணம், பட்டிமாடு, கூடிவரும் வேளையில் குலைந்து போன மகளின் திருமணம் - இவை அவரை வருத்தியது

அம்மாவின் முகத்திலே முதுமை எழுதிய கவிதை வரிகள்: ஐம்பதுக்கு முன்னமேயே நரைத்துவிட்ட தலை.

அக்காதான் கொம்யூனிக்கேசன் போய் அண்ணாவுடன் தொடர்பு கொள்வாள். நானும் துணைக்குப் போவேன். அடிக்கடி போனதால் ஏற்பட்ட பரிச்சயத்தால் கொம்யூனிக்கேசன் சொந்தக்கார இளைஞனான வரதனுக்கு. அக்காவைப் பிடித்துவிட்டது. அக்காவின் இறுகிப்போன முகங்கள் கூட இளகியிருப்பது போல் காணப்பட்டது. எல்லாமே தொலைந்து விட்டது என்று நினைத்தவளின்முகத்தில் புதிய ஒளி ஒரு சிறிய நம்பிக்கைத் தளிர். வரதன் எங்களை வந்து சுகம் விசாரிக்கும் போதெல்லாம் அக்காவின் வதனம் விகசித்து மலரும்.



ஒருநாள் திடீரென்று வந்த வரதன் தான் அக்காவைத் திருமணம் செய்யவிரும்புவதாகச் சொன்னார். அப்பா தன் காதுகளையே நம்பவில்லை. அக்காவை நிமிர்ந்து பார்த்தாள். அவள் நாணித் தலைகுனிந்து கால் பெருவிரலால் தரையில் கோலம் போட்டாள்.

இனியென்ன திருமணத்திற்கு நாள் குறிப்பதுதான் பாக்கி நாங்கள் அனைவருமே பட்டதுயரங்கள் அத்தனையையும் மறந்து குதூகலித்தோம்.

சுவிஸ் அண்ணா திருமண ஏற்பாட்டிற்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டார். திருமண ஏற்பாடுகள் ஜாம் ஜாம் என்று நடைபெற்றன.

அப்பொழுதுதான் அந்தச் செய்தி வந்தது. வரதனை எல்.ரி.ரி. என்ற சந்தேகத்தின் பேரில் இரகசியப் பொலிசார் கைது செய்து பூசாவுக்கு அனுப்பிவிட்டார்களாம்.

பூசாவுக்கு கொண்டு செல்பவர்கள் திரும்பி வருவது என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. தற்செயலாக விடுதலை செய்யப்படுபவர்கள் விதம் விதமான சித்திரவதைகளின் பின் அரைகுறை உயிருடன் சித்த சுவாதீன மற்றவர்களாகத்தான் இருப்பார்கள்.

எல்லோரும் கலங்கினோம், அக்காவின் விதியை நினைத்து கண்ணீர் வடித்தோம். அக்கா மட்டும் அழவில்லை வாழ்க்கையில் எப்பொழுதாவது ஏற்படும் துன்ப துயரங்களின்போதுஅழலாம். துயரமே வாழ்க்கையாகிவிட்டபோது அழுவதில் அர்த்தமில்லை. என்று அவள் நினைத்திருக்கவேண்டும். ஒரு வேதனையும் விரக்தியும் கலந்த சிரிப்புடன், "எங்கடா இவ்வளவு நேரமும் போனனி வாடா சாப்பிட" என்னை அன்போடு அழைத்து உணவு பரிமாறினாள்.

அதில் ஒரு கவளங்கூட என் தொண்டையுள் இறங்க மறுத்துவிட்டது.

விறுவிறுப்பான தொடர் நாவல்

# என் கணவன் எனக்கு மட்டும் தான் [15]



திடீரென இப்படி மழை பெய்யும் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை. அதனால் பரிமளத்தின் வீட்டில் பூப்பூ நீராட்டு விழாவுக்காகப் போடப்பட்டிருந்த பந்தலெல்லாம் ஒழுகி, சோடிப்புக்கடதாசி எல்லாம் நனைந்து சாயம் வடிந்து காணப்பட்டது.

மத்தியானம் விழா நடந்ததால் சுகுமாரும், மாணிக்கமும் போன போது அங்கே சனங்கள் அவ்வளவாக இல்லை. இவர்களைப்போலவே இரண்டொருவர் வந்திருந்தார்கள்.

உள்ளே'பொக்சீல் துள்ளிசைப் பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. கொழுவல் கரண்ட் மூலம் வீடு, வளவெல்லாம் ஒளி வெள்ளம் பரவிக்கிடந்தது.

சுகுமாரும், மாணிக்கமும் வருவதைக்கண்ட பரிமளம் பதறியடித்தபடி கதிரைகளை இழுத்துப் போட்டு, அவைகளிலிருந்த மழை நீரைத் துடைத்துக் கொண்டே ''மழை எல்லாத்தையும் கெடுத்துப் போட்டு'' என்றபடி சுகுமாரைப் பார்த்துச் சிரித்தாள்.

அவனும் பதிலுக்குச் சிரித்தபடி, கதிரையில் கைக்குட்டையை விரித்து அமர்ந்து கொண்டான்.

மாணிக்கமும் வேட்டித் தலைப்பை பின் பக்கம் புரட்டி இருந்து கொண்டான். பரிமளம் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''மழ பெய்யத்தான் வேணும் இல்லையெண்டால் கோதாரி வருத்தமெல்லாம் வந்து நம்மளக் கொண்டு போடும்.! என்னெண்டாலும் உங்கட கலியாணத் திருவிழாவெல்லம் முடிஞ்சப் பிறகு பெஞ்சிருக்கலாம்'' என்றான் மாணிக்கம்.

''எங்க மாணிக்கம் உங்கட அவவக்காணல்ல நீ மட்டும் வந்திருக்கா?'' என்று கேட்டாள் பரிமளம்.

''உனக்குத் தெரியும் தானே! அவள் ஒண்டுக்கும் உசும்ப மாட்டாள், அடைக்கலச்சல்லித் தவளையப்போல ஒரே ஊட்டுக்கதான். அதுசரி என்னட்டக் கேட்டது போல ஏன் நம்மட கிளாக்கரப் பார்த்து நீ கேட்கல்ல சும்மா தெரியாமத்தான் கேட்கிறன்.....''

இதைக்கேட்டதும் சுகுமாரின் நெஞ்சிக்குள் ''திக்''என்றது. மெல்லச்சிரித்து சமாளித்து கொண்டான்.

''இன்னும் அவங்களுக்குள்ள ஒற்றுமையில்லாது இருக்கும் போது அவங்க எப்படி ஜோடியா வாற? அதனாலதான் அவரிட்ட அப்படிக் கேட்கல்ல''

சுகுமார் மாத்திரமல்ல மாணிக்கமும் பரிமளத்தை ஆச்சரியத்தோடு பார்த்தான்.

''இதெல்லாம் இவளுக்கு எப்படித் தெரியும்?'' என்று சுகுமார் சிந்தித்த போது மாணிக்கம் பரிமளத்தைப் பார்த்துக் கேட்டான்.

''பரிமளம் , உனக்கு எப்படி கிளாக்கரவங்கட பிரச்சினை தெரியும்!''

''இங்க நாலா பக்கங்களிலுமிருந்து நிறையப்பேர் வாறவங்க தானே !ஒருத்தராவது குடிச்சதும் இந்தக் கிளாக்கரய்யாவைப் போல பேசாம வீட்ட போறது கிடையாது. ஊரிலுள்ள எல்லா நரகல்களையும் அள்ளிப்போட்டு கந்தப்பார்த்துப் போட்டுத்தான் போவாங்க. அந்த நேரத்தில தெரிஞ்சதுதான். மத்தப்படி எனக்கு எப்படித் தெரியும். அதக்கேள்விப் பட்ட பிறகுதான் சரியான மனவருத்தப்பட்டன். எல்லாம் இந்த நாசமறுத்த குடியாலதான் வாற!'' என்றாள் பரிமளம்.

''இதெல்லாம் அறிஞ்சிருந்தும் ஏன்டியம்மா இந்தத் தொழிலச் செய்யிறா?''.

''என்ர கஷ்ர நிலமையாலதான் செய்தனான். அதாலதான் நாங்க இத்தனை நாளும் கஞ்சித்தண்ணியாச்சும் குடிச்சம், ஆனா இண்டையில இருந்து இந்தச் சாராயத் தொழிலுக்கு முழுக்குப் போடப் போறன்.

''அப்ப சீவிக்கிறத்துக்கு வழி?''.

''நான் மறு கலியாணம் செய்யப் போறன் !''

''என்ன மறு கலியாணமா? ஆர்டியம்மா மாப்பிள்ள ?'' ஆச்சர்யத்தோடு கேட்டான் மாணிக்கம். அவள் என்ன சொல்லப் போகிறாளோ !என்பதை அறிய ஆவலோடு இருந்தான் சுகுமார்.

பரிமளம் தொடர்ந்து சொன்னாள்.

''மாணிக்கண்ண ஒரு பொம்புள இந்த ஊரிலஅதுவும் இந்தக்காலத்தில சீவிக்கிற மிச்சம் கஷ்ரம். உழைச்சுக்குடும்பத்தக் காப்பாத்திற மாத்திரமல்ல குடும்பத்துக்கும் பாதுகாப்பு ஆம்பிளதான். ஆம்பிள இல்லையெண்டா எல்லாரும் கெட்ட நோக்கத்தோடதான் வாறான், போறான். அதோட என்ட மூத்தபிள்ளையும் குமராய்ப் பொயித்து . இதுக்குப்பிறகும் சாராயம் வித்தன் என்டா அது சரியில்ல''.

''மெய்தான் பரிமளம் நீ சொல்றதில நியாயம் இருக்கு. ஆனா உன்ர கஷ்ரத்துக்குள்ள கலியாணத்தையும் முடிச்சியென்டா குடும்பத்தில இன்னொரு அங்கத்தவருக்கும் சேர்த்துத் தானே நீ உழைக்க வேணும். ''

''இல்ல மாணிக்கண்ண அவர் வேறு யாருமல்ல, என்ர புருசன்ர ஒன்றுவிட்ட சகோதரன்தான். அவர்ர பெண்சாதி முதல் பிரசவத்திலேயே செத்துப் போனாள். அவள உயிராக நேசிச்சவர் கலியாணமே வேணா மெண்டு பல வரிசம் வாழ்ந்தவர். இப்ப பலரின் புத்தி மதிக்கு இணங்கி என்னத் திருமணம் செய்ய ஒத்துக் கொண்டிருக்கிறார்.''

''அவருக்கு என்ன தொழில்?''

''ஓடாவி வேல!''

''மிச்சம் சந்தோசம். அப்ப எங்களுக்கு எப்ப சாப்பாடு?''

''இதென்ன புதுக்கலியாணமா? கிழட்டுக் கலியாணம். வாற நல்ல நாள் பெருநாளில் எங்களுக்குள்ளேயே திருமணத்த செய்யிறதாக ஏற்பாடு செய்திருக்காங்க மூத்த அண்ணர் பொஞ்சாதிர ஆக்கள்ற ஏற்பாடுதான் எல்லாம்.''

இப்படிச் சொல்லிக் கொண்டே பரிமளம் சுகுமாரைப் பார்த்தாள். சோகம் கலந்த மகிழ்ச்சியோடு அவளைப் பார்தான்.

''கிளாக்கரய்யா நான் உங்களப் போல கனக்கப் படிக்கல்ல, ஆனாலும் கொஞ்ச நாளாக நீங்க இங்க குடிக்க வந்த நாளிலிருந்து கவனிச்சிருக்கன். இங்க வாற ஆக்களுக்குள்ள நீங்கதான் அதிகம் பேசாது அமைதியோடு வந்த வேலையக் கவனிச்சித்து திரும்பிப் போயிருக்கீங்க, முற்பிறப்பில உங்கட சகோதரியாப் பிறந்திருப்பேனோ? தெரியாது. உங்க மேல எனக்கு ஒரு தனியான பாசம். நீங்க பிரிஞ்சிருக்கிறத கிட்டடியிலதான் அறிஞ்சன். அதுக்குப்பிறகு எனக்கு எப்படியும் உங்களுக்குப் புத்தி சொல்ல வேணுமெண்டு எண்ணம் வந்தது. இப்ப நல்ல சந்தர்ப்பம். தயவு செய்து குடிய விட்டுப்போட்டு, கொண்டவளக் கூட்டித்து வந்து சந்தோசமா இருங்க, நீங்க நல்லவர் நல்லா வாழ வேணும்.!''

மாணிக்கத்துக்கு இப்படிப் பரிமளம் சொன்னதைக் கேட்டதுமே விழியிரண்டும் ஆச்சர்யத்தால் வெளியே வந்தன.

சுகுமார் வழமை போலவே அமைதியாக இருந்தான் ''நான் உங்களப்பத்தி என்னவெல்லாமோ நினைச்சிருந்தன், இப்பதான் உங்களப்பத்தி பரி பூரணமா அறிஞ்சு கொண்டன். நாங்க இங்க வரும் போதே குடிக்கிறதப்பத்தித்தான் கதச்சித்து வந்தம். இந்தா இருக்கிறார் மாணிக்கண்ணன் நான் சொல்ற பொய் எண்டா நீங்க இவரக் கேட்டுப் பாருங்க!''

மாணிக்கம் பரிமளத்தோடு சேும் போது நீ என்றுதான் அவளை விழிப்பான். ஆனால் அன்றிலிருந்து இன்று வரை 'நீங்க' என்று சுகுமார் பேசுவதிலிருந்து அவனது குணாம்சத்தை பெரிதாகவே எண்ணியிருந்தாள்.

''இஞ்ச பிள்ள பரிமளம் இண்டையில இருந்து குடிக்கிறல்ல எண்டு கிளாக்கர் சொல்லித்து வந்தார். உனக்கிட்ட சாராயம் இருக்குமோ என்னவோ எண்டு போட்டுத்தான் இவன் வீரகத்திட பெண்டிலிட்ட ஆளுக்கு கால் போத்தல் குடிச்சித்து வாறம். அதென்னத்தக்காணும்! எறும்பு கடிச்சி சொறிஞ்ச மாதிரி எல்லாம் முறிஞ்சி பொயித்து''.

இப்படி மாணிக்கம் சொல்லிக் கொண்டிருக்கும் போது இரு பிள்ளைகள் கேக், வாழைப்பழம், கூல்றிங்ஸ் போன்றவற்றைக் கொண்டு வந்தார்கள்.அதை அவதானித்த பரிமளம்.

''பிள்ளைகள் இதையெல்லாம் கொண்டு போய் அங்கால வையுங்க. பிறகு கொடுக்கலாம், என்று பிள்ளைகளை அனுப்பி விட்டு மாணிக்கண்ண கிளாக்கரய்யாவையும் கூட்டித்துக் கொண்டு பின் பக்கம் வாருங்க'' என்றபடி மெல்ல எழுந்து போனாள்.

அவள் ஏற்கனவே ஏற்பாடு செய்து வைத்தது இவர்களுக்குத் தெரியாது, பின் பக்கம் இருவரும் போய்ப் பார்த்தார்கள், அங்கே ஒரு போத்தல் சிறந்த சாராயமும், ரேஸ்டும், சிகரட் பெட்டியும், சோடா போத்தலும் இருந்தன.

இதைப் பார்த்ததுமே மாணிக்கத்திற்கு கை,கால் ஓடவில்லை. முறைதலை தெரியவில்லை. இவ்வளவு நேரமும் சுகுமாரோடு மரியாதை கொடுத்துப் பேசியவன், ''வாடா மச்சான் சுகு குரு மாற்றம் இண்டைக்குத்தான் நமக்கு உச்ச பலனைத் தந்திருக்கு'' என்று சுகுமாரின் கையைப் பிடித்து கிள்ளிச் சொன்னான்.

இருவரும் போய்க் கதிரையில் அமர்ந்ததும் அங்கே பரிமளம் வந்து பளிச்செனச் சிரித்தாள்.

''மறக்க முடியாத சிரிப்பு'' என்று சுகுமாரின் மனம் தனக்குள் எண்ணிக் கொண்டது.

''இதுதான் இன்றைய கடைசி அன்பளிப்பு, முழுவதும் உங்களுக்குத்தான்.



இண்டைக்கு எத்தனை மணியானாலும் சரி ரெண்டு பேரும் சாப்பிட்டுத்தான் போக வேண்டும். மத்தியானம் உங்கள எதிர் பார்த்தன் வரல்ல. அதுவும் ஒண்டுக்கு சரி தான் இப்ப வந்ததுதான் நல்லது மத்தியானம் வந்திருந்தா இப்படி மனம் விட்டுப் பேசச் சந்தர்ப்பம் வாய்த்திருக்காது.''

என்று சொல்லி விட்டு நடந்தாள் பரிமளம்.

''பரிமளம் தலைக்கு மேல இருக்கிற ரியூப் லைற்ற 'ஓவ்' பண்ணச் சொல்லு வேருத்துக் கொட்டுது'' என்றான் மாணிக்கம்.

ரியூப் லைற் அணைக்கப்பட்டது. பந்தலுக்குள் எரிந்த வெளிச்சம் 'டிம்'மாக இவர்களுக்கு ஒளி கொடுத்தது.

''இதுதான் கடைசிக் குடி '' என்றபடி சுகுமார் சாராயப் போத்தலை தூக்கிக் கிளாசுக்குள் மாற்றினான்.

''இனித்தான் குடிய விட்டு என்ன செய்யிற !காடு வா வா எண்டுது வீடு போ போ எண்டுது!'' என்றபடி மாணிக்கமும் குடித்தான். அதைப்பார்த்தபடி சுகுமார் சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

(தொடரும்)

## வாசகர்களின் கவனத்திற்கு!

''என் கணவன் எனக்கு மட்டும்தான்'' தொடர்நாவலை எழுதும் ஈழத்தின் பிரபல நாவல் ஆசிரியர் யார்?

அவர் பெயரை தமிழ்அலையில் வெளியாகும் கூப்பனில் எழுதி அஞ்சலட்டையில் ஒட்டி அதை எமக்கு அனுப்பிவைக்கவும்.

நாவல் முடிவில் மூன்று வாசகர்களுக்கு அந்நாவலாசிரியரின் புதிய மூன்று நாவல்கள் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.

### கூப்பன்

நாவலாசிரியர்

பெயர்.................................................

அனுப்புவரின் பெயர்..................................

விலாசம்.................................................

கையொப்பம்...................................

# “மட்டக்களப்புத் தமிழகத்தில் புனை கதை இலக்கிய முயற்சி”

சென்றவாரத் தொடர்ச்சி...

**சிறுகதை:-**

நாவல், குறுநாவல் முயற்சிகளை விட சிறுகதைத் துறையில் மட்டக்களப்புத் தமிழக எழுத்தாளர்கள் கூடிய கவனம் செலுத்தியுள்ளமையை / செலுத்தி வருகின்றமையை அவதானிக்கலாம். சமகால நிகழ்வுகளை அவ்வப்போது பாரபட்சமின்றி துணிவுடன் சிறு கதைகளினூடாகப் பலர் வெளிக் கொணர்ந்துள்ளனர். தொகுப்புக்களாக வெளிவந்தவற்றை விட பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலுமாக ஏராளமான சிறுகதைகள் இப் பிரதேசத்தில் இருந்து வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

மட்டக்களப்புத் தமிழகச் சிறுகதை என்று நோக்குகின்ற போது மூத்த எழுத்தாளர்களுள் ஒருவராக நினைவுக்கு வருபவர் பித்தன் (கே.எம்.ஷா) ஆவார். 1940களில் இவர் எழுதத் தொடங்கினாலும் 1995 லேயே ‘பித்தன் கதைகள்’ என்ற பெயரில் தொகுப்பொன்று வெளிவந்தது. தமிழ்ச் சிறுகதை உலகில் ‘முடிசூடா மன்னன்’ எனப் போற்றப்படும் புதுமைப்பித்தனின் எழுத்துக்களால் ஆகர்ஷிக்கப்பட்ட பித்தன்,தனது ஆக்கங்களிலும் அவரது போக்கைப் பின்பற்ற முனைந்தார். மட்டக்களப்பு வாழ் முஸ்லிம் சமூகத்தினரிடையே காணப்பட்ட பிரச்சினைகளை மட்டுமன்றி, பொதுவான சமூகப் பிரச்சினைகளையும் தம் கதைகளின் கருப்பொருட்களாகக் கையாண்டார். இவரது கதைகளுள் ‘தாம்பத்தியம்’ , ‘பாதிக் குழந்தை” , ‘நத்தார்ப்பண்டிகை’ , ‘திருவிழா’ முதலியன குறிப்பிடத்தக்கன.

செ. இராசதுரையும், பித்தனும் சேர்ந்து 1940களில் ‘லங்கா முரசு’ என்ற பத்திரிகையை நடத்தினர். இப்பத்திரிகையிலேயே பித்தனின் முதற்சிறுகதையான ‘இருள்’ (1943) வெளிவந்தது. செ.இராசதுரை, அருள்.செல்வநாயகம், மருதூர்க் கொத்தன் போன்றோரும் இக்காலத்தில் எழுதினர். செ.இராசதுரையின் சிறுகதைகள், ‘மிஸ்கனகம்’ என்ற பெயரில் தொகுப்பாக வெளிவந்ததாகத் தெரிகிறது.

மூத்த எழுத்தாளர் வரிசையில் சா.இ.கமலநாதன், வ.சிவசுப்பிரமணியம், ச.பங்கேஸ்வரி ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது சிறுகதைகள் பத்திரிகைகளில் முன்னர் வெளிவந்தன.

மருதமுனைச் சூழலை சிறுகதைகளிற் கொணர்ந்து எழுதியோருள் மருதூர்க் கொத்தன் முதன்மையானவர். இவரது கதைகளுட் சில ‘மருதூர்க் கொத்தன் கதைகள்” என்னும் தொகுப்பாக 1985ல் வெளிவந்துள்ளன. ஓட்டமாவடிப் பிரதேச முஸ்லிம் மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும், பொதுவான சமூகப்பிரச்சினைகளையும், பெண்களின் அவலங்களையும் எஸ்.எல்.எம்.ஹனிபாவின் கதைகளில் காணலாம். ‘மக்கத்துச் சால்வை’ என்னும் இவரது தொகுப்பு 1992ல் வெளிவந்தது.

யூ.எல்.தாவூத், மருதூர்வாணன், எஸ்.முத்துமீரான், மருதூர்க்கனி, மருதமுனை மஜுத், நயீறமா சித்திக், நற்பிட்டிமுனை பளீல், எம்.எம்.ஸாஹீல் ஹமீது, அ.ஸ.அப்துஸ்ஸமது,

றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
விரிவுரையாளர்
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

ஜுனைதாஷெரீப், வை.அஹ்மத், எஸ்.நஸீறுதீன், ஒலுவில் அமுதன் போன்றோரும் சிறுகதை எழுத்தாளர்களுள் சிறப்பிடம் பெறுபவர்கள். எம்.எம் ஸாஹீல்ஹமீதின் ‘இரு உருவங்கள்’ தொகுப்பு 1951லும், யூ.எல்.தாவூதின் ‘முஸ்லிம் கதைமலர்’ தொகுப்பு 1964இலும், மருதூர்வாணனின் ‘முதலிரவு’ என்னும் தொகுப்பு 1970 இலும் வெளிவந்தன.அ.ஸ.அப்துஸ்ஸமதின் முதற்கதை 1950இல் தினகரனில் வெளிவந்ததாகக் கூறுவர். இவரது ‘எனக்கு வயது பதின்மூன்று’ என்னும் சிறுகதைத் தொகுப்பு 1977ல் வெளிவந்தது. முஸ்லிம் எழுத்தாளர் சிலரது சிறுகதைகளைத் தொகுத்து ‘பிறைபூக்கள்’ (1979) என்ற பெயரில் இவர் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதிலுள்ள சிலகதைகளும் அதனை எழுதியோரும் **வருமாறு:**

‘மதியம் தப்புகிறது’ - வை.அஹ்மத்
‘நியதி’ - அ.ஸ. அப்துஸ்ஸமது:
‘பாலை வெளியிலே ஒரு பனித்துளி’ - மருதூர்.ஏ.மஜுத் ‘சலிமத்து நாச்சி’ - மருதூர்வாணன் ‘மண்பூனைகளும் எலிபிடிக்கும்’ - மருதூர்க்கனி
‘ஒரு ஹஜ் நிறைவேறுகிறது’ - எஸ்.எல்.எம்.ஹனிபா ‘கல்யாண ஊர்வலம் வரும்’ - ஜுனைதா ஷெரீப்
‘உணர்வுகள் புஷ்பிக்கப்படுகின்றன’ - மருதூர் அலிக்கான்.

ஜுனைதா ஷெரீப்பின் இரு சிறுகதைத் தொகுதிகள், ‘இவர்களுக்காகவா’ , ‘இளநரை’ என்பனவாகும். மருதமுனை மஜீத்தின் சில சிறுகதைகள் ‘பன்னீர் வாசம் பரவுகிறது’ (1979) என்னும் தொகுப்பாக வெளிவந்துள்ளன. ஒலுவில் அமுதனின் ‘கலையாத மேகங்கள்’ என்னும் தொகுப்பு 1999ல் வெளிவந்தது. எஸ்.நஸுறுதீனின் இரு தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. ‘நல்லதோர் வீணை செய்தே’ (1997), பெண்ணே போற்றி ‘(1999) என்பனவே’ அவையாகும்.

அண்ணல், எம்.ஏ.நு.ஃ.மான் போன்றோர் முன்னர் சிறுகதை முயற்சியில் ஈடுபட்டோராவார். எம்.ஏ.நு.ஃ.மானின் ‘பொறி’ என்னும் சிறுகதை 1966ல் - ‘ரசிகர் குழு போட்டிக்கதைகள்’ என்னும் தொகுப்பில் (இதன் தொகுப்பாசிரியரும் இவரே) வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

அறுபதுகளில் எழுதியோருள் ஜோர்ஜ் சந்திரசேகரன், சி.மௌனகுரு, சத்தியன் போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்கள். மேற்குறிப்பிடப்பட்ட தொகுப்பில் (ரசிகர்குழு - போட்டிக்கதைகள் 1996) ஜோர்ஜ் சந்திரசேகர னின் ‘மோகம்’ என்ற சிறுகதையும் சத்தியனின் ‘‘சிரத்தை” என்ற சிறுகதையும் வெளிவந்தன. சி.மௌனகுரு எழுதிய ‘ஓட்டம்’ என்ற சிறுகதை விண்ணும் மண்ணும் (1963) என்னும் தொகுப்பில் வெளிவந்துள்ளது. ஜோர்ஜ் சந்திரசேகரனின் சில சிறுகதைகள்அடக்கிய தொகுப்பு ‘ஜோர்ஜ் சந்திர சேகரனின் சிறுகதைகள்” (1994) என்ற பெயரில் வெளிவந்துள்ளது. இவரது கதைகளுள் மிகப் பெரும்பாலானவை கொழும்புச் சூழலைப் பின்னணியாகக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பின் ஆரம்பகாலச் சிறுகதை வளர்ச்சியில் எஸ்.பொன்னுத்துரைக்கும் சிறப்பானதோர் இடமுண்டு. இவரது ‘அவா’ , ‘ஆண்மை’ ஆகிய தொகுப்புக்கள் குறிப்பிடத்தக்கவை. புலம் பெயர்ந்து வாழும் இரண்டாவது தலைமுறையினரின் பண்பாட்டு மாற்றங்களையிட்டுக் கவலையுறும் அவர்களது பெற்றோரின் மனக்குமுறலாக அமையும் கதை இவரெழுதிய ‘Adieu’ என்னும் கதையாகும்.

அன்புமணி (இரா.நாகலிங்கம்) எழுதிய கதைகள் ‘வாழ்க்கைச் சுவடுகள்’ என்னும் தொகுப்பாக வெளிவந்துள்ளது. செ.குணரத்தினத்தின் கதைகள் சில அடங்கிய தொகுப்பு ‘விடிவுகள் அடிவானில் (1992) என்பதாகும். இவர் அமிர்தகழியான் என்னும் புனைப்பெயரில் ஏராளமான நகைச் சுவைகளையும் எழுதியுள்ளார்/எழுதிவருகிறார். கண.மகேஸ்வரனின், ‘எல்லை வேம்பு’ (1994), வாகரைவாணனின் (எஸ்.அரியரத்தினம்) ‘அரசி உலக நாச்சியார்’ (1998), வெற்றிவேல் விநாயகமூர்த்தியின் ‘பொன்னாச்சிபிறந்தமண்’ (1998), ‘ஆண்டவர் பிறந்த மண்’ (2000), மட்டுநகர் முத்தழகுவின் ‘தாகமாக இருக்கிறேன்’ (1995), ஆரையம்பதி ஆ.தங்கராசாவின் ‘யுகமொன்று உடைகிறது‘ (2001), மு.தவராசாவின் ‘மறைமுகங்கள்’(2003) ஆகிய படைப்புக்களும் மட்டக்களப்புத் தமிழகத்தில் வெளிவந்த சிறுகதைத் தொகுப்புக்களே. ஆரையம்பதி ஆ.தங்கராசா, வாகரைவாணன் போன்றோர் மிக நீண்ட காலமாக எழுதிவரினும் தொகுப்புக்கள் அண்மையிலேயே வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

மொழியை மிக இலாவகமாகப் பயன்படுத்தி கலைத்துவச் செறிவுடன், மரபுகளை உடைத்துப் புதிய செல்நெறியைச் சிறுகதையிற் புகுத்தியோருள் உமாவரதராஜன், ஓட்டமாவடி அறபாத், திசேரா (ச.தியாகசேர்), திருக்கோவில் கவியுவன், அம்ரிதா ஏஜெம் (எம்.றி யாஸ்) முதலியோர் சிறப்பிடம் பெறுபவர்கள். உமாவரதராஜனின் ‘உள்மனயாத்திரை’ (1988) சமூகத்தில் காணப்படும் போலித்தனங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவது. இத் தொகுப்பிலுள்ள கதைகளுள் ‘மாலை சூட்டிகள்’, ‘முகங்கள்’ , ‘சூரியனின் முன்புறம்’ , ‘ஜெனி’ ஆகியவை குறிப்பிடத்தக்கவை. ஓட்டமாவடி அறபாத்தின் ‘நினைந்தழுதல்’ (1998), ‘ஆண் மரம்’ (2001) ஆகிய தொகுதிகள் சமகால அரசியல் - சமூக நிலைமைகளை வெளிக்கொணருவன. திரேசாவின் ‘கபாலபதி’ (2000) என்னும் தொகுப்பிலுள்ள கதைகள் தமிழ் மக்கள் எதிர் கொண்ட வேதனைகள் பற்றியன. திருக்கோவில் கவியுவனின் தொகுப்பு ‘வாழ்தல் என்பது’ (1996) ஆகும். அம்ரிதா ஏயெம்மின் தொகுப்பு ‘விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள்’ (2002) என்பதாகும். ஈழத்தின் சமகால அரசியல் நிலைமைகளையும் தமிழ்த் தேசிய வாதத்தின் முன்னெடுப்புக்களையும், எதிர் விளைவுகளையும், பல்வேறுசமூகங்களும் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும் இவர்களது கதைகளிற் காணலாம்.

மலையாளத்திலிருந்து தமிழில் கதைகளை மொழி பெயர்த்து வெளியிட்டோருள் வீ.ஆனந்தன் முக்கியமானவர். இத்தகைய கதைகளுள் ஒன்று ‘இஸ்திரிகை’ என்பது.

புலம் பெயர்ந்து வாழும் மட்டக்களப்புத் தமிழகத்தைச் சேர்ந்த செல்வமதீந்திரன், கல்லாறு சதீஷ், களுவாஞ்சிக்குடி யோகன் முதலியோர் புகலிட அனுபவங்களையும் தாய்நாட்டு ஏக்கங்களையும் கதைகளாகத், தந்துள்ளனர். கல்லாறு சதீஸ் எழுதிய ‘‘சொர்க்கங்களும் தண்டிக்கின்றன” (2002), ‘பனிப்பாறைகளும் சுடுகின்றன’ (1997)” ஆகிய தொகுப்புகள் வெளிவந்துள்ளன.பெண் எழுத்தாளர்களுள் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தனக்கெனத் தனியிடத்தைக் சிறுகதைத் துறையிலும் தக்கவைத்துள்ளார். ‘‘அம்மா என்றொரு பெண்,” ‘‘ஏக்கம்”, ‘‘அரைகுறை அடிமைகள்”, ‘‘நாளைக்கு இன்னொருவன்” முதலிய சிறுகதைத் தொகுப்புக்கள் இவருடையவை. மட்டக்களப்புத் தமிழகப் பெண் எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்க இன்னுமொருவர் மண்டூர் அசோகா ‘‘கொன்றை பூக்கள் ”(1976) ‘‘சிறகொடிந்த பறவைகள்” (1993 ‘‘உறவைத் தேடி” (2003) என்பன இவரது தொகுப்புக்களாகும். முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுள் மிக நீண்டகாலமாக எழுதிவரும் காத்தான்குடி பாத்திமாவின் சில சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு ‘‘அத்தனையும் முத்துக்கள்” 2003 என்ற பெயரில் வெளிவந்துள்ளது. பெண்களின் பிரச்சினைகள் இவரது கதைகள் பலவற்றின் கருப்பொருள்களாகியுள்ளமையுடன் மத எல்லைகளுக்குள்ளும் அதற்குப் புறம்பாகவும் பெண்களுக்கான உரிமைகளைத் துணிச்சலுடன் இவர் கையாண்டுள்ளமை குறிப்பிடதக்கது.

தொகுப்புக்கள் எதுவும் வெளியிடப்படா விடினும் மட்டக்களப்புத் தமிழகத்தில் பலர் எழுதிவந்துள்ளனர். றூத் சந்திரிக்கா, தா.இந்திராணி, பா.அனுராதா,மண்டூர் மீனா, வேலூர் சகுந்தலா, ஆனந்தா, ஏ.ஜீ இராஜேந்திரம், த. மலர்ச்செல்வன், ஏ. நவரெத்தினராசா குரூஸ், அ.ச.பாய்வா, கு.வாசுகி, எஸ் விஜயலெட்சுமி, ருத்ரா, மலர்வேந்தன், எச்.ஏ.மெத்தியேஸ், தாழை செல்வநாயகம், மு.முத்துமாதவன் (இவர் மிக நீண்ட காலமாக எழுதிவருபவர்) சபாசிறிதரன் , எஸ். பாண்டியன் என இப்பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இத்தகையோரின் தொகுப்புக்கள் வெளிவருவது மட்டக்களப்புத் தமிழக இலக்கிய முயற்சிகளுக்கு மேலும் வளம் சேர்ப்பதுடன் அவசியமானதும். கூட

தொகுத்து நோக்குமிடத்து ஈழத்தின் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலிருந்தும் வேறுபட்டு தனித்துவமான வாழ்வியல் கூறுகளையும், அனுபவங்களையும், வழக்கங்களையும், மரபுகளையும்,மொழி வழக்கையும் பெற்றுள்ள மட்டக்களப்புத் தமிழகம் இங்குள்ள எழுத்தாளர்களால் அதன் தனித்துவம் குன்றாத, வகையில் தமிழலகிற்கு அறிமுகமாகியுள்ளமை அவதானிக்கத்தக்கது.

பிரதேச ரீதியான, மண்வாசனையுள்ள ஆக்கங்களைப் புனைகதையூடாகத் தந்தமையிலும், பொதுவாக ஈழத்துக்கெனத் தனித்துவமாய் அமைந்த சில பிரச்சினைகளை (இனமுரண்பாடுகள் யுத்தமும் விளைவும், போராட்டச் சூழல் முதலியன) மட்டக்களப்புத் தமிழக எழுத்தாளர்கள் வெளிக் கொணர்ந்துள்ள வகையிலும் இப்பிரதேசத்திற்குரிய சில விடயங்களை (தமிழ்-முஸ்லிம் உறவு, தமிழ் - சிங்கள உறவு, விவசாயிகளதும் மீனவர்களதும் பிரச்சினைகள், பல்மத இணைவுகளும் முரண்பாடுகளும், யுத்தமும் பெண்களும், யுத்தமும் சிறுவர்களும்) கருப்பொருள்களாக்கியமையிலும், எழுதப்பட்ட சமகால நிகழ்வுப் பதிவுகளாக வந்துள்ள வகையிலும் பெண்ணிலைச் சிந்தனைகள் முன்னெடுக்கப்பட்ட முறைமையிலும் ஈழத்துப் புனைகதை வளர்ச்சியில் மட்டக்களப்புத் தமிழகம் புறந்தள்ளப்பட முடியாதளவிற்கான பங்களிப்பினை நல்கி வருகின்றமையை அவதானிக்கலாம்.

இத்தகைய வளர்ச்சிக்குத் தமிழ்ப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் களம் அமைத்துக் கொடுத்துப் பாரிய பங்களிப்பினைச் செய்திருக்கின்றன. மிகக் குறிப்பாக மட்டக்களப்புத் தமிழகத்தில் வெளிவந்த / வெளிவந்து கொண்டிருக்கின்ற சஞ்சிகைகளுக்கும், பத்திரிகைகளுக்கும் இவ்வகையில் சிறப்பானதோர் இடமுண்டு. தாரகை, உதயம், தரிசனம், போது, விருட்சம், தொண்டன், களம் , வயல், பெண், கிழக்கொளி, தழல், வெளி, தேனகம், இளம்பரிதி, சமாதானம் முதலிய சஞ்சிகைகளும், விடிவானம், தினக்கதிர், தமிழ் அலை முதலிய பத்திரிகைகளும் குறிப்பிடத்தக்கன.

‘‘தமிழ் அலை” தன்தொடர் பயணத்தில் இத்தகைய முயற்சிகளுக்கும் களமமைத்து மட்டக்களப்புத் தமிழகத்தின் இலக்கிய வளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப்பைத் தரும் என எதிர்பார்க்கலாம்... (முற்றும்)

# இலங்கை வரலாறும் பூர்வீக மட்டக்களப்பும்

**க.தங்கேஸ்வரி**

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஈழத்தில் இடைக்கற்காலப் (Microlithiic) பண்பாட்டுக்குரியதான இரத்தினபுரி, பலாங்கொடை கலாசார காலத்தின் சிரான் தெரணியாகல கி.மு.29000 வருடங்கள் என தமது ஆய்வின் மூலம் நிர்ணயம் செய்துள்ளனர்.குறுணிக்கற்கால (Micro litic) யுகத்தினை முடித்து இரும்பு யுகத்தினை ஆரம்பித்து வைத்துள்ளவர்கள் நாகர்கள். கிழக்கிலே வாழ்ந்த இந்நாகர் இனமக்கள் ஈழவரலாற்று வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டவர்கள் எனக் குறிப்பிடுகின்றார்

Prehistory of Srilanka vol 01, 02, by s, Deraniyagala Dept of Archaeology Colombo- 1992. அவர் குறிப்பிடும் இரும்பு யுகத்தினை அறிமுகப்படுத்திய எமது மூதாதையரான ஆதித்திராவிடரின் முழுமையான பண்பாட்டு யுகம் பெருங்கற்காலமாகும். கிழக்கிலே இதன் பாதிப்பு அதிகம். ஆகவே, ஆடகசவுந்தரியும் உலக நாச்சியும் தான் எமது வரலாறு என்ற கோட்பாட்டுக்கு அப்பால் சென்று எமது வரலாற்று உண்மைகளைத் தேட வேண்டிய நிலையில் உள்ளோம்.

## வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மட்டக்களப்பு

வரலாற்றுக்கு முற்பட்ட கால மட்டக்களப்புப் பற்றி அறிவதற்குப் பிற நாட்டவரின் ஆய்வுக் குறிப்புக்கள் பெரிதும் உதவுகின்றன. அவற்றுள் பின்வருபவை குறிப்பிடத்தக்கவை.

01. தளபதி றெட் எழுதிய குறிப்புக்கள் - எழுத்துப்பிரதி (தற்போது பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளது.)(மட்டக்களப்பில் Flake கற்களாலான கருவிகள் கிடைக்கப் பெற்றதாக இவர் குறிப்பிடுகிறார்.) இவை இடைக்கற்காலத்தைச் சேர்ந்தவை ஆகும்.

2.S.J. Tayilor எழுதியுள்ள ஒரு கட்டுரை (Archeologicoal survey of ceylon - annual report Taylor december 1946-page 48) இது பழைய கற்காலம், இடைக்கற்காலம், புதிய கந்தாலம் பற்றிய குறிப்புகளைத் தருகிறது.

3.பிரபல ஆய்வாளர்களான மஜீம்தார், சட்டர்ஜி செழிக்மன் ஆகியோர் தரும் குறிப்புக்கள் (மட்டக்களப்பில் ஒஸ்ரலொயிட் (australoid) என்னும் ஆதிவாசிகள் வாழ்ந்ததாக இவர்கள் குறிப்பிடுகின்றனர்.)இவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகில் வாழ்ந்த ஆதி வாசிகள் ஆவர்.



4.மேற்படி ஆய்வாளர்களது பின்வரும் நூல்களில் பூர்வீக மட்டக்களப்பு பிரதேசம் பற்றிய மேலும் பல தகவல்கள் உள்ளன.அந்நூல்களின் விபரம் வருமாறு.

(அ) history and culture of indian people heritage and life of ceylon - by Majumder (edi ted by Pusqlkar -pp.8.40.235)

2.the veldhas by c.g. sheli gman -1911 cambridege publi cation pp-4-19-430

3.the vedhas by r.l. spittel vani shed trails

4. J.R.A.S.ceylon vol. xx1-pp/38 sheligmen 1908.

5.Ancient ceylon - An account of the oboriglnes past and the early Colonisation londan 1999.pp.15

6.vedhs in transition Clombo 1964 .pp.11-22 by Nandadeva Vijase kara.

7.pre history of sri lanka by S. Deranidadala vol 1+2 - 1992

## வரலாற்று இடைக்காலத்தில் மட்டக்களப்பு

சில மேலாய்வுகள்(Enploration) மூலம் இங்கு வாழ்ந்தோர் இயக்கர் நாகர் என பேராசிரியர் பரணவிதான செழிக்மன் போன்றோர் கூறியுள்ளனர். நாகர்கள் கிழக்குப் பிரதேசத்தில் வாழ்ந்தார்கள் என்பதற்கு இங்கு கிடைக்கும் நாக வழிபாட்டு எச்சங்களும், பிராமிக் கல் வெட்டுக்களும் சான்றாகின்றன. அவ்வாறே இப் பிரதேசத்தில் வேரூன்றி நிலைத்துள்ள நாக வழிபாடும் இதை உறுதி செய்கின்றன. கி.மு. 3ம் நூற்றாண்டிலே டொலமி எனும் கிரேக்க ஆய்வாளர் குறிப்பிடும் ''நனிகிரி'' ''நாமதும'' ''நாகபவத்த'' போன்றன கிழக்குப் பிரதேசத்திலே காணப்பட்ட இடங்கள் என அடையாளம் காணப்படுகின்றன.

கிழக்கின் பழம் பெருமை பெற்ற திருக்கோவில் பண்டு நாகர்முனை எனப்பட்டது.சுற்றியுள்ள பிரதேசம் நாகர் நாடு எனப்பட்டது. ''சபரர்கம'' எனப்பட்ட சபரகமவில் அமைந்துள்ள கதிர்காமம் இடைக்கற்காலத்தில் புகழ் பெற்ற வழிபாட்டுத் தலமாகும். விந்தியமலைக்காட்டு ''சபரர்'' இனத்துடன் தெடர்புடைய இச் சபரர் இனம் உகந்தையிலும் காணப்பட்டனர். இன்றும் இங்கு காணப்படும் வேடர் வழிபாடும் பாரம் பரியமும் இதற்குச் சான்றுகளாகின்றன. கதிர்காமம், உகந்தை திருக்கோவில், மண்டூர், போரதீவு, தாந்தாமலை, சித்தாண்டி, வெருகல் போன்ற முருகத் தலங்கள் வேல் வழிபாட்டுக்குச் சான்றாகின்றன. இவற்றை பிராமிக்கல் வெட்டுக்களும் இவ்விடங்களில் காணப்பட்ட எச்சங்களும் நிரூபிக்கின்றன.

இம் மக்களின் வழித் தோன்றல்களே வேடர்கள் என்பதும் இம் மக்கள் மத்தியில் வேல், லிங்கசூலம், போன்ற வழிபாடுகள் இன்று வரை தொடர்வதும் நாம் அறிந்த செய்திகள் ஆகும். (the veddah -by g.sheligmen 1911)

## பெருங்கற்காலப் பகுதியில் மட்டக் களப்பு

பெருங்கற்காலத்திற்கெனச் சில பண்புகள் உள. குறிப்பிட்ட சில தொல் பொருள் எச் சங்களைக் கொண்டு இக் காலப் பகுதியை உறுதி செய்து கொள்ளலாம்.

சில இடுகாடுகள், ஈமத்தாழிகள், புதைகுழியில் உள்ள பொருட்கள் முதலியன இக் காலப்பகுதிக்குரிய எச்சங்களாகும். இத்தகைய எச்சங்கள் இந்தியாவில் மைசூர் பிரம்மகிரி, ஆதிச்ச நல்லூர் முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டன. ஈமத் தாழிகள் சவப்பெட்டி) சுட்டகளிமண்ணால் ஆனவை. மண்ணால் அரிக்க முடியாதவை. இத்தகைய தாழிகளில் பிரேதங்களை வைத்து அடக்கம் செய்யும் பண்பாடு அக்கால மக்களின் நாகரிகத்தின் சின்னமாகவும் அமைகின்றது. இத்தகைய ஈமத்தாழிகள் சென்னை அரும் பொருட்காட்சியத்தில் இன்றும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)

# மட்டக்களப்புச் சஞ்சிகைகள் ஒரு கண்ணோட்டம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**1969**முதல் இற்றைவரை மட்டக்களப்பில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும்''தொண்டன்'' சஞ்சிகை உலகில் சாதனை படைத்துள்ளது எனலாம். இதற்கான முழுப்பொறுப்பும் இணையாசிரியரான மலர்வேந்தனையே சாரும் என்பது யாவரும் அறிந்த விடயம்.

அவரது முயற்சியால் அவ்வப்போது சில சிறப்பு இதழ்கள் அதிக பக்கங்களுடன். வெளிவந்துள்ளன. மட்/ மாவட்டச் சிறப்பு மலரில் பலகாத்திரமான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இதழுக்கு இதழ் புதுமை மிளிர்வது இச்சஞ்சிகையின் தனித்துவம். இதில் மலர் வேந்தனின் பங்களிப்பு மகத்தானது அவ்வப்போது வாசகர்களுக்கான போட்டிகளும் இடம் பெறுவதால், சஞ்சிகை ஜனரஞ்சகமாகி, பரவலாக வாசகர்களைச் சென்றடைகிறது எனலாம். ஆனால் கடைகளில் விற்பனைக்குவிடாது, சந்தாதாரர்களுக்கு மட்டுமே இச்சஞ்சிகை அனுப்பிவைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**அரங்கம்**:- இரா.தவராஜா அவர்களால் 1995ம் ஆண்டு முதல், இருமாத இதழாக வெளியிடப்பட்ட அரங்கம் மாணவர்க்குப் பயன்படும் விட்யங்களை உள்ளடக்கி மிக ஒழுங்காக வெளிவந்தது. இதுவும் ஒரு தனிமனித முயற்சியாகும். ஆசிரியர், வினியோகஸ்தர் எல்லாம் அவரே ''மல்லிகை'' சஞ்சிகையைப் போலவே தவராசாவும், தான் போகும் இடங்கள் எல்லாம் அரங்கம் சஞ்சிகைகையை எடுத்துச் சென்று வினியோகிப்பார்.

1997ல் இவர் ''அறிவொளி அச்சகம்'' என சொந்தத்தில் ஒரு அச்சகத்தையும் நிறுவி இச்சஞ்சிகையை வெளியிட்டார் அப்படியும் 2000ஆண்டளவில் சஞ்சிகை நின்று விட்டது. ''என் வழி தனி வழி'' என்பதற்கமைய தவராசா தனக்கென ஒரு வழிமுறையை வகுத்துக்கொண்டு இச்சஞ்சிகையை வெளியிட்டார்.

கிரவுண் $^{1}/_{4}$ அளவில், 20பக்கங்களுடன் வெளிவந்த இச்சஞ்சிகை, பாடசாலை மாணவர்களை மிகவும் கவர்ந்ததில் ஆச்சரியம் இல்லை.

ஆசிரியர் தான் கண்டு, கேட்டு அறிந்த விடயங்களையும், தான் கற்றவிடயங்களையும் மிகப் பொருத்தமாக இச்சஞ்சிகையில் ஆங்காங்கு சேர்த்துக் கொண்டார்.

சிவவாக்கியர் என்ற பெயரில் இடம் பெற்ற தத்துவ முத்துக்கள் வாசகர்களைப் பெரிதும் கவர்ந்தன.

**களம்**:- இலக்கியக் காலாண்டிதழ் அளவு கிரவுண்$^{1}/_{4}$ பக்கம் 40 விலை ரூ4/ஆசிரியர் ப.வாரித்தம்பி வெளியீடு 'களம்' கலை இலக்கிய வட்டம் முகவரி $^{17}/_{2}$ எல்லை வீதி மட்டக்களப்பு. அச்சகம் கத்தோலிக்க அச்சகம் மட்டக்களப்பு ஆரம்பம் ஜுலை1983

காத்திரமான சில இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் இச்சஞ்சிகையில் இடம் பெற்றன. வீ.ஆனந்தன் உமாவரதராஜன் சோலைக்கிளி, முருகபூபதி, கோகிலா மகேந்திரன் சாருமதி, எம்.எச்.எம். அஷ்ரப் (காலம் சென்ற கௌரவ அமைச்சர்) தாமரைச் செல்வி SMJ பைஸ்தின் மண்டூர் அசோகா SLM ஹனிபா, சண்முகம் சிவலிங்கம் ஞானரதன், அ.ஸ.அப்துல்ஸமது என இலங்கையின் பிரபல எழுத்தளர்கள் பலர் இதில் எழுதினர்.

பல இலக்கியப் போட்டிகளையும் 'களம்' நடாத்தியது (உ-ம் (1) திருமதி றோஸ் பற்றி நினைவுச் சிறுகதைப் போட்டி 02 சட்டத்தரணி ந. சின்னையா நினைவு கவிதைப் போட்டி)

5வது இதழுடன் நின்று போய்விட்ட இவ்விதழ் 10வருடங்களின் பின் புத்துயிர் பெற்று 1996முதல் அக்கரைப்பற்றிலிருந்து வெளிவந்தது. (6ம்,7ம் இதழ்கள்) இவை அதிகமான பக்கங்களுடன்மிக உயர்ந்த தரத்துடன், அதிகவிலையில் (தனிப்பிரதிரூ.40) வெளிவந்தது.

தேசிய மட்டத்தில் ஒரு உன்னத ஸ்தானத்தை 'களம்' நிச்சயம் பிடிக்கும் என்ற நம்பிக்கை துளிர் விட்ட சமயத்தில் 'களம்' மீண்டும் நின்று விட்டது. எவ்வாறாயினும் ஈழத்து இலக்கிய உலகில் ஆழமான அடிச்சுவட்டை 'களம்' விட்டுச் சென்றுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

**வயல்**:- இலக்கியக் காலாண்டிதழ் அளவுடிமை $^{1}/_{8}$ பக்/36, விலை ரூ.5/ - ஆசிரியர் சாருமதி வெளியீடு வயல் ஆசிரியர் குழு முகவரி 30 பயணியர் வீதி மட்டக்களப்பு. அச்சகம் புனித செபஸ்தியார் அச்சகம் மட்டக்களப்பு:- ஆரம்பம் 1.11.86 (முதல் இதழ் வெளிவந்த தேதி)

ஆசிரியர் தான் கண்டு, கேட்டு அறிந்த விடயங்களையும், தான் கற்றவிடயங்களையும் மிகப் பொருத்தமாக இச்சஞ்சிகையில் ஆங்காங்கு சேர்த்துக் கொண்டார்.

மார்க்ஸிசப் பார்வை கொண்ட 'வயல்' 1986 முதல் 1988 வரை 4இதழ்கள் மட்டுமே வெளிவந்தன. 4வது இதழுக்குப்பின் துாரத்துக்கொன்றாக அவ்வப்போது வெளிவந்து, பின்னர் நின்று விட்டது. சஞ்சிகையின் ஆசிரியர் காலமானதும் இதற்கொரு காரணமாகும்.

இச்சஞ்சிகை சாமனியனான தோழர் கிருஷ்ணக் குட்டியின் நினைவாக ஒரு சிறப்பிதழ் வெளியிட்டதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

**பெண்**:- பெண்ணிலை வாத நோக்குக் கொண்ட பருவகால இதழ் அளவு டிமை$^{1}/_{8}$ பக். 64 (பக்கங்கள் சில இதழ்களில் கூடிக் குறையும்) விலை ரூ.40/- (தற்போது) ஆசிரியை விஜயலட்சுமி சேகர் (தற்போது) வெளியீடு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் மட்டக்களப்பு. முகவரி 20டயஸ்லேன் மட்டக்களப்பு. அச்சகம் சென்ட்ஜோசப் கத்தோலிக்க அச்சகம் மட்டக்களப்பு.

**அன்புமணி**

கடந்தசில வருடங்களாக வெளிவரும் இச் சஞ்சிகையைக் காலாண்டிதழ் எனக் கொள்ளலாம். பெண்ணிலை வாதம், பாலியல் துஷ்பிரயோகம் ஆணாதிக்க நிராகரிப்பு முதலிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட இச்சஞ்சிகை அதற்கமைவான கட்டுரை கவிதைகளையே கொண்டுள்ளது. அத்தகைய நாடகங்களும் அவ்வப்போது இச்சஞ்சிகையில் இடம் பெறுகின்றன.

மட்டக்களப்பில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் ஆற்றிவரும் சமூகப் பணிகளின் எதிரொலியாகவும் 'பெண்' சஞ்சிகை குரல்கொடுத்து வருகிறது.

**போது**:- மாணவர்க்கான மாத இதழ் அளவு டிமை $^{1}/_{8}$ பக் 40 ஆரம்பம் 5.5.1998 நிர்வாக ஆசிரியர் சுவாமி போல் சற்குணநாயகம் யே.ச, ஆசிரியர் வாகரை வாணன் அச்சகம் ஜெஸ்கொம் அச்சகம் மட்டக்களப்பு.

(தொடரும்)

# கவிதைக் களம்

## உறவுகளே

உண்மையை விழுங்கி
ஊமையாகிப் போன
உறவுகளே...

உயிருக்குப் பயந்து
அயல்நாட்டில்
அகதியாய் வாழும்
அன்பு உள்ளங்களே.....

விடியும் விடியும்
என்று காத்திருந்த
எம் சமுதாயம்
காணாமல் போனது...!

நீங்கள்
மானத்தைவிற்று
மாளிகை வேண்டியதால்...!

இங்கு
மானமுள்ளவர்கள் வாழ
மண்கூட எமக்குச்
சொந்தமில்லை.....!

வெளியில் சிரித்து
உள்ளுக்குள் அழும்
உங்கள் பொய்முகங்கள்
எப்போது விழிக்கப்
போகின்றது.....!

தமிழாம்பிகை எஸ்.ஜெகன்
நானாட்டான்.

## ஏ 9 வீதி உல்லாசவீதியா?

உயிர்கொடுத்துக் காத்த வீதி
உறங்கவிடாது வாகனங்கள்
உறுமிக்கொண்டு பறக்கின்றன
உத்தம தியாகிகளின்
உன்னத உயிர் கொடுத்த
ஏ 9 வீதியை
எண்ணியார் பார்க்கிறார்கள்?
உயிர்கொடுத்த தியாகிகள்
உறுதியாய் உறங்கும் போது
உல்லாசச் சவாரியை
உயர்வாய் நினைக்கின்றீர்!
உயிரிருக்கும் வரைதான் நீங்கள்
உயர்த்தப்படுவீர்கள்
உலகிருக்கும் வரை
உயர்த்தப்படுவார்கள்
புனிதச் சின்னங்களான
உத்தமர்கள் தான்!

த. குயிலின்பன்

## ஈழத்தாய் சபதம்
### தொடர் கவிதை

துட்டனைப் புணர்ந்ததனால் - அவள்
துயரினை அதன்பின்னர் சுமந்ததுவும்
கெட்டவன் எமதரசைத் - தன்றன்
கீழ்க் கொண்டு வந்திட முயன்றதுவும்
பட்டத்து அரசியென - ஒரு
பாண்டிய மங்கையை மணந்ததுவும்
பொட்டெனத் தமிழ் நிலங்கள் - அந்தப்
புலையனின் கை வசமானதுவும்

நாட்டினை இழந்ததனால் - வெறும்
நடைப்பிணமாகிய தமிழரினம்
காட்டினி லுறைந்ததுவும் - தீவின்
கரைகளில் ஒதுங்கியே வாழ்ந்ததுவும்
வேட்டுவரானதுவும் - சிலர்
வெஞ்சினமுற்றுக் குவை நீ தனை
ஈட்டியில் முடித்ததுவும் - எங்கள்
ஈழத்தை இந்தியத் தமிழர்களாம்

பாண்டிய மன்னர்களும்
பலம் பொருந்திய புலிக்கொடிச் சோழர்களும்
ஆண்டதும் விதிவலியால் - தமிழ்
அன்னையைத் தவிக்கவிட்டவர் நிலமே
மீண்டதும்பழைய கதை - பின்னர்
மேற்குலகத்தினர் எமைப்பிடித்தே
வேண்டிய பொருள்பறித்தார் - சுவை
மேவிய தமிழுக்கும் குழி பறித்தார்

பழங் கதையாயிடினும் பெரும்
பாடங்கள் புகட்டியே வஞ்சனையை
விளங்கிட வைப்பதனால் - அதை
மீட்டிடல் தவறெனச் சாற்றுகிலேன்
உழன்றிடும் தமிழரினம் - இன்று
உலகினில் ஓர் அரசில்லாதே
முழங்கிடும் பழம் பெருமை - எங்கள்
மூட முன்னோர்களின் கதை மறைத்தே

எஸ். கருணானந்தராஜா
(யுகசாரதி)

## வேண்டும் அமைதி

யுத்தத்தால்...
கடும் சத்தத்தால்....
சிந்தும் ரத்தத்தால்....
தோன்றும் இனவாத
பித்தத்தால்.....
எல்லாம் சேர்ந்த
மொத்தத்தால்.....
இத்துப் போகிறது....
இப்பூலோகம்....
ஆகையால் நாமும்
தேடுகிறோம்
நித்தமும் சித்தமின்றி
வாழவே....

காத்தநகர்
மதி மகன் யூஜஸ்

## நடைப்பிணம்

நடந்தேன் நடந்தேன் வாழ்க்கையின் - அருகு மட்டும்
நட்டம் அடைந்து விடுவேனோ என்ற ஏக்கம்
நாட்டில் அதிகரித்து வரும் குழப்பமும், கலகமும்
நட்டாற்றில் விட்டதைப் போல் ஓர் உணர்வு

நிழல் படத்தில் என் விம்பம் அதற்கு ஒரு பூமாலை
நிலையற்ற வாழ்க்கையில் - புகைபடிந்த கண்ணாடி போல் எதிர்காலம்
நிஜமான மனிதர்களைத் தேடி அலைந்தேன்.
நிறுத்திவிட்டேன் "நேர்மை" மாந்தரில் இல்லை: என்பதால்

நெடுநேரம் சிந்தித்தேன் உலகத்தை
நெருங்காத சொந்தங்கள் கூட: பணம் இருந்தால்
நெருப்பில் எரியும் பிணமும் உயிர்த்திடும்
நெஞ்சம் கனத்தது இன வெறி காடையரை பார்த்து

சொந்த மனதில் கொதி நீரூற்றும் நட்புகள்
நொடிந்து போன வாழ்க்கை குறிப்பேட்டில்
நொண்டிகளாக மிதி வெடிக்கு இலக்கானவர்கள்தான் மிகை
நொடிப்பொழுதில் சிந்தித்தால் யாவரும் நடைப்பிணம்தான்.

எம். ஜயகௌரி
திருக்கோவில் - 02

# தேடலும் பகிர்வும்

தாயகவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் போது சமகாலத்திலே வரலாறும் உரியவாறு ஆவணப்படுத்துதல் வரவேற்கத்தக்கது. சிங்கள தேச சோவினிஸக் கருத்தாளர்களால் எழுதப்பட்ட வரலாற்று நூல்களில் ''வில்லங்கம்'' பல்வேறு தரப்பினராலும் ஆங்காங்கு சுட்டிக்காட்டப்பட்டு வந்தாலும், ''வன்னி சமூகக் கல்வி மன்றம்'' எனும் அமைப்பே பூனைக்கு மணி கட்டி இருக்கிறது.

இவர்கள் வெளியிட்ட''சமூகக் கல்வியும் வரலாறு'' ஆண்டு ''06'' (1998ம் ஆண்டு), - ஆண்டு-08 (2000ஆண்டு)என்ற இரு நூல்களையும் ஓராண்டுக்கு முன்பாகப் பார்க்கக் கிடைத்தது. பாராட்டப்பட இவ் முயற்சியை விரிவுபடுத்தும் வண்ணம் அண்மையில் யாழ்.குடா நாட்டில் தமிழீழ கல்விக் கழகத்தினர் சிறப்புச் செயலமர்வுகளை ஆசிரியர்களுக்குத் தமிழீழ வரலாற்று ஆய்வாளர்களைக் கொண்டு நிகழ்த்தியதை அறிய முடிந்தது. தென்தமிழீழத்துக்கும் இது விரிவுபடுத்தப்படலாம் என நம்புவோம். சமூகக் கல்வி மன்றத்தின் முன்னுரையில் இடம்பெற்ற சில கருத்துக்களைக் காலத்தின் தேவைகருதிப் பகிர்ந்து கொள்வோம்.

''சிறீலங்கா அரசின் பாடத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் இதுவரை கற்பிக்கப்பட்டுவரும் வரலாற்றுப் பாட நூல்கள் உண்மையான வரலாறாக அமையாமல் சிங்கள இனத்தை மேன்மைப் படுத்தக்கூடிய வகையிலே மிகைப்படுத்தியும், தமிழ் மக்கள் பெருமைகளை மறைத்தும், தமிழ் மக்களை இழிவுபடுத்தும் வகையிலே திரித்தும் எழுதப்பட்டுள்ளன.

08

''சிறப்பும் மேன்மையுமிக்க வரலாற்றைக் கொண்ட இனம் அந்த வரலாற்றாற் பெருமையடைகிறது. அத்தகைய வரலாறு அந்த இனத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறது. பெருமை மிக்க பண்டை வரலாற்றைக் கொண்ட ஈழத்தமிழினத்தின் இன்றைய மாணவர்கள் தமது வரலாற்றைக் கற்பதும் தெரிந்து கொள்வதும் அதனூடாக அவர்கள் வளர்ச்சியைப் பெறுவதும் சிங்கள ஆட்சியாளரால் திட்டமிட்டு மறுக்கப்படுகிறது. பொய்யான வரலாறு தமிழ் மாணவர்களுக்கு புகட்டப்படுகிறது.

''தமிழ் மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டக் கூடியதாகவும், சமூக வாழ்வை நெறிப்படுத்தக் கூடியதாகவும் பொதுத் தேர்வுகளுக்கு ஊறு நேராத வகையிலும் 06,07,08ம் ஆண்டு மாணவர்களுக்கு, ''சமூகக்கல்வியும் வரலாறும்'' என்ற பாடநூலினூடாகச் சில பாட அலகுகளைச் சமூகக் கல்வி மன்றம் ஆக்கித் தந்திருக்கிறது.''

இவ்வாறு முன்னுரை கொண்டமைந்த பாட நூல்கள் பல பெறுமதியான தகவல்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதை தேடிப்படித்தால் நிறைய அறியலாம்.

* *

'' சமூகக் கல்வியும் வரலாறும் - ஆண்டு 08'' நூலில் முதலாவது அத்தியாயம் '' தேசியப் பண் - தேசியக் கொடி - தேசியக் கோட்குறி'' இடம் பெற்றுள்ளது. '' புதிதாக உருவாகிவரும் தமிழீழத்துக்கு இதுவரை முழுமையான தேசியப் பண் ஆக்கப்படவில்லை. ஆயினும் பாவலர் (கவிஞர்) புதுவை இரத்தின துரை அவர்களால் ஆக்கப்பட்ட '' ஏறுதுபார் கொடி ஏறுதுபார்..... '' என்ற எமது தேசியக் கொடியின் பெருமையைப் பறைசாற்றும்கொடி வணக்கப்பண், எமது தேசியக் கொடி ஏற்றப்படுகின்ற பொழுதுகளில் பாடப்பட்டு வருகின்றது.'' தமிழீழ தேசியக் கொடி வணக்கப்பண் பின்வருமாறு இடம்பெற்றிருந்தது.

''ஏறுதுபார் கொடி ஏறுதுபார்
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் - இங்கு
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் - தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்த கொடி
எட்டுத்திக்கிலும் மானத்தைச் சேர்த்த கொடி
காலத்தை வென்றுமே நின்ற கொடி - புலி
காட்டிய பாதையில் சென்ற கொடி (ஏறுதுபார்)

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது - தமிழ்
மக்களைக் காத்த நம்மான மாவீரரை
வாழ்த்திடும்கொடியிது - புலி
வீரத்தின் கொடியிது
மாவீரரின் கொடியிது
(ஏறுதுபார்)

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது - பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாற்றிய கொடியிது - தமிழ்
ஈழத்தின் கொடியிது - புலி
ஏந்திய கொடியிது
(ஏறுதுபார்)

சாதிகள் சண்டைகள் சாய்த்து வீழ்த்திய
சாதனைக் கொடியிது - சங்கு
ஊதிமுளங்கிட ஊர் மனையாவிலும்
உலவிய கொடியிது - சம
தர்மத்தின் கொடியிது - எங்கள்
தாயவள் கொடியிது (ஏறுதுபார்)

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது - பிர
பாகரன் என்றிடும் காவிய நாயகன்
போற்றிடும் கொடியிது - தமிழ்த்
தேசத்தின் கொடியிது - எங்கள்
தேசியக் கொடியிது (ஏறுதுபார்)

தேசியக் கொடி வணக்கப்பண் நமது பிரதேசத்திலும் ஒலிப்பதிவு நாடா மூலமாகவேனும் ஒலிக்கப்படச்செய்ய ஆவன செய்யப்படக் கூடும்.

* *

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் உள்ளத்துச் சிந்தனை:- ''எமது தேசிய வாழ்வையும் வளத்தையும் மேம்படுத்தும் இலக்கில் எமது கல்வித்துறை சீரமைக்கப்பட வேண்டும். காலனித்துவ சுரண்டலின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், சிங்களப் பேரினவாதத்தின் கருத்தாதிக்கத்தைத் திணிக்கவும் உருவாக்கப்பட்ட கல்வியமைப்பு மாற்றப்பட வேண்டும். எமது தேசியப் போராட்டம், எமது பண்பாட்டு வாழ்வு, எமது தேசிய பொருண்மிய வளம், எமது தேசிய இனத்தின் வரலாறு ஆகியவற்றின் உண்மைநிலையும் பெறுமானமும் உணரப்படும் வகையில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இன்றைய அறிவியல் தொழில்நுட்பத் துறைகளின் வளர்ச்சியையும் அதன் ஆக்க பிரயோகங்களையும் கற்றறியும் வாய்ப்பும் எமது இளம் பரம்பரைக்குக் கிட்டுவதற்கு வழிசெய்யவேண்டும். ஒட்டுமொத்தத்தில், எமது தேசிய நலன் பேணப்படும் வகையில் கல்விச் சீர்திருத்தம் இடம் பெற வேண்டும்.''

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை நடத்திய தமிழீழப்பொதுக்கல்வித் தேர்வில் சித்தி எய்திய மாணவர்களைப் பாராட்டித் தலைவர் பிரபாகரன், 13.02.1993 அன்று வெளியிட்ட அறிக்கையிலிருந்து நன்றியுடன் இக்கருத்து பெறப்பட்டது.

- த.வசந் -

# தானைத் தலைவனின் வழியில் சரித்திரம் படைத்தான் கப்டன் ஜெயந்தன்

**சென்றவாரத் தொடர்ச்சி....**

பகைவனின் கடற் கப்பல்களை அடித்து அவன் வருகையைக் கடலில் இருந்து முற்றாகத் தடை செய்ய வேண்டும். எனும் விடயத்தில் பேரவா கொண்டிருந்தனர் கடல் வேங்கைகள்.

அன்றையக் கடற்படைத் தளபதி திரு கடாபி தலைமையில் கடல் வேங்கைகள் பயிற்சியில் ஈடுபட்டனர். ஆனால் 1990 இறுதிப் பகுதியில் யாழ் மண்ணை நோக்கி இங்கிருந்து சென்ற புலி வீரர்களில் இந்த ஜெயந்தன் கடற் கருவேங்கையாகத் தன்னை மாற்றிக் கொண்டான்.

பொங்கி வரும் அலைகிழித்துப் பகை தேடும் படலத்தில் இவனது படகு மிகப் பயங்கரமாகச் செல்லும். எங்கும் எப்போதுமே தூங்காத விழிகள். அன்னை, தந்தை பாசத்தை தலைவன் மீது கண்டான். இந்த அருமைப் புதல்வனின் இதயத்தில் பகைவனைக் கடலில் சந்தித்து அவன் ஏறி வரும் படகழிந்து பொடியாகப் போகும் ஒரு புரட்சித் தீ... இந்த ஜெயந்தனுள் மிக ஆழமாகப் பதிந்தது.

காங்கேசன்துறைக் கடலில் வைத்து எடித்தாராவின் கதை முடிக்கவென எரிமலையாக இருந்த சிதம்பரம், சலீம் எனும் இரண்டு கடல் கருவேங்கைகளின் பெயர் எழுந்தது. கரிகாலன் இவர்களுக்கிட்ட கட்டளையைக் கச்சிதமாய் முடித்திடத் தயாராகினான் சிதம்பரம். கடுமையான காய்சலினால் சலீம் எனும் கடற் கரு வேங்கை கலந்து கொள்ள முடியாது போய்விட்டது. அடுத்த எரிமலையாக வெடிக்க இருப்பது யார் எனும் கேள்வி எழுவதற்கு முன் ''ஜெயந்தன் நான் போகின்றேன்'' எனக் கூறி எழுந்தான்.

இருந்தும் கடலில் பகைவனது கப்பல் வெடித்துச் சிதறுவதற்கு நான்கு நாட்கள் தான் இருக்கின்றது.

ஜெயந்தன் வந்துவிட்டான். கடற் கருவேங்கைகளின் கரங்களில் இப்போது இருக்கும் அதி நவீன பொருட்கள் அப்போது இல்லை. இப்படியான கடற் போராட்டங்களுக்கு அப்படியான (1991ல்) கால வேளைகளில் ஐந்து கடல் மைல்களுக்கு உட்பட்ட கடல் நிலைமைகளைத் தெரிவிக்கக் கூடிய ''ராடர் கருவி'' ஒன்றைத் தவிர வேறு எதுவுமில்லை.

சாதாரண கொம்பாஸ்சை வைத்துத் தான் கடற் பயிற்சியும் நடந்தது. சொல்லால் வடிக்க முடியாத சுமைகளைத் தாங்கிக் கொண்டு தான் சாதனைத் தலைவன் இக்கடற்படையை நடாத்துகின்றான். வேதனையின் நுனியில் நின்று விடுதலைக் கீதம் இசைத்திடும் கடற் கரு வேங்கைளின் சாதனை படைத்திடச் தயாராகினர்.

கடற்கரும்புலி வேங்கை சிதம்பரம் தொலைத் தொடர்புக் கருவியைக் கடற் சமரின் போது கையாள்வதில் மிகத் திறமைசாலி என்பதையும், விசைப்படகின் வேகத்திற்கு வேகமானவன் ஜெயந்தன் என்பதையும் இனம் கண்டனர் தமிழீழக் கடற்படைத் தளபதிகள். அதி வேகமாகன கடற் பயிற்சி ஜெயந்தன், சிதம்பரத்திற்கும் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடந்தன.


சாவிற்க்கே சமாதிகட்டிய சரித்திர நாயகர்கள் நாம் வெடியாகிப் பொடியாகிப் போகின்றோம். எம் தமிழீழக் கடல் மண்ணுக்கு விடுதலை கிடைக்கும் நாள் வெகு தூரமில்லை என நினைத்தார்கள் இந்த இரும்பு மனிதர்களான ஜெயந்தனும், சிதம்பரமும்.

கடலில் ஒரு கதையை எழுதப் போகும் ஜெயந்தன் சிதம்பரத்திற்கான பயிற்சிகள் நடந்து கொண்டிருக்கின்ற வேளை யில் பகைவனது கப்பலும் பவனி வந்து போகும். இவர்கள் இருவரும் பார்த்துப் புன்னகைப்பர். எத்தனை நாளைக்கு எங்கள் கடல் மீதில் வலம் வருவாய் என்பதையும் பார்க்கத்தான் இருக்கின்றோம். என மனதிற்குள் உரையாடியிருக்க மாட்டார்களா....!

ஆழ் கடலில் அடிக்கடி எடித்தாரா, அபிதா, விக்ரமா இவை மூன்றும் போகும் வரும். விடுதலைப்புலிகள் கடற்புலிகளிடம் இருந்த ராடர் கருவிகளில் ஒன்று இக்கடற் கப்பல்களின் வருகையினைக் காட்டினாலும் கரையில் இருந்து கடல் ஐந்து மைல் தொலைவிற்கு அப்பால் செல்லும் எதையும் காட்டாது.

எப்படியோ ராடரில் பட்டதை அறின்றான். எடித்தாராவில் சந்தர்ப்ப சூழ் நிலை இடம் தந்தாலும் நிர்ப்பந்தமும் நெருக்கடியும் தடுத்து விட்டது.

## காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு



எதிரியின் கப்பல் காங்கேசன்துறைக் கடற் பரப்பில் இருந்து தப்பிவிட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

1991.05.03ம் திகதி எதிரியானவன் மிகக் கவனமாகத் தான் தன் பயணத்தைப் பருத்தித்துறைக் கடற்பரப்பில் தொடர்ந்தான்.

கடலின் அலை கிழித்து வெடிமருந்தேறறிய படகினை மிக வேகமாகச் செலுத்தி வேகத்திற்குப் பேர்போன கடற் கரும்புலிக் கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம் ஆகியோர்களின் விழிகளில் இருந்து நித்திரை சற்று விலகியே இருந்தது.

படகின் வேகத்தையும் பொருட்படுத்தாது தொலைத் தொடர்கருவியைக் கையிலெடுத்து எந்தவிதமான பதட்டமுமின்றி அழகு தமிழில் பதிலை உடனுக்குடன் தளபதிகளுக்குக் கொடுப்பதில் மிகக் கவனமாகச் செயற்பட்டான் கடற் கரும்புலிக் கப்டன் சிதம்பரம். அவர்களிருவரும் தூக்கமின்றி விடியும் காலைப் பொழுதைப் பார்த்திருக்க கிழக்குக் கதிரவனும் தன் ஒளிக் கதிர்களை கடலன்னை மடியில் விரித்தாள். அழகிலும் அழகுதான் - காலைக் கதிரவன் மாலையானதும் கடலில் மூழ்கிவிட்டான். வானத்தில் மேகங்களும் கருக் கூட்டத் தொடங்கின. கடல் சூழ இருள் கௌவிக்கொண்டது. 1991.05.04ம் திகதி இரவு ''எடித்தாரா'' காங்கேசன்துறையில் இருந்து கடலால் பதி னொரு மைல் தொலைவில் சென்று நின்று விடடது.

விடுதலைப்புலிகள் கடற் புலிகளின் ராடரில் இருந்து எந்தவிதமான பொருட்களும் தென்படவில்லை. இதற்குப் பாதுகாப்பாக இருக்கும் பிருந்தன் மாஸ்ரர் பார்க்கின்றார். கடலின் நடுவில் தங்கி நிற்கும் எடித்தாராவுக்குப் பாதுகாப்பாக இன்னுமொரு ஆழ்கடல் ரோந்துப் படகும் அண்மித்துவர... இவர்களின் ராடரில் தெரியவில்லை. அதனால் ராடரைப் பிருந்தன் மாஸ்ரர் கடற்கரை ஓரமாகக் கொண்டு வந்து தனது கடமையில் இறங்குகின்றார்.

இருந்தும் கடற்கரையோரம் வந்து ராடரின் பார்வையைச் செலுத்திய போது தான் இரண்டு டோராக்கள் என்பது தெரிய வந்தது. மூத்த தளபதியான கருணா அம்மானும் (1991.05.03)ல் கடற்கரைக்கு வந்து விட்டார். விடியப் போகும் தமிழீழத்தின் விடிவெள்ளியின் வரலாறு எழுதப்படும் காட்சியைக் காணவும் அந்தக் கடல் முத்துக்களின் வரலாற்றின் சாதனையின் வீரத்தினைக் காணப்போகின்றார்.

தமிழீழக் கடற் பரப்பில் தானைத் தலைவனின் திட்டப்படி அதனைக் கடற் படைத் தளபதி (அன்று) கடாபி அவர்கள் ஏனையவர்களுக்கு விளக்கியும் விட்டார். அதாவது ஜெயந்தனும், சிதம்பரமும் வெடிக்க கடல் வேங்கைக ளான கடாபி, தேவன், சங்கர் ஆகியோர் உடன் சென்று கப்பலில் உள்ள ஆயுதங்களையும் ஏனைய பொருட்களையும் கையகப்படுத்த வேண்டும்.

கடற்கரு வேங்கைகள் புறப்பட் டனர். கடற்புலிகளின் ராடர் கருவி கடற் காட்சிகளைக் காட்டிக் கொண்டிருக்கின்றது. ஏனோ கடலில் இரண்டு மைல் தொலைவு தூரம் போக மின்கலத்தில் இருந்த மின்சாரம் குறைந்திருந்ததினால் நிலைமையை அவதானிக்க முடியாது போக பிக்கப் வாகனமொன்றில் இருந்த மின் கலத்தை எடுத்து ராடருக்கு பயன்படுத்தினார்கள்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

விக்க திசையறி கருவி (கொம்பாஸ்) யின் துணை கொண்டு இத்தனை பாகையில் செல்லும் என்றால் அத்தனை பாகையில் சென்று கடற் கப்பலில் முட்டி மோதி பகையழித்து வருவார்கள் கருவேங்கைகள்.




1991.05.03ம் திகதி இரவு 10.00 மணிக்கு சிறிலங்காக் கடற்படையின் எடித்தாரா வரப் போகின்றது என்று வோக்கி வைத்திருந்த பிருந்தன் மாஸ்ரர் கூறினார். விண்ணில் மின்னிக் கொண்டிருக்கும் விண் மீன்களைத் தவிர கடலில் என்ன நடக்கிறது, எந்தப் பக்கம் எந்தக் கப்பல் செல்கின்றது என்பது பற்றி நாம் கூறமுடியாது. காரணம் எட்டுத் திக்கும் கொடிய இருள். இதனை விலக்கி பகையழிக்க உயிரையே ஆயுத மாகக் கொண்டவர்கள் இந்தக் கடற்கரு வேங்கைகள்.

**குலேந்திரன் அங்கிள்**

இவர்களுக்கான படகில் வெடி மருந்து அடைக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் சக்கோட்டையில் இருந்து விடுவோம் எனக் கூறி திரு.சொர்ணம் அவர்கள் கேட்கின்றார்கள். எக் காரணம் கொண்டும் ஓடிப்பார்க்காமல் வெடி மருந்து ஏற்றப்பட்ட வண்டியை விட முடியாது நாளை (04.05.1991) தான் விடலாம் என்று வெடிமருந்து வைத்த கடாபி அவர்களிடமிருந்து பதில் வந்தது.

இது மட்டுமன்றி வெடி மருந்தும் எரிபொருளும் ஏற்றிக் கொண்டு தான் போகி

## சென்றவாரத் தொடர்ச்சி

182. தமிழ் இலக்கிய வரலாற்றில் ''வசன நடை கைவந்த வல்லாளர்'' என்று வர்ணிக்கப்படும் ஈழத் தமிழறிஞர் யார்?

**ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர்**

183. 1996-07-18ல் முல்லைத்தீவிலிருந்த சிறிலங்காப் படைத்தளம் தாக்கியழிக்கப்பட்டு முல்லை மாவட்டம் புலிகளால் முழுமையாக விடுவிக்கப்பட தேசியத் தலைவரால் திட்டமிடப்பட்டுப் பெயர் சூட்டி நடத்தப்பட்ட மரபுவழிச் சமர் எது?


**''ஓயாத அலைகள் -1''**

184. 1984-06-15இல் சிறிலங்காக் கடற்படையின் கடல் விமானமொன்று தரித்து நின்ற போது விடுதலைப்புலிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. இது எங்கே நடைபெற்றது?

**யாழ் காரைநகர் பருத்தியடைப்பில்.**

185. ''வாருங்கள் உங்கள் வளமான வாழ்விற்கு வழி காட்டுகிறோம்'' என்ற மகுட வாக்கியத்தின் கீழ் இயங்கும் ''தமிழீழ வைப்பகம்'' (bank of tamil eelam) எப்போது திறந்து வைக்கப்பட்டது?

**1994-05-23இல்**



186. 1991.05.04இல் சிறிலங்கா கடற்படையின் ''அபித்தா'' எனும் கட்டளைக்கப்பலைத் தாக்கியழித்துத் தற்கொடையாற்றிய இரு கடற்கரும்புலிகளும் யார்?

**கடற்கரும்புலிக் கப்டன் ஜெயந்தன் மற்றும் சிதம்பரம்.**

187. யாழ் நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் பகுதி நோக்கி வந்த ''குமுதினி'' படகில் பயணித்த 46 தமிழ் மக்கள் சிறிலங்காக் கடற்படையினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டமை தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் இடம்பெற்ற முக்கிய படுகொலைகளுள் ஒன்றாகக் கணிக்கப்படுகின்றது. ''குமுதினிப் படுகொலை'' எப்போது நடத்தப்பட்டது?

**(உ.கோமளமைந்தன்)**

**1985-05-15ல்**

188. 16-06-1985 இல் மன்னார் பரப்புக்கடந்தானில் சிலிண்டர் தாக்குதலில் ''பவள்'' கவச வாகனம் சிக்கியதில் 23 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதில் கொல்லப்பட்ட உயர் நிலைச் சிங்களப் படையதிகாரி யார்?

**பிரிகேடியர் எஸ்.எம். எட்வேர்ட்.**

(தொடரும்)

## காத்திரன் பதில்

☞ மொட்டு விட்டு மலர்ந்து வருகின்ற தமி ழீழத்தில் தற்போது உலாவிக் கொண்டிருக்கும் "எட்டப்பர்" கூட்டத்தின் நிலை "தமிழீழம்" அமைந்தும் எப்படி இருக்கும் காத்திரனே?

*-இ.வின்சன், நாகமுனை, அம்பிளாந்துறை.*

◆ *தமிழீழம் மலரும் போது "எட்டபர்" எல்லோருமே "ஐயப்பர்" களாக மாறி விடுவார்கள்.*

☞ மண்டபத்தடிக் கிராமத்திற்கு மின்சாரம் எப்போது கிடைக்கும்?

*கே.ரசிகரன் -மண்டபத்தடி ,கன்னன்குடா*

◆ *மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் மண்டைகள் திறக்கப்படும்போது.*

☞ தலையில் பல்லி விழுந்தால் உறவினர்கள் மரணிக்க நேரிடும் என்பது உண்மையா காத்திரனே?

*-சிவலிங்கம்-சுமதி- ஏறாவூர்-4*

◆ *தலையில் (செல்) விழுந்தால் தான் இறப்பார்கள் பல்லி விழுந்து இறப்பது என்பது பொய்.*

☞ அன்புள்ள காத்திரனே! ஈழப் போராட்டத்தில் வெறும் பார்வையாளர்களாக இருக்கும் தமிழர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?

*சி.சுகாஷின், திருவள்ளுவன் வீதி- பாண்டிருப்பு*

◆ *பார்வையாளர்கள் யாவரும் பங்காளிகளாக மாற வேண்டியது காலத்தின் தேவை, அவ்வாறு மாறா விட்டால் ஓலத்திலும், அவலத்திலும் தான் தொடர்ந்து வாழ வேண்டும்.*

☞ காத்திரனே! எமது நாட்டின் ஜனாதிபதி சந்திரிக காவைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

அ.ரஜிலேகா,1ம்பிரிவு மண்டூர்

◆ *சிறிலங்கா நாட்டின் தலைவி, செந்தமிழ் மண்ணின் விரோதி இவரைப் பற்றி தினமும் நினைப்பவராகவும், அணைப்பவராகவும் இருக்கும் கதிராமரிடம் இதைக் கேட்கவும்.*

☞ காத்திரனே! ஒரு காதலி தன் காதலனிடம் காட்டும் அன்பை விட காதலனின் நண்பனிடம் கூடிய அன்பு காட்டுவது ஏன்?

*சி.ரஞ்சன்,கொத்தியாபுலை*

◆ *காதலர்களுக்குப் பாலமாகவும், மேளமாகவும் செயற்படும் இவ்வாறன நண்பர்களால் தான் ஆபத்து வரும் என்பதை உணர்ந்து தான் கூடிய அன்பு காட்டுகின்றனர் போலும்.*

☞ சமாதானம் மீண்டும் வர என்ன செய்ய வேண்டும்?

*சி.சிந்துஜா, மண்டூர்-1*

◆ *எமது பலத்தைக் கூட்ட வேண்டும்.*

☞ காத்திரனே! ஆசை அதிகம் உள்ளவர்கள் ஆண்களா ? பெண்களா?

*தெ.ரெகுநாதன், கணேசவித்தியாலயவீதி வந்தாறு மூலை*

◆ *இருவருமே ஆசை உள்ளவர்கள் தான், ஆசைகளின் வகைகளைப் பொறுத்து இது வேறுபடும், மண்ணாசையை அதிகமாக இருவரும் வளர்த்தால் வெற்றி நிட்சயம்.*

☞ கணவனை இழந்தவர்கள் சுப காரியங்களில் கலந்து கொள்ளக் கூடாது எனத் தட்டிக் கழிக்கிறார்கள் ஏன் காத்திரனே?

*கா.கார்திகா-களுவங் கேணி வீதி, பலாச்சோலை*

◆ *இது மூட நம்பிக்கைகளில் ஒன்று, சுபகாரியங்களை இவ்வாறானவர்கள் தான்திறம்படச் செய்வார்கள் என்பது உண்மை.*

☞ தொலை பேசிக் காதலைப் பற்றி என்ன நினைக்கிறீர காத்திரனே?

*த.லோகிதன், உம்வருடம் கலைப்பீடம் , கி.ப. கழகம் வந்தாறுமூலை*

◆ *தொலை பேசிக் காதலின் போது கால நிலை மாற்றத்தினால் காதலர்களுக்குச் செவிடு ஏற்பட்டாலும், காதலில் செவிடு இல்லாமல் இருந்தால் சரி தான்.*

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை.**

*எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.*

## கந்தர்வேடியும் கலந்தர்லெவ்வையும்

**கந்தர்.** உங்கட ஆக்களோட எங்கட புலிப் போராளிகள் அடிக்கடி சந்திக்கிறாங்களே........

**கலந்தர்!.** அவங்க நேரடியா எங்களோட பேசிறத்தால தான் உண்ம விளங்குது...

**கந்தர்!.** உங்கட அரசியல் தலைவர்களோட கதைச்சு ஒரு பலனயும் காணல்லயே......

**கலந்தா!.** இஞ்ச வயல் செய்யிற நாங்க.... யாபாரம் செய்யிற நாங்க கூடிப்பழகிற நாங்க.....அப்படி இருக்கிற அரசியல் வாதிகளோட கதைக்கிறத்தில என்ன பிரயோசனம்?......

**கந்தர்!.** சரியா சென்னா மச்சான் இது அவங்களுக்கு விளங்கினா சரிதான்...

**கலந்தர்!.** அவங்கட கத நமக்கு வேணாம் நாம் ஒற்றுமையாக வாழத்தான் போறம்

## போடியார் பொறிவெடி




**அப்ப கோயிலில மணி ஆட்ட உடப் போறாங்க போல.....**

# தானைத் தலைவனின் ....

வெடி மருந்துப் படகு ஒரு கிலோ மீற்றருக்கு முப்பது (30) கடல் மைல் வேகத்தில் சென்று கொண்டிருக்கின்றது. கப்டன் ஜெயந்தன் கப்டன் சிதம்பரம் எதிரியின் கப்பலை நெருங்கி ஐந்து (05) மைல் தொலைவில் வைத்து கண்டு விடுகின்றான். இவர்களின் பயணம் புலிகளின் ராடரில் இருந்து மறைந்து விடுகின்றது.

பகைவனின் மற்றொரு கப்பலில் இருந்த கடற்படைத் தளபதியின் கண்ணில் கடற் கருவேங்கைகள் வந்தது தென்படவே அதனை உடன் அழிவுக்குள்ளாக இருக்கும் கப்பல் உயரதிகாரிகளுக்கு அறிவிக் கின்றான்.

அப்படி எதுவும் இங்கு தென்படவில்லை எனப் பதிலுரைக்கின்றான். காரணம் என்னவென்று தெரியாதாம். ஆன்ால் அப்படியான எதிர்ப்பினைக் கடலில் காணவில்லையென்றும் கூறியிருக்கின்றான் எதிரி.

கடற் கருவேங்கை களுக்கும், பகைவனின் கப்பலுக்கும் உள்ள இடைத்தூரம் "ஒருமைல்" நாங்கள் இலக்கைக் கண்டு விட்டோம் நீங்கள் சொன்ன மாதிரிச் செய்கின்றோம்" என்று சிதம்பரத்தின் கரத்தில் இருந்த (வோக்கி) தொலைத் தொடர்புக் கருவி உறுமியது. கப்டன் ஜெயந்தன் செலுத்திச் செல்லும் வெடி மருந்துப் படகின் வேகமும் மிக வேகமாகவே இருந்தது.

"தாமதமின்றி வேகமாகச் செல்லவும் என்கிறார் புலிகளின் மூத்த தளபதிகளின் ஒருவரான சொர்ணம் அவர்கள். தானைத் தலைவன் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் ஏனைய தளபதிகளோடும்உண்டு, உரையாடி இன்பத்துன்பங்களைப் பகிர்ந்து கொண்டிருக்கையில் தான் எங்கள் தேசியத் தலைவர் அவர்கட்கு ஜெயந்தன் மீன்பாடும் தேன் நாடீன்ற முறக்கொட்டான்சேனையைச் சேர்ந்தவர் என்று தெரிவித்தனர்.

தன் அருகில் கப்டன் ஜெயந்தனைக் கட்டியணைத்துக் கொண்டார் தேசியத் தலைவர் அவர்கள். அக்காட்சி ஏனைய தானைத்தளபதிகளின் விழிகளையும் சற்றுக் கசியச் செய்தது. மண்ணுக்காய் பொடியாகிப் போகின்றார்கள் இவர்கள். என்பதை அறிந்து தான்..... அது...

தாயைத் தந்தையை நினைத்திருப்பார்களா? எப்படியோ இருக்கட்டும்! ஆனால் அனைத்திற்கும் மேலாக அன்புத் தலைவனை, தளபதிகளை, அருமைத் தோழர்களைத்தான் நினைத்திருப்பார்கள். "நான் போகின்றேன் என்ற கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரத்தோடு சக்கோட்டையில் இருந்து 1991 வைகாசி 03ம் திகதி இரவு 12.00 மணிக்குப் புறப்பட்ட இவர்களை நடு இரவு 13.30 மணி வரையும் புலிகளின் ராடர் கருவி காட்டாவிட்டாலும் கொம்பாஸ்சின் துணை கொண்டு பகைவனின் கப்பலைத்தேடிக்கண்டு கொண்டனர்.

நாங்கள் இலக்கைக் கண்டு விட்டோம்" என்றனர். வேகமாகச் செய்யவும் என்ற தானைத் தளபதிகளின் குரல்கள் தொலைத் தொடர்புக் கருவி மூலம் அவர்களை எட்டமுன் "கடலிலே காவியம் படைப்போம் என்ற ஒலியோடு ஒளியும் வானையும் கடலையும் ஏன்? மண்ணையும் அதிரவைத்தது அவர்களின் நாவில் இருந்து எழுந்த அந்தத் தாரகை மந்திரம் தான்.

கடாபி, தேவன், சங்கர், ஆகியோர்களின் விசைப் படகு கடலில் வெளிச்சம் தெரிந்த திசையை நோக்கி வேகமாக விரை கின்றன. தளபதி சொர்ணம், தளபதி கருணா அம்மான் ஆகியோர்களின் வோக்கிகளும் தலைவனின் ஆணைப்படி ஒலிக்கின்றன. இடி யோடு வெளிச்சம் தெரிய கடலில் கால் மைல் தொலைவில் நின்ற எடித்தாராவின் ரோந்துப் படகும் உடன் வந்து கடற் புலிகளின் மூன்று படகுகளுடன் கடற் சண்டை பிடிக்கப் பகைவனை நெருங்க முடியாது பின் வாங்கி விடுகின்றார்கள் கடற்புலிகள்.

வட பகுதியின் ராஜித் கொமாண்டர் காயப்பட இவருக்கு அடுத்தபடியாக இருந்த தளபதியோடு மொத்தம் இருபது (20) கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர். பகைவனின் பி.714 அபிதா கடற்கலம் பாரிய சேதத்திற்கு உள்ளானது. எதிரிகள் திருத்தவேலை செய்து மறுநாள் 05.05.1991 அன்று பி.பகல் 14.00 மணிபோல் அதனை வேறு ஒரு கப்பலின் துணையோடு இழுத்துக் கொண்டு போனார்கள்.

கப்டன் ஜெயந்தன் கப்டன் சிதம்பரத்தினால் வெடியான தீப்பிளம்பினைக் கண்டு கங்கேசன்துறையில் தரித்து நின்ற எடித்தாரா... ஓடியதாம்... "தன்னையும் ஏதோ ஒன்று துரத்துவதைப் போலிருந்ததாம்" எனப் பதில் கிடைத்ததாம். "விடுதலைப்புலிகளின் கடற் பயணத்தைத் தடுக்கத்தான் எதிரி கப்பலில் நின்றவன் கப்டன் ஜெயந்தன் கப்டன் சிதம்பரத்தின் அடியோடு ஓரிடம் என்று நிற்காது அங்கு மிங்கும் ஓடித் திரியத் தொடங்கினான். ஆனால் கடற்புலிகளின் வேகம். விவேகம் தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

தானைத் தலைவர் வளர்த்தெடுத்த அந்தக் கடற்கரிய வேங்கைகள் வெடியானார்கள். தமிழீழக் கடற் பரப்பில் பொடியானார்கள். 1991.05.05ம் திகதி வட தமிழீழ மக்களினக் விழிகளும் எங்கள் தலைவன் பிரபாகரனின் விழிகளும் கப்டன் ஜெயந்தன் கப்டன் சிதம்பரத்தின் தோழர்களின் விழிகளும் நீரைச் சொரிந்தன..!

கடல் மீது படகேறி இவன்
தாவினான் - கடற்
கருவேங்கை எனவாகி
உயிரூதினான்.
திட மான முடிவோடு பகை
மோதினான் - ஜெயந்தனும்
சிதம்பரமும்
திசையெங்கும் அதிர்வோடு
வெடியாகினார்.
இருள் சூழ்ந்த எம் வானம் விடியும்
- தமிழ்
ஈழத்தில் இவர் நாமம் படியும்

கற்றெம் மேனி தழுவும் காலம்
வரை
அலையெம் கரை தளுவி
ஆடும்வரை
ஜெயந்தன் சிதம்பரம் எம்மோடு எம்
நெஞ்சில்
கடற்கரு வேங்கையே!
நின் பாதச் சுவட்டில் -எம் பாதங்கள்
கனவு நனவாகும் வரை
எம் கால்கள் நடக்கும்- பிரிந்தோம்!
மீண்டும் சந்திப்போம்
பல வீனமான எமது மக்களின்
மிகவும் பலம் வாய்ந்த
ஆயுதமாகவே கரும்புலிகளை நான்
உருவாக்கினேன்.
கரும்புலிகள் எமது இனத்தின்
தற்காப்புக் கவசங்கள்
எதிரியின் படைப் பலத்தை
மனபலத்தால் உடைத்தெறியும்
நெருப்பு மனிதர்கள்.

# அலையின் பார்வையில்



தமிழ் அலை நாளிதழை ஆர்வமுடன் படிக்கும் கிழக்கு மாகாண மூத்த தளபதி கேணல் கருணா அம்மான்




முதலாவது தமிழ் அலை நாளிதழை வைபவரீதியாக மட்டு அம்பாறை துணை அரசியல் பொறுப்பாளர் கிருஷனிடம் வழங்கி வைக்கும் தமிழ் அலை நிர்வாக முகாமையாளர் பா. அரியநேத்திரன்.



சர்வதேச நிதிநிறுவனங்களின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதிகள் வன்னி சென்று அரசியல்பொறுப்பாளர் சு.ப தமிழ்செல்வனை சந்தித்தபொழுது.




தென்தமிழீழத்திலும் தியாக தீபம் திலீபனின் 16வது ஆண்டு நினைவு கூரும் நிகழ்வுகளின் போது மண்டூரில் பாடசாலை மாணவர்கள் தியாகியின் உருவப்படத்தை தாங்கி, ஊர்வலமாக செல்லும் காட்சி.




பட்டிப்பளையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட முன்பள்ளி பயிற்சி ஆசிரியர் நிலையத்தை திறந்து வைக்க வருகை தந்த அதிதிகள்.




அண்மையில் நித்திபதிப்பகம், தமிழ்அலை அலுலகத்தை பார்வையிட வருகை தந்த மட் குருமன்வெளி சிவசக்தி ம.வி மாணவர்கள், ஆசிரியர்கள்.

## முதலாவது பிறந்த தினவாழ்த்து



அரசடித்தீவு- வடக்கு கொக்கட்டிச்சோலை என்ற முகவரியில் வசிக்கும் கோபாலப்பிள்ளை சற்குணவதி தம்பதிகளின் செல்வ மகன் அனுரதன் தனது முதலாவது பிறந்த நாளை 27/09/2003 ஆந் திகதி சனிக்கிழமை தனது இல்லத்தில் மிக விமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா,அம்மா, அம்மப்பா பொன்னம்பலம், அம்மம்மா கருணாவதி அப்பம்மா அமராவதி, பாட்டன் கனகசபை, பாட்டி தங்கப்பிள்ளை மற்றும் பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அண்ணிமார், அக்காமார், அத்தான்மார், தம்பி மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் எல்லாம் வல்ல ஸ்ரீமுத்து மாரியம்மன் அருள் பெற்று பல்கலைகள் ஓங்கி பதினாறு செல்வங்களோடு நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

**கோபாலப்பிள்ளை அனுரதன்**
**27.09.2003**

# திருமலை இறங்குதுறை புனரமைப்பு!

திருகோணமலை நகர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மகாநாடொன்றில்,ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரனையுடன், கிழக்கு மாகான கரையோர சமூக மேம்பாட்டுத் திட்டத்தினால் புனருத்தாரணம் செய்யப்பட்டு வரும் கொட்பே மீனவர் இறங்குதுறை பெரும் வர்த்தகருக்கே நன்மையளிக்கக் கூடியது. என கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். பெரும் வர்த்தகர்களிடம் உள்ள பல நாட்கள் கடலில் இருந்து



மீன் பிடிக்கும் வள்ளங்கள் 8அல்லது 10நாட்கள் கடலில் இருந்து பெரும் தொகையாக மீன் பிடித்து வருகின்றனர். ஆனால் ஏழை மீன் பிடியாளர்கள் பிளாஸ்டிக்கினாலான வள்ளங்களிலும் ,கண்ணாடி இழையினாலான வள்ளங்களிலும் சென்று அன்றைக்கன்றே குறைவான மீனுடன் திரும்புகின்றனர். இதனால் கொட்பே இறங்கு துறையில் பெரும் வர்த்தகர்களே பலனடைகின்றனர்

இம்மகாநாடு சிறு தொகை மீன் பிடிப்பாளர்களை ஊக்குவிக்குமாறு நடைபெற்றதென கிழக்கு மாகாண கரையோர மேம்பாட்டுத்திட்டப் பணிப்பாளர் ரீ.தவசிலிங்கம் தெரிவித்தார்.

## 50வது நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 09 – 06 – 1966 |  | 07 – 08 – 2003 |

**திருமதி. யோகமலர் (ஆசிரியை)**
**(மட்/வேப்பவட்டவான் அ.த.க. பாடசாலை)**

ஐம்பது நாட்கள் ஆகிடினும்
அதிர்ச்சி இன்னும் அகலவில்லை
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன உன்
அரவணைப்புக்கு நிகராகுமா
தேசத்தில் பூத்த தமிழ் மலரே
பாசத்தால் கண்ணீர் சிந்துகின்றோம்.

இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை நித்தி பதிப்பகத்தில் 27.09-2003 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

F:\computer\27.09.2003.cdr